ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகவூ ஐப்பசிமீ 1உ	இதழ் 91.
Vol. 8.	1933-ம்வூ அக்டோபர்மீ 17உ	No. 91.

ஆநந்த தரிசனம்

"என்கதி இனிக் கதி என் சொல்லாய்? என்னை யாளுடைய கோவே!" என்று தெய்வத்தினிடம் பக்தி வைத்து ஸதா தியானித்துக் கொண்டிருப்பதிலும் சிறந்த காலப்போக்கு வேறொன்றில்லை பக்தியே பிரதானம். பக்தியால் ஸர்வ மங்களங்களும் உண்டாகுமென்பது உண்மை. ஆயினும், அவைகளை அடையவேண்டுமென்ற விருப்பமின்றியே பகவானைப் பஜிப்பதுதான் விசேஷம். இதற்கு அநேக உதாரணங்கள் கொடுக்கலாம். அவற்றைக் கூறுமுன் பராபரத்தை ஒரு முறை சிந்தித்துப் போற்றுவோம்.

ஃ

"பெற்ற மக்கள் பெண்டி ரென்றிவர் பின்னுதவாது அறிந்தேன்" என்றவாறு, மனைவி மக்களிடம் ஏதாவது பிற்கால நன்மையைப் பெறும் பொருட்டாக அவர்களுக்கு எவரும் உழைப்பதில்லை. அவர்களுக்கு முன்பே தான் போய்விடப்போவதாக ஒவ்வொருவனும் அறிந்துகொண்டே, தன் கடமைக்காகவே அவர்களைப் போஷிக்கிறான். இவ்விதமே, குழந்தை பின்னால் உபகாரம் செய்யுமென்ற கருத்தோடு தாய் பாலூட்டுவதில்லை. குழந்தையைச் சீராட்டி வளர்ப்பதே பெரிய இன்பமென்றெண்ணி வளர்க்கிற தாயே சிறந்தவள். அதனாலேதான் தாயின் அன்புக்கு ஸமமான அன்புவேறில்லையென்று சொல்லுகிறார்கள். "கோடி துக்கம் குழந்தையின் முகத்தைப் பார்த்தால் ஓடிப்போம்" என்பர். கோடிக்கணக்கான திரவியத்தை எதிரில் கொட்டி வைத்தாலும், ஒரு குழந்தைக்கு ஈடாகாது. ஒரு குழந்தையாற் கிடைக்கக் கூடிய ஆநந்தம் கோடி திரவியத்தாலும் கிடைக்காது. இவ்விதமே உத்தமியான ஸ்திரீ தன் பிராணபதியே பொக்கிஷம், தன் நாதனே கடவுள் என்று

நினைத்துப் போற்றுகிருள். நாளாயனி புழுப் புழுவாய் உதிர்ந்த சரீரத்தையும் ரோகத்தையும் விருத்தாப்பியத்தையும் அடைந்த குஷ்ட நோயாளியான தன் புருஷனைக் கூடையில் வைத்துத் தூக்கிக்கொண்டு போனுள். அவனுடைய இஷ்டத்தை யெல்லாம் நிறைவேற்றினுள். தனக்கு அவனுல் சுகம் கிடைக்கவில்லையே யென்று இஞ்சிற்றும் கிலேசப்படவில்லே. புருஷன் உயிரோடிருந்தாற் போதும், அவனுக்குத் தான் ஊழியம் செய்தாற் போதும், அவனை விட்டுப் பிரியாதிருந்தாற் போதும், அதுவே தனக்கு மோக்ஷ சாம்பிராஜ்யம் என்று நிச்சயித்து நடந்ததால் மகா பதிவிரதையானுள். சாபானுக்கிரக ஸாமர்த்தியம் பெற்ருள். இவ்வித பதி பக்தியன்ரோ ஸர்வ சிலாக்யம்! ஆகவே, பக்தியானது யாரிடம் வைக்கப்பட்டபோதிலும், யாதொரு லாபத்தையும் கருதாமல் வைக்கப்படவேண்டும். ஒருவன் தெய்வ பக்தனுக விளங்குகிருன். என்! அவனுக்குத் தெய்வத்தினிடமுள்ள பக்தி அளவற்ற ஸந்தோஷத்தை யளிக்கிறது. வம்பு பேசுகிறவனுக்கு வேறுலாப மில்லாவிட்டாலும் வம்புப் பேச்சே ஆநந்தமாயிருப்பதுபோல், தெய்வ பக்தனுக்குத் தெய்வ பக்தியே ஆநந்தம்; பதிவிரதைக்குப் பதி பக்தியே ஆநந்தம்; தாய்க்குத் தன் குழந்தையே ஆநந்தம். ஆதலின், எந்த லாபத்தையும் கோராமல் நாம் ஈசுவரனிடம் பக்தி செலுத்தவேண்டுமென்றும், அவ்வித பக்தியே பேராநந்த மென்றும் உணர்ந்து தெளிவோமாக.

அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ,
ஒப்புடைய மாதரும் நீ, ஒண்பொருளும் நீ, ஒரு குலமும் சுற்றமும் ஒருரும் நீ,
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ, துணையாயென் னெஞ்சந் துறப் [பிப்பாய் நீ,
இப்பொன் நீ, இம்மணி நீ, இம்முத்து நீ, இறைவன் நீ, ஏறூர்ந்த செல்வன் [நீயே!

ஃ

"எந்நிறத்தும் ஒத்து நின்று உயர்ந்துயர்ந்த பெற்றியோய்" என்று பரமனைப் போற்றுகின்றனர். சாந்தமும், நிர்மல மாக்ஷியும், தயாரஸ ஸஹித க்ஷமையும், அன்பிற் கிளைத்தெழுந்த அருட்பிரகாசமும் பகவானைத் தியானிப்பவர்கட்கே உண்டாகும். அன்னேரே ஸர்வ ஜீவ பாந்தவ்யராய் விளங்குவர். அச்சாணியில்லா விட்டால் பெரிய தேர் ஓடாது. அதுபோல் குடும்ப பாரத்தைவகிக்கும் புருஷனில்லாவிட்டால் ஸம்ஸாரம் நிர்மூலமாகும். உலகத்தில் ஸூர்ய சந்திரர்களும், மனிதர் மிருகம் முதலியவைகளும் கடவுளின் அருளில்லாவிட்டால் ஒரு நிமிஷம் நிலைத்திருக்க முடியுமா? ஆகவே, அவரைப் பஜியாமல் மறப்பது எத்தனை பாபம்?

குற்றம் நீ, குணங்கள் நீ, கூடலால வாயிலாய்!
சுற்றம் நீ, பிரானும் நீ, தொடர்ந்திலங்கு ஜோதி நீ!
கற்றநூற் கருத்தும் நீ, அருத்தமின்ப மென்றிவை
முற்று நீ, புகழ்ந்து முன்னுரைப்பதென்? முகம்மனே!

ஃ

ரோகியாயிருப்பதிலும் துரோகியாயிருப்பது மேலென்று தம்மைக் காப்பாற்றியவர் மீதே இல்லாத தோஷங்களை ஏற்படுத்தி இன்னல் விளைப்பது சில துராத்மாக்களின் இயல்பு.

"அவரவர் விதிவழி யடைய நின்றனரே" என்றபடி, ஒவ்வொரு தேசத்திலும் மனிதர்கள் ஸ்வர்க்கம், நரகம் என்ற வியவகாரத்தை நம்புவதால், தாங்கள் செய்யவேண்டிய கருமங்களையும், அனுஷ்டிக்கவேண்டிய கொள்கைகளையும் பற்றிக் கிரந்தங்கள் எழுதித் தங்கள் மதம் இன்னதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அம்மதக் கோட்பாடுகள் பகவானால் உண்டாயிற்றென்று சிலரும், மகான்களாகிய முன்னோர்களால் எழுதப்பட்டவை யென்று சிலரும், இன்ன காலத்தில் உண்டாயினவென்று சொல்லமுடியாதென்று சிலரும், அனாதியென்று சிலரும் கூறுகின்றனர். காலதேச வர்த்தமானங்களுக் கேற்றவாறும், ஆங்காங்கே அவ்வக் காலத்திலிருந்த பிரஜைகளின் புத்தி நிலைமைக்குத் தக்கவாறும் மேதாவிகள் தோன்றி மதங்களையும் மதக் கோட்பாடுகளையும் விளக்கி வந்தனர். ஆதலின், அவர்களை மதாசாரியர்களென்று இக்காலத்தார் கூறுகிறார்கள். எல்லா மதங்களின் தத்துவங்களையும் ஆராய்ந்து பார்த்தவர்களுக்கே உயர்வு தாழ்வு வித்தியாஸம் தெரியுமேயன்றி ஏனையோர்க்குத் தெரியா. தெரிந்ததாகப் பாவிப்பதும், அதனால் புற மதங்களை இகழ்ந்து பேசும் ஸ்வதந்திரம் கிடைத்து விட்டதென்றெண்ணுவதும், மதிக்குறைவுள்ளவர்களின் இயற்கை. ஒவ்வொரு மதத்திலும் ஒரு உண்மை யிருக்கிறது. இதைக் கவனித்தால் சில விஷயங்களில் எல்லா மதக்காரர்களும் ஒரேவித கொள்கையைக் கொண்டிருக்கிறார்களென்பது விளங்கும்.

அவரவர் தமதமது அறிவறி வகைவகை,
அவரவர் இறையவர் என அடியடைவர்கள்,
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்,
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

ஃ

"அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றபடி, பாச பந்தங்களை விலக்கி முக்தி வழியுணர்த்தும் வேதமே நமக்குப் பிரமாணம். வேதாந்தமே நமது மதத்தை ஸ்தாபிக்கும் கிரந்தம். புற மதஸ்தர்கள் தங்களுடைய மதத்திலுள்ள ஊழல்களைப் பிறருக்குத் தெரிய வொட்டாமல் மறைத்து நம்முடைய மதத்தில் ஊழல்கள்போல் தோன்றும் சில விஷயங்களைப் புத்தி ஹீனர்களிடமும், சிறுவர்களிடமும், ஸ்திரீகளிடமும் சொல்லி அதை விட்டுத் தங்களுடைய மதத்தில் சேரும்படி கூறுகின்றனர். நமது தோட்டத்தில் அந்யர்கள் பிரவேசிக்காதபடி எல்லா விடங்களிலும் சுவரெழுப்பி நிலை கதவு, தாழ்ப்பாள், சங்கிலி பூட்டு முதலியன போடுவதுபோல், நாம் அருமையாய் ஈன்றெடுத்த பிள்ளை பெண்களை அந்ய மதஸ்தர்கள் வசம் விட்டு ஏங்கி நில்லாதபடி அவர்கட்கு ஹிந்து மத தத்துவங்களை அடிக்கடி உபதேசிக்கவேண்டும். புராணமும் இதிகாஸமும் மாத்திரம் மதக் கிரந்தங்களாகா. புராண இதிகாஸங்களிலுள்ள சிறுசிறு கதைகள் ஒவ்வொரு உண்மையையும் நல்வழியையும் உபதேசிக்க ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின் தாற்பரியத்தை உள்ளபடி உணராமல் ஊழல் ஊழல் என்று கூவிப் புறமதப் படுகுழியில் விழுகின்றனர். இன்னோரின் அறியாமை என்னே!

எந்தக் காரியமும் பிரயத்தனமின்றிக் கைகூடாது. பிரயத்தனங்களில் முக்கியமானது பகவத்தியானம்.

நாடீர் நாள்தோறும், வாடாமலர் கொண்டு,
பாடீர் அவன் நாமம், வீடே பெறலாமே.

ஃ

"உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்" என்பதையும், கடவுள் ஒருவரே என்பதையும் எல்லா மதஸ்தினர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆகவே, அவரை ஸத்கர்மத்தினாலோ, உபாஸனையினாலோ, ஆராதிப்போர் ஞானத்தை யடைந்து நித்ய சுகத்தை எய்துவர். நித்ய சுகமென்பது ஸதா ஆநந்தமயமா யிருப்பது. இதுதானோ முக்தி என்று சிலர் கேள்வி கேட்பர். ஆமென்றே கூறுகிறோம். சர்க்கரை நெய் முதலியவற்றால் செய்த பக்ஷணம் தின்னும்போது சுகமுண்டாகிறது. இது நித்யமல்ல. பக்ஷணம் தின்றவுடன் இந்த சுகம் அடங்கிப்போகிறது. இப்படியின்றி எப்போதும் அந்த சுகம் நம்மை விட்டகலாதிருப்பின், நித்யாநந்தஸ்வரூபி யென்று நம்மை நாம் சொல்லிக்கொள்ளத் தடையென்ன? இதுதான் மோக்ஷத்தின் லக்ஷணம். இதை அடைவதற்குரிய அற்புத மார்க்கம் ஹிந்து மதத்தி லிருக்கிறதென்பதை வேதாந்த விசாரம் செய்வோர் விசதமாயறிவர்.

1. மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக்கொள்ளும் இவ்
வையந்தன்னொடும் கூடுவதில்லை யான்.

2. உண்டியே உடையே உகந்தோடும் இம்
மண்டலத்தோடும் கூடுவதில்லை யான்.

ஃ

"அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதி வகையே." எவரெவர் எந்தெந்த மூர்த்தியை எவ்வெவ்வாறு பரப்பிரம்ஸ்வரூபமாய்ப் பாவித்து வணங்குகின்றாரோ. அந்தந்த வகையில் அவரவர்களுக்கு நற்கதி கிடைக்கும்படியாகப் பகவான் அருள் செய்கின்றார். பிரயாகையில் ஒரு பையன் ராதாஸ்வாமி என்று ஸதா சொல்லிக்கொண்டிருந்தான். இவன் உச்சரிக்கும் ஸ்வாமியின் நாமமும், இவனது தெய்வ பக்தியும், இவனை எற்கெனவே பிடித்திருந்த ஒரு ஸோல்ஜர்ப்பிசாசை இம்சைப்படுத்தின. ஆதலின், அப்பிசாசு இவனுக்கெதிரில் நின்று நீ ராதாஸ்வாமி உச்சரணையை விடாவிட்டால் உன்னை இரண்டு வாரங்களில் குத்திக் கொன்றுபோடுவேன் என்றது. வாலிபன் அதை லக்ஷியமே செய்யவில்லை. 14-வது நாளில் மேற்கண்ட பிசாசு பிரத்யக்ஷமாகிப் பையனை அடிக்க வந்தது. உடனே, அவன் 'ராதாஸ்வாமி' என்றான். பிசாசு பயந்து விலகிப்போயிற்று. அன்று முதல் அவனுக்கு எத்தகைய உபத்திரவமும் உண்டாகவில்லை. இது உண்மையாய் நடந்த விஷயமென்று சில கனவான்கள் "அமிர்த பஸார்"ப் பத்திரிகையில் எழுதி யிருக்கின்றனர். இதனால், பகவந்நாமத்துக்கிருக்கும் மகிமையை ஒருவாறு ஊகித்தறியலாம்.

முத்தே! மணிமாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே! உன்னை எங்ஙனம் நான் விடுகேனே!

ஃ

ஆடைப் பைத்தியம், நகைப்பைத்தியம் இவ்விரண்டும் கொடிய மனோவியாதிகள்.

"இடர் ஆர் படுவோர் எழ நெஞ்சே!" என்று ஸம்சாரத் தொல்லையை விட்டு விலகி விழித்துக்கொண்ட வால்மீகி முனிவரின் வரலாறு எவருக்கும் நற்கதி காட்டவல்லது. வால்மீகர் முற்காலத்தில் வேடனுயிருந்து, கிராதத் தொழிலை யனுஸரித்து, வழியிற் சிக்குவோரை அடித்துக்கொன்று அவர்களிட முள்ள பொருள்களைக் கவர்ந்து, அத்திரவியத்தால் தன் குடும்பத்தினரை ரக்ஷித்து வந்தார். ஒரு தினம் நாரதர் எதிரில் தோன்ற, அவரை வான்மீகி வெட்டுதற்கு நெருங்கினுர். நாரதர் சிரித்து, "அடே! இந்த சண்டாளக் கிருத்யம் செய்கிறுயே; இதனுல் உனக்குப் பாபம் ஸம்பவித்து நரகம் கிடைக் குமே" என்ருர். வால்மீகி, "எப்படியானுலு மென்ன? என் குடும்பத்தாரை நான் ரக்ஷிக்க வேண்டியதுதானே" என, நாரதர், "அப்படியானுல், உனக் குக் கிடைக்கும் பாபத்தை அவர்கள் பங்கிட்டுக் கொள்வார்களா?" என்ருர். வால்மீகி "தடையென்ன?" என்ருர். உடனே நாரதர்: "அப்படியானுல், ஒரு காரியம் செய்; உன் வீட்டுக்குப் போய் உன்னைவிடப் பலவான் வந் திருப்பதாயும், அவனைக் கொல்ல எனக்குத் துணையாக வாருங்களென்று உன் குடும்பத்தாரைக் கூட்டிக்கொண்டு வா; நான் இந்த இடத்தைவிட்டு அசைய வில்லை" யென்று கூறினுர். வால்மீகர் போய் தன் குடும்பத்தாரை அழைக் கவே, அவர்கள், "அடே போடா போ; அது உன் கடமை; அதை நாங்கள் செய்ய வரமாட்டோம்; அவனவன் கருமத்தை அவனவனே செய்யவேண்டும்; உன் கருமத்திற்கேற்ற பலனை நீ அடையவேண்டும்; நாங்கள் வரமாட் டோம்" என்றனர். வான்மீகிக்கு நற்புத்தி உதயமாகி, ஓட்டமா யோடி வந்து, "நாரத மகரிஷியே! என்னைக் காப்பாற்றும்" என்று அது முதல் அவருடைய உபதேசத்தால் வைராக்கியத்தை யடைந்து சிரேஷ்டமான முனிபுங்கவரானுர். எதற்கும் பக்குவகாலம் வரவேண்டும். அந்தப் பக்குவ காலம் நெருங்கிவிட்டால், ஏதேனும் ஒரு ஸம்பவத்தின் மூலமாக அவரவ ருக்கு ஞானேதயம் பகவத் கிருபையால் தோன்றி ஸகல மங்களங்களையும் தரும்.

இருபக்கமும் பிடிவாதமானுல்?

ஒவ்வொருவருமே பிடிவாதக்காரராக இருந்தால், அவ ரவர்களின் பிடிவாதக் குணம் மற்றவர்களிடம் பலியாமற் போகலாம். இருவரும் சமாதானமாய் ஒரு முடிவுக்கு வர முடியாமலே ஆங்காரப்படும்படி நேரும். ராமன் பலமுறை விட்டுக்கொடுத்து இணங்கிப் போனவனென்று எண்ணிக் கொண்டு, அவனிடம் கிருஷ்ணன் தனது பிடிவாதகுணத் தைக் காண்பிக்கிருன். ராமனே முன்புவிட்டுக்கொடுத்தது போலில்லாமல் இந்த சமயம் தானும் பிடிவாத குணத்தையே கொள்ளுகிருன். அப்போது கிருஷ்ணன் ஏமாறிப்போய்த் தன் பிடிவாதத்தைவிட்டுப் பணியவேண்டி வந்து விடுகிறது.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுகஞு ஐப்பசிமீ 1வ

தீபாவளி—ஒரு வெற்றியின் ஞாபகம்.

ஆரவாரித்து நின்ற நரகாசுரனது அதர்ம வாழ்வின் வீழ்ச்சியையும், அவனைப் போர்முகத்தில் அடக்கிய ஸ்ரீ கண்ணனது தர்ம ஸ்தாபன வெற்றியின் சூழ்ச்சியையும் தீபாவளி நமக்கு ஞாபகமூட்டுவிக்கின்றது. வெற்றியின் சூழ்ச்சிக்கு வெற்றியின் இரகசியம் என்று பொருள். எந்த திவ்யமான நாள் ஸ்ரீ கிருஷ்ணபிரானுக்கு வெற்றியைக் கொடுத்ததோ அந்த நாள்தான் தீபாவளி நாள். தனது அதர்மச் செயல்கள் கடைசியில் தலைகவிழ்ந்து சாய்ந்துவிட்டதை யுணர்ந்த நரகாசுரன், தனது கதையையும் தோல்வியையும் உலகினர் அறிந்து நல்வழியைப் பற்றுமாறு செய்வதற்கே, தனது வீழ்ச்சித்தினத்தை ஒரு பண்டிகையாகக் கொண்டாடுமாறு ஸ்ரீ கண்ணனை வேண்டிக்கொண்டதாகத் தீபாவளியின் வரலாறு தெரிவிக்கின்றது.

ஃ

ஒவ்வொரு வெற்றிக்கும் ஒவ்வொரு இரகசியமுண்டு. அந்த இரகசியமே கடைசியில் வெற்றிக்குப் பிரதான காரணமாய் அமைகின்றது. தான் தொட்டுக்கொண்ட ஒரு காரியத்தை எவ்விதம் முடிப்பதெனக் கருதி, அதற்கு வேண்டிய முயற்சியைக் கைக்கொள்ளுதலே வெற்றியின் சூழ்ச்சியாகும்; அதாவது, வெற்றியடைவதற்கு உபாயமாகும். இதிலே, தான் செய்யவிருந்த ஏற்பாடுகளின் முறை கோணியிருந்தால் முடிவும் கோணலாகிவிடும். தனது முறைகள் நேராகவும் சரியாகவும் இருந்தால் முடிவும் நேராகவும் காரியசித்தி தருவதாகவும் இருக்கும். முடிவுக்கு வந்த ஒன்றை வர்ணித்து உலகினருக்குத் தெரிவிப்பது கவிகளின் வேலை. ஒரு நல்ல முடிவுக்கு வருவதற்கான முறையைத் தெரிந்தெடுத்துக் காரியம் செய்வது வீரர்களின் வேலை. அவ்விதமான வீரர்களின் திறத்தைத் தீபாவளி நாள் நமக்கு நினைப்பூட்டுகின்றது. ஸ்ரீ கண்ணன் நரகாசுரனின்மீது அன்று கொண்ட வெற்றியின் முடிவையே, இன்று தீபாவளி நாளில் நாம் சிறப்பாகப் பாராட்டிப் போற்றுகின்றோம்.

ஃ

பால் வேண்டி, பசுவின் கொம்பின் பக்கம் ஒருவன் நின்று கொண்டால், பாலுக்குப் பதிலாக முட்டுதான் கிடைக்கும். அதே போல, வெற்றி பெறுதற்கு நேரான ஏற்றமுறையை நாம் கைக் கொண்டாலுங்கூட, அந்த முறையைக் கையாளுவதற்கான வகை களைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். ஸ்ரீ கிருஷ் ணன் தனியாக மட்டுமே சென்று நரகாசுரனை வெற்றிகொள்ள வில்லை. தனது தேவியான சத்தியபாமாவின் துணையையும் சேர்த்துக் கொண்டே போர்செய்ய முற்பட்டார். ஸ்திரீ சக்தியானது ஆடவ னின் திறத்தைப்போலவே பூரண வளர்ச்சிகொண்டு விளங்கி, அந்த ஆடவனின் காரியங்களுக்குப் பக்கத்துத் துணையாக நிற்குமாயின், வெற்றி நிச்சயமென்பதைத் தீபாவளி நாள் நமக்கு எடுத்துக்காட்டி உபதேசம் செய்கின்றது. வெற்றிக்கு வகையை ஆராய்வதில், முத லில் பெறத்தக்கது தனது தர்ம பத்தினியின் துணையைக் கைக் கொள்ளுதலே.

ஃ

நமது வாழ்வின் முடிவாகிய நோக்கம் விடுதலை என்பார்கள். விடுதலை என்பதற்கு 'எஜமானத்துவம்' என்பது ஒரு பொருள். விடு தலை பெற்றவனிடம் எவனும் தனது அதிகாரத்தைச் செலுத்தமுடி யாது. நாம் எதிலே விடுதலை பெறவேண்டும்? நம்மைச் சூழ்ந்து நிற் கும் துர்க்குண வெறிகளினின்றும், சுயநல மொன்றையே சதா சிந் தித்துக் கிடைக்கும் பைத்தியத்தன்மைகளினின்றும், வஞ்சனை, மோசம், கோபம், காமம், பொறுமை, அசத்திய எண்ணம் ஆகிய இவற்றினின்றும் விடுதலை கொள்ளவேண்டும். ஸ்ரீ கண்ணனின் திரு வருளால் நரகாசுரன் இந்தத் தீய சேர்க்கைகளினின்றும் விடுதலை பெற்றுச் சிறந்த ஞானியாகிவிட்டான். அவன் அவ்விதம் ஞான மடைந்ததிலிருந்தேதான் தன்னைப்போன்று மற்றவர்களும் தீய கரு மங்களிலிருந்தும் விலகித் தெளிவு பெறவேண்டுமென்றே தீபாவளி நாளை அதற்கு ஏற்ற தினமாகவும், தெளிவுபெறுந் தினமாகவும் ஏற் படுத்தும்படி வேண்டினன். ஸ்ரீ கண்ணனும் அவ்விதமே செய்து, புதிய ஞானத்தையடைந்த நரகாசுரனுக்கு எவருக்கும் கிட்டாத பரமபதத்தையும் கொடுத்தருளினர். ஆதலின், தீபாவளி தினத் தன்று நரகாசுரனைப் போலவே, நாமும் மனத்து அழுக்கினின்றும் விடுதலை கொண்டு, ஞானமடைந்து பரிசுத்தராகக் கடவோம்.

ஃ

விடுதலை என்பதற்கு அளவிடமுடியாத சக்தி என்று மற்றொரு பொருள். சக்தி படைத்தவன்தான் வெற்றியை நினைக்க முடியும்; வெற்றியைக் கொண்டுவரவும் முடியும். ஒரே மூச்சில் ஒரு பெரிய

கிளிக்குக்கூட ஈசுவர நாமத்தைச் சொல்லும்படிக் கற்றுக்கொடுத்து விட லாம். அதனால் கிளி ஈசுவர பக்தனாகி விடுமா?

தேரை இழுப்பது எவ்வளவு ஆச்சரியம்! தன்னால் தேரை இழுத்து நிலைக்குக் கொண்டுவர முடியுமென்ற பிடிவாதத்துடன் ஒவ்வொரு வனும் துணிந்து கஷ்டத்தை அனுபவித்து வெற்றி பெறுவதுதான் மனிதத்தனம். தீபாவளிநாள் நமது வீர வாழ்வின் வெற்றிக்காகத் தொடங்கும் காரியங்களின் முதல்நாளாக, ஆரம்பதினமாக, இருக் கட்டும்.

ஃ

தருமநெறி தவறாத சத்திய வாழ்விலுள்ள பெருமையையும், அதன் சக்தியையும் உணர்ந்தவர்கள் எவ்வளவு சோதனைகள் நேரி னும் சோர்வடையமாட்டார்கள். சோர்வு என்றால் சந்தேகம் என்று அருத்தம். நாம் உத்தமனாய் நடந்து என்ன லாபம் கண்டோம் என்று சந்தேகம் கொள்ளலாமோ? உத்தமனாக நடப்பதிலேயே ஒரு உற்சாக சக்தி நமக்கு உண்டாகிறதென்பதை நாம் உணரவேண்டும். பக்தர்களுக்கும், வீரர்களுக்கும் தங்களின் உறுதியிலே சந்தேகம் தோன்றுமாயின், அது ஒரு பெரிய வீழ்ச்சியாகிவிடும். சந்தேகம் எப் பொழுது பிறந்ததோ, உடனே வாதும் வம்பும் பெருகும். உத்தம நன்னெறிகளும் ஊக்கமும் நம்மைவிட்டு விலகிச் சாகும். ஆகவே, சந் தேகப்பேயை ஓட்டிவிட்டு, உத்தம சத்திய வழிகளிலேயே நடந்து கொண்டு போனாலன்றி, வழியின் முடிவைப் பார்க்க இயலாது. நடு வழியில் நாம் செல்லும் பாதையைப்பற்றிச் சந்தேகம் கொண்டால், முடிவு இடமாகிய நாம் நினைத்த ஊர் போய்ச் சேர முடியுமா? நல்ல காரியங்களைச் செய்வதிலே, அதன் பலனைப்பற்றி நமக்குக் கவலை வேண்டாம். அந்த நல்ல காரியங்களிலே நமக்குச் சந்தேகம் தோன் றவே கூடாதென்று தீபாவளி தினத்திலே நாம் உறுதிமனது படைத்து ஒரு வீர சபதம் செய்துகொள்வது நன்றாகும்.

ஃ

தற்காலத்திலே, நமக்குள்ள தடுமாற்றங்கள் சொல்லி முடி யாது. ஒருவருடன் மற்றவர் சரியாகவே பேச நம்மில் அநேகருக்குத் தெரியவில்லை. நிலையற்ற தமது உத்தியோக பதவியை நம்பிக்கொண் டும், செல்வ நிலையை சாஸ்வதமென நினைத்துக்கொண்டும், தன்முன் நிற்பவரது கஷ்டத்தை யுணராமல் அகம்பாவத்துடன் பேசுவோர் எத்தனை பேர்? ஒருவனுக்கு ஒரு நன்மையை நியாயமுறையில் செய் யத் தனக்கு அதிகாரமும் சக்தியுமிருந்தும், அதை ஏன் செய்ய என்று நினைப்பவரே அதிகமாவார். இதுமட்டுமா? பெரிய மேதாவி

சாத்தூர் தபாலாபீஸைச் சேர்ந்த புலிக்குத்தி என்ற கிராமத்திற்கு ஒருவர் உடனே தந்திபோல் பாவித்து வருமாறு ஒருகார்டு எழுதினார். மறு தினம் வரவேண்டாமென்று மற்றொரு கார்டு வரைந்தார். இரு கார்டுகளும் ஒன்றாகச்சேர்ந்து ஐந்தாவது தினத்தில் அக்கிராமத்தாருக்குப் போய்ச் சேர்ந்தனவாம்.

களுக்குக்கூடச் சிறிய சங்கதியைப் பலருக்கும் புரியும்படி எடுத்துரைக்கும் ஆற்றலும், பொறுமையும், அன்பும் இருப்பதில்லை. சோர்வில்லாத ஒரே உறுதியுடன் உழைக்கும் சக்தியும் அரிதாயது. பொதுவாக, மனித இயற்கைக்குள்ள கௌரவமே இப்போது கெட்டுவிட்டது. உத்தம வழிகளில் செல்வதே மனித இயற்கை; பாவம் செய்யப் பின்னடைவதே மனித இயற்கை; ஒருவனுக்கு ஆபத்து உண்டானபோது தன்னையும் அறியாமலே ஓடித் துணைக்கு உதவுவதே மனித இயற்கை; அதர்மத்தை எதிர்ப்பதே மனித இயற்கை; அக்கிரமத்தைக் கண்டிப்பதே மனித இயற்கை. இப்பொழுதோ எல்லாம் எதிரிடையாகக் காணப்படுகின்றது. "மனித இயற்கை" என்று சொல்லி, எல்லாவிதமான தவறுதல்களுக்கும் ஜனங்கள் சமாதானம் கூறத்தொடங்கிவிட்டனர். ஏன் சோம்பலுடன் இருக்கிறாய்?—அவ்விதம் இருப்பது மனித இயற்கை! ஏன் கோபிக்கின்றாய்?—அது மனித இயற்கை! ஏன் சண்டையிடுகிறாய்?—அது மனித இயற்கை! ஏன் பரஸ்திரீயை நோக்குகிறாய்?—அது மனித இயற்கை! ஏன் முட்டாளாய் முரட்டுத்தனமாய்ப் பேசுகிறாய்?—அது மனித இயற்கை! ஏன் இப்படிப் பொறுமைப்படுகிறாய்?—அது மனித இயற்கை! நீ எப்போதும் சுயநலமாகவே இருக்கிறாயே?—அது மனித இயற்கை! ஏன் தீவிர முயற்சியின்றி மந்தமாய்க் கிடக்கிறாய்?—அது மனித இயற்கை! ஏன் உன் தீய எண்ணங்களுக்கு அடிமையாயிருக்கிறாய்?—அது மனித இயற்கை! ஆ! மனித இயற்கையானது கோணலாய்ப்போன வழியைப் பாருங்கள். அதிகாலையிருட்டில் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்து, புதிய ஆடைகளைத் தரித்து, பலகார பக்ஷணங்களைப் பகவானுக்கு ஸமர்ப்பித்து, உள்ளுக்குள்ளும் வெளியிலும் பரிசுத்தமாய் விளங்கவேண்டிய தீபாவளி தினத்தில், மாமிச ஆகார ஆபாஸமும், மதுபானச்சேர்க்கையும் கொள்ளுதல் சரியாமாவென்று கேட்கப் புகின், அது மனித இயற்கை யென்றும், வழக்கத்தில் வந்து விட்டதென்றும் வெகு சாதாரணமாகப் பதில் கூறிவிடுகிறார்கள். என்னே இன்னோரின் அறியாமை இருந்தவாறு!

ஃ

மனித இயற்கை என்பது ஒரு ஆச்சரியமான சக்தி. பொன்னை உருக்கி வட்டத்தில் விட்டால், சக்கரமாகத் தோன்றும்; நீளத்தில் விட்டால், நேராகக் குச்சிபோல் விரைத்து நிற்கும்; அழகமைந்த அமைப்பில் விட்டால், அலங்காரமுள்ள சிங்காரமான ஆபரணமாக விளங்கும்; மனித இயற்கையும் பொன்னைப்போன்று உபயோகிக்கிற

எவன் சண்டைக்கு வரக்கூடியவனோ, அவனிடம் எப்பொழுதுமே ஜாக்கிரதையாக இருந்துகொண்டு, அவனால் ஆகவேண்டிய காரியத்துக்கு மட்டும் அதிவிநயமாய் வேண்டிக்கொண்டு நடப்பதினால், எந்த மனஸ்தாபமும் நேராமல் தப்பிக்கலாம்.

விதத்துக்குத் தக்கபடி மாறக்கூடியதே. மனித இயற்கையை ஜலத்திற்கு சமமாகவும் சொல்லலாம். நீரை உப்புடன் கலந்தால் உப்புநீர். செம்மண்ணில் சேர்த்தால் செந்நீர் ஆகும். சர்க்கரையுடன் கலந்தால் தித்திக்கும். நீருக்குத் தனிருசி கிடையாததுபோலவே மனித இயற்கைக்கும் தனி இயற்கை—தனி சுபாவம்—இல்லை. மனித இயற்கை கெட்ட குணத்துடனும் சேரும்; நற்குணத்துடனும் கூடிக்கொள்ளும். ஆயினும், பகுத்தறிவமைந்த மனுஷ்யன், தனது மனித இயற்கையை பாவதோஷங்கட்கு அஞ்சியவனாய் நன்னெறியிற் செலுத்தி, தர்ம நியாயமான மார்க்கத்தில் வாழப் பார்ப்பதே சிறப்புடைத்தாகும். இதை மனதிற்கொண்டு தீபாவளி தினத்தன்று மது மாமிசவர்க்கங்களை விலக்கி, மனித இயற்கையை ஜீவகாருணிய வழியில் திருப்பி, அந்தப் புண்ணிய தினத்தைத் தனது பரிசுத்தத்தாலும் உயரிய சிந்தனைகளாலும் பாராட்டிக் கொண்டாடி மேன்மைப்படுத்த வேண்டும். தீபாவளி தினத்திலே நாம் செய்யக்கூடிய காரியங்கள் இரண்டு உண்டு. முதலாவது, மனித இயற்கையை ஜீவகாருணிய உருக்கொண்டதாக்கி நல்வழியிலே திருப்புவதாம். இரண்டாவது, தீபாவளி தினத்தை முன்னாளிலே நம்மவர் அடைந்த வெற்றியின் ஞாபகமாகப் பாராட்டி, நமது வாழ்வின் பரிசுத்தத்திலும், நமது தொழில் முறையிலும், நமது சுவாதீனப் பிரியத்திலும் புதிய வெற்றி கொள்வதற்கு தீபாவளி தினத்தை வீரசபதம் செய்துகொள்ளும் நாளாக ஆக்கிக்கொள்வதாம். இவ்விதம் நாம் உயர்வதற்கும் உய்வதற்கும் தீபாவளி தினத்தை ஒரு மகத்துவமுடைய நாளாகக்கருதிப் பாராட்டிக் கௌரவிக்கவேண்டும். தீபாவளி பண்டிகையை ஏதோ அர்த்தமற்ற வெறும் பண்டிகையென நினைத்துவிடக்கூடாது. ஸர்வலோக சரண்யரான ஸ்ரீ கண்ணன் அமைத்துக்கொடுத்த நாள்தான் தீபாவளி நாள் என்பதை நாம் மறந்துவிடவொண்ணாது. நமது உள்ளத்தில் மறைந்துள்ள சக்தி புதிய ஜீவ ஒளிகொண்டு தீபாவளியின் போது பிரஸன்னமாயிருக்குமாக. தீபாவளி—பழங்காலத்து வெற்றியினது ஞாபக நாளானது போலவே, இந்தக் காலத்திலும்,—இனி நமக்கு உண்டாகக்கூடுமேன்று நாம் நம்புகிற வெற்றிகளின் ஞாபக நாளாகப் பிறகு இருக்கும்படி,—நமது முன்னேற்றத்துக்காகத் தொடங்கவிருக்கும் எல்லாக் காரியங்களையும் தீபாவளி நாளிலிருந்தே ஆரம்பம் செய்து நிகரிலா வெற்றி பெறுவோமாக. எல்லோருக்கும் தீபாவளி மங்களம் சொல்லுகிறோம். தீபாவளியன்று எல்லாப் பிராணிகளும், ஸகல மனிதர்களும் ஆநந்தத்துடன் விளங்குவார்களாக. சுபம்.

எண்ணெய் உள்ளவரையில் தீபம் பிரகாசத்தோடு எரியும். அதுபோல் பணம் இருக்கும் பரியந்தம் யாவரும் சுற்றிச் சூழ்வர். கையிலிருந்த தனம் தீர்ந்த மறுதினம் எண்ணெய் முடிந்த தீபத்தைப்போல் அனைவரும் தொலைந்துபோவர்.

ஹாரியட் மார்த்தினோ.

—செவி கேளாத பிரபல நூலாசிரியை—



உலகப் பிரசித்தி வாய்ந்த பெரியோர்களுக்கு சாதாரண ஜனங்கள் அனுபவிக்கும் சுகங்கள்கூடக் கிடைப்பதில்லை. "பேரு பெத்த பேரு: தாக நீளு லேது" என்பதுபோல வயிற்றுக்கு உணவு கிடைக்கும் சங்கதியில் எக்கம் ஸம்பவிப்பது மட்டுமேயல்ல. சரீர உறுப்புகளிலும்கூட ஒருவிதக் கோணலோ, குறைவோ. மந்தமோ, பிணியோ, யாதேனும் ஒன்று நேர்ந்துவிடுகின்றது. ஆங்கில மகா கவியான ஜான்மில்டன் கண்ணில்லாக் குருடரானார். தமிழ் நாட்டில் இராஜீய ஞானத்தை முதன் முதலாகப் புகட்டியவரான "சுதேசமித்திரன்" பத்திரிகையை ஸ்தாபித்த ஆசிரியர் ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயர் குஷ்டரோகத்தால் காலமுற்றிலும் வருந்துவதாயினார். கடைசி காலத்தில் கண்பார்வையும் குறைந்துபோயிற்று. இவ்விதமே பல சம்பவங்களையும் விவரிக்கலாம். ஒன்றில் பிரபலமுற்றால், இன்னொன்றில் ஒரு கனத்த குறைவைக் கற்பித்து. சாமான்ய ஜனங்களும்கூடக் கேவலமாய் அந்தக் குறைவைக் குறிப்பிட்டு இகழ்ந்து பரிகசிக்கும்படி பகவான் செய்துவிடுகிறார். நூலாசிரியர்களென்று பிரஸித்திகொண்டவர்களை அருகிலிருந்தோர் பலர் மதித்ததில்லை அவர்களின் பந்து ஜனங்கள் அவர்களை விரோதித்து எவ்வளவோ தீங்குகள் செய்ததுமுண்டு. ஊரார் தூற்றியதுமுண்டு. உலகுக்கு உழைக்க எண்ணிய இந்தப் பரோபகார சிந்தையினர் இவ்வாறெல்லாம் சிறுமைப்படும்படியாக அவர்கள் என்ன பாவம் செய்தனரோ! நம் தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், நூலாசிரியர்களைக் கௌரவித்து மதிப்போர் எங்கோ ஒரு சிலர்தாம். நூலாசிரியர் செல்வவந்தராயிருப்பின் அவரைச் சூழ்ந்து அநேகர் திரிந்து. தங்களின் லாபத்துக்காக அவரைக் கொண்டாடியவாறு இருப்பர். நூலாசிரியர் பரம எழையாகில் அவர் எத்தனை நூல்களை எழுதி வெளியிட்டிருப்பினும் மதிப்பே தருவதில்லை. அவரைக் கேவலமான ஒரு சிறு பூச்சிபோலவே நினைப்பது. "என்னவோ பல புத்தகங்கள் எழுதியிருக்கின்றான்" என்று இகழ்ச்சியாய்ப் பேசுவர். எவ்வித உதவியும் புரிவதில்லை. தங்களால் செய்யக்கூடிய அற்பசொற்ப உபகாரத்தைக்கூடக் குறைத்துக்கொண்டு வெறுங்கையை விரிப்பர். சிலர் இலவசத்தில் புஸ்தகங்களை இனமாகப் பெற்றுக்கொண்டு பல்லிளித்துச் செல்வர். சமீபத்திலுள்ளோர் ஆதரிக்கும் நிலை இதுவாக, தூர இடங்களிலிருப்போரால்தான் எதேனும் உதவிகளை நூலாசிரியர்கள் பெறுவதுண்டு.

ஃ

தக்க ஜீவனம் கிடைக்கவில்லையே என்று ஆண்மகன் அலைந்துகொண்டு கிடக்க, அவனுடைய துஷ்ட மனைவியோ வீட்டைக் கலகப்படுத்தி ரணக்களமாக்குகிறாள்.

ஹாரியட் மார்த்தினோ இங்கிலாந்தின் வடபாகத்திலே சர்க்கரை சுத்தி செய்துகொண்டிருந்த ஒருவரின் குமார்த்தியாவர். இவருடன் கூடப் பிறந்தவர்கள் எட்டுபேர். அதில் இவர் ஆருவது புத்திரி. மார்த்தினோவின் தாய் அதிக நேர்மையுடையவர்: அவர் ஒருபொழுதும் நன்னெறி தவறி நடவார். ஆனல், மேட்டிமை பாராட்டுபவர்; அதிகாரத்தை வகிப்பவர்; உபசரிக்கத் தெரியாதவர்; மனதிலுள்ளதை இங்கிதங்களால் வெளியிடத் தகுதியில்லாதவர்.

ஃ

மார்த்தினோவுக்கு சிறு குழந்தைப் பருவத்திலேயே செவி பெரும்பாலும் மந்தமாய்விட்டது. இவருக்கு நினைவுதெரியுமுன்பே மோத்தலறிவு மட்டுப்பட்டது. மூக்கினல் வாசனை நுகரும் அறிவு கெடுமோனல் அதனோடு சேர்ந்த சுவை தெரிகிற அறிவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையதாதலின், சிறிது நாளுக்குள் வாசனையறியும் சக்தியும் இல்லாது போயிற்று. இவர் பெரிய பெண்ணுவதற்குமுன் மூக்கினல் மோந்து பார்க்கவும் கூடாமற் போயிற்று! மனிதருக்குள்ளே ஐம்புலன்களுள் கேட்டலும், சுவைத்தலும், மோத்தலும் ஆகிய இம்மூன்றும் அவருக்கில்லை. ஹா! என்ன பரிதாபம்!! இத்துடன் தீர்ந்ததா? மந்த நோய் ஒரு பக்கம்! எப்போதும் உண்ட உணவு ஜீரணிப்பதே யில்லை ஸதா வயிற்றுநோவு வந்து வாட்டும்.

ஃ

மார்த்தினோ லத்தீன். பிரெஞ்சு. இத்தாலி இம்மூன்று பாஷைகளிலும் தேர்ந்தவராகி சங்கீதத்திலும் நிபுணியையானர். இவரது பருவகாலத்தில் காது கேட்பது முற்றிலும் கெட்டு விடவே. பிறருடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டார். இதில் தாம் அடைந்த வருத்தத்தை 1834-ம் வருஷத்தில் எழுதி வெளியிட்ட செவிடர்க்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். "எப்படிப்பட்ட துன்பம் நேர்ந்தாலும். நமது சவுக்கியத்தை மாத்திரம் பாராமல், தைரியம், பொறுமை, கபடமின்மை இவற்ருல் அவற்றைப் பொறுத்தலே நலமென்று குறிப்பிட்டுள்ளார்.

ஃ

மார்த்தினோவின் விவாகம் வெகு காலம் தடைப்பட்டுப், பிறகு நிறைவேறிற்று. தாம் மிக்க வருந்திய கஷ்டப் பிராணியென்பதையும். தாம் செவிடாய் விட்டதால் மனம் நொந்துபட்ட துயரத்தையும், தமக்கு எப்போது விவாகம் ஆகுமோவென்று காத்திருந்த ஆவலாதிகளையும், தம் தாயினுடைய கோணலாண பல குணனுபவங்களையும் தாம் எழுதிய நூல்களிலே ஆங்காங்கு பல இடங்களிலும் குறிப்பிட்டிருக்கிருர். ஒரு நூலாசிரியருக்குத் தமது சொந்த அனுபவங்களும். கண்டு கேட்டறிந்த பல விஷயங்களுமே அவரது நூலில் வந்துசேரும். ஒரு புஸ்தகத்தை எழுதுவதற்கு வேண்டிய விஷயங்கள் கிடைப்பது இந்த வழியில் தான்.

ஃ

மார்த்தினோ நூல்கள் இயற்ற ஆரம்பிக்கும் காலத்தில் அவருக்கு இருபதுவயது ஆயிற்று. தெய்வபக்தியைவிளக்கிப் பெண்களின் உன்னதத்

மனிதன் சுய நலத்தையே பெரிதாகக் கருதி, மற்றவர்களின் நன்மையைக் குறித்துக் கவலையில்லாதிருக்கும் வரையில், அவன் விலங்கினத்திலும் கேடானவனுகிருன்.

தைப்பற்றி ஒரு நூல் எழுதினர். அவரது உபந்யாசம், ஸ்தோத்திரம், கீர்த்தனை இவைகள் அடங்கிய புஸ்தகத்தை அவரது பிதா படித்துப் பார்த்து மகிழ்ந்தார். இத்தந்தைக்குத் திடீரென வர்த்தகத்தில் நஷ்டம் நேர்ந்துவிட, அதுவே கவலையாகிப் பிணிவாய்ப்பட்டார். மார்த்திநோவின் 24-வது வயதில்தந்தைஇறந்துவிட மற்றொரு பக்கம், மார்த்திநோவின் கணவரும் காலமாய்விட, மிக்க பெருந்துன்பம் சூழ்ந்து வதைத்தது. கணவனின் உயிர் பிரியுங்காலத்தில் மார்த்திநோ அருகிலிருக்க முடியவில்லை. வியாதியாய்க் கிடந்த கணவனின் ஊர் வெகு தூரமென்று மார்த்திநோவைப் போகாமல் அவரது தாயார் மிகக் கொடுமையுடன் தடுத்து விட்டார். பரிதாபம்!

ஃ

மார்த்திநோ முதலில் புத்தகங்களை எழுதிய காலத்தில் அதனல் வருமானம் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் அவர் சோர்வடையாமல் எழுதிக் கொண்டே வந்தார். தாம் எழுதும் புஸ்தகங்களால் நன்மை எப்படியும் கிடைக்குமென்ற நம்பிக்கை அவருக்குப் பூரணமாக உண்டாதலால் எடுத்த காரியத்தை விட்டுவிடவில்லை. அவர் பெருமை உடனே வெளிப்படாமல் வரவர வெளிப்பட்டது. இவ்வுலகத்திலே பெருப் புகழ் அடைந்தவர்களெல்லோரும் இப்படித்தான். கடைசியில் அவர் பிரசித்தி எங்கும் பரவத்தொடங்கியது.

ஃ

ஜனங்களுக்கு வேண்டிய விஷயங்களையெல்லாம் சாஸ்திரமுறையில் விளக்கிக் காட்டக்கூடிய கதைகளை எழுதினர். அவற்றைப் பிரசுரிப்பதற்கு ஒருவரைத் தேடுவதற்காகத் தெருத் தெருவாய் அலைந்து மழையில் நனைந்து கஷ்டப்பட்டு ஒருவரைக் கண்டுபிடித்தார். அவரது நூல் அச்சிட்டு வெளிவந்ததும் 10-நாளில் 1500-பிரதிகள் விலையாகிவிடவே, மறுபடியும் 5000-பிரதிகள் அச்சிடும்படியாயிற்று. இவ்வளவுக்கும் மார்த்திநோவுக்குக் காது கேளாது. வெளி சப்தம் அடங்கிவிடவே, உள் சப்தம் ஓங்கி நின்று, அந்த சப்தத்தின் துணைகொண்டு நூல்கள் இயற்றத் தலைப்பட்டார். கடவுளின் அருள் பெரும்பாலும் அங்கப்பழுதோ, அல்லது வேறொரு பெருங்குறைவோ வுள்ளவர்களுக்கே தான் கிட்டுவது சாதாரணம். மார்த்திநோ கடைசியில் லண்டன் நகரத்திற்கே வந்து வசிக்கத்தொடங்கி, இரண்டு வருஷ காலத்திற்குள் 34-புஸ்தகங்களை எழுதி வெளியிட்டார். ஒவ்வொரு புஸ்தகமும் 120-பக்கங்களுக்குக் குறைவில்லை.

ஃ

மார்த்திநோ எழுதிய நூல்கள் கணக்கற்றவை. (1) தெய்வநூல் விளக்கம், (2) உபசார முறைமை, (3) பற்பல சேவகவிதி, (4) வீட்டில் குற்றேவல் செய்பவள், (5) வீட்டின் பணிவிடைக்காரி, (6) துரைசானி வேலைக்காரி, (7) தையற்காரி, (8) தற்கால மனித நிலைமை, (9) இராஜகுமாரனும் ஏழைக் குடியானவனும்,

(10) ஆற்றைக் கடத்தல் முதலிய வீரச்செய்கைகள். (11) லண்டன் நகரத்தில் சிறுவர்க்கான கதைகள். (12) கீழ்நாட்டில் உயிர் வாழ்க்கை. (13) இறந்தகாலமும் நிகழ்காலமும், (14) குடித்தனப்பாங்கு, (15) அமெரிக்காவின் முப்பது வருஷத்துச் சரித்திரம். (16) இங்கிலாந்தும் அத்தேசத்துக்குப் போர்வீரர்களும், இன்னும் எத்தனையோ நூல்களை எழுதியதன்றி, மாத ஸஞ்சிகைகளிலும், தினசரிப் பத்திரிகைகளிலும் அவர் ஓயாது வரைந்துவந்த விஷயங்களுக்கு அளவேயில்லை. அவர் சொல்லுகிற கதைகள் ஒவ்வொன்றிலும் மனிதர்களுடைய மனத்தோற்றமெல்லாம் நன்ருய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கும். இராஜாங்கத்திலும், மானிட சமுதாயங்களிலும் வழங்கி வருகிற நடவடிக்கைகளெல்லாம் அவற்றில் ஏற்றவண்ணமாக அமைத்துச் சொல்லப்பட்டிருக்கும். அவர் எந்தக் கதையை எழுதத் தொடங்கினாலும், அந்தக் கதையினுலுண்டாகும் பயனை முன்பே அறிந்து எந்தெந்த விஷயங்களை எப்படியெப்படிச் சொல்லவேண்டுமோ அப்படியே சமயோசிதமாகச் சொல்வார். அன்றியும், அவற்றில் சிலருடைய குணுகுணங்களும் மறைபொருளாகச் சொல்லப்பட்டிருக்கும்.

ஃ

மார்த்தினோ அமெரிக்கா தேசத்துக்குச் சென்று அங்குள்ளோரால் கௌரவிக்கப்பட்டார். அமெரிக்காவைப்பற்றியும் ஒரு நூல் வரைந்தார். இங்கிலாந்தின் துரைத்தனத்தார் அவருக்கு வருஷமொன்றுக்கு ரூபாய் 2400 நன்கொடையாகத் தருவதாய்க் கூறியும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்பின் அவரது நண்பர்கள் பணம் சேகரித்து 21-ஆயிரம் ரூபாயை அவருக்கு ஸமர்ப்பித்து, ஒரு தங்கத் தாம்பாளமும் கொடுத்தார்கள்.

ஃ

இவ்வளவு ஆசிரியத்துவ வேலைகளுடனும் பிரக்யாதியுடனும் அவர் விளங்கியபோதிலும், காலமுற்றும் நோயாளியாகவே கிடந்தார். வலிப்பு வியாதியால் கனத்தவாதை. படுத்துக்கொண்டால் மூச்சுத் தமொறித் தவிக்கும். தமது கஷ்டங்களை யெல்லாம் வெகு பொறுமையாகச் சகித்தார். 1861-ம் வருஷத்தில் தேச சரித்திரங்களை எழுதத் தொடங்கினுர். அவரது 74-வது வயதில் தேகம் மிக்க சோர்ந்துபோயிற்று. காலமுற்றும் விதவை வாழ்விலேயே கழித்த அவர் 1876-ம் வருஷம் ஜூன்மீ 27-ம் தேதியன்று இவ்வுலக உபாதைகளினின்றும் நீங்கிக் கடவுளிடம் சென்ருர். "குழந்தையைப்போல நிஷ்கபடமாயிருந்து, ஒருபொழுதும் தப்புவழியில் செல்லாமல் நேர்பட நடந்தால் தான் முடிவிலே சுகமுண்டாகும்" என்பது அவர் கருத்து. ஒரு பிரபல நூலாசிரியையின் உத்தமஜீவியம் எத்தகையதா யிருந்ததென்று அன்புடன் ஆராய்ச்சி செய்ய விரும்புவோருக்கு மார்த்தினோவின் பரிதாப சரித்திரம் மிக்க உதவியாக இருக்கும்.

ஒருவன் உயர் பதவியிலிருந்தால் அந்தப் பொறுப்பை வகிக்கும் சக்தி அவனிட மிருக்கிறதென்று மட்டுமே கொள்ளவேண்டும். அதன் பொருட்டு அவன் கீழ் ஏவல் செய்வோர்களைத் தாழ்ந்தவர்கள் என்று எண்ணிவிடக்கூடாது. உயர்பதவியிலிருப்பவனுக்கு அதிர்ஷ்டம் கிடைத்தது. கீழான பதவியிலிருப்பவர்களுக்கு அந்த அதிர்ஷ்டம் சித்திக்கவில்லை. இதுதான் பேதம்.

திபேத்தில் நமது நூல்கள்.



மகமத்கில்ஜி என்பவர் மகத தேசத்தில் படையெடுத்துவந்து பௌத்த சன்னியாசிகளைக் கொன்றதால், தப்பினவர்கள் திபேத்துக்குச் சென்றார்கள். உத்தண்டபுரியையும், விக்ரமசீலா நகரையும் மகமத்பென்சிம் என்பவர் கைப்பற்றியபோது, அந்த மடங்களிலிருந்த அநேக புஸ்தகங்களை ஒன்று சேர்த்துத் தீக்கிரையாக்கினார். உத்தண்டபுரியிலிருந்த பௌத்தர்கள் 5000-பேரை மகம்மதியத்துருப்புகள் எதிர்த்தன. மகததேசமுழுமையுமுள்ள மடங்கள் இவ்விதம் அலங்கோலப்படவே, காஷ்மீரதேசத்தாராகிய பிரவித்திபெற்ற சாக்கிய ஸ்ரீபண்டித என்பவர் ஒரிஸாவில் இரண்டு வருஷங்கள் ஒளித்திருந்தார். பின் திபேத்துக்கு அத்தேசத்து அரசன் அனுப்பிய மனுஷனால் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் அங்கு போய் லாமாக்களுக்கு (பௌத்த ஸங்யாசிகளுக்கு) ஆசாரியனாகி பௌத்த மதக் குருவானார்.

ஃ

திபேத் என்பது மேட்டுப் பூமியிலுள்ள ஓர் தேசம். இது இமயமலைக்கு அப்பாலுள்ளது. இங்கு திருட்டு அபூர்வம். முதல் முறை திருடியவன் ஒரு கண்ணை இழப்பான். மறுபடியும் களவாடினால் இன்னொரு கண்ணையும் பிடுங்கி விடுவர். மூன்றாமுறை திருடினால் ஆளை உருட்டிக்கட்டி நதியிற் போடுவர். இறந்தவர்களின் உடலைச் சிலர் தகனம் செய்வர். நீரில் எறிந்து விடுவர். சிலர் இறந்தவன் உடலினின்றும் மாம்ஸம், சதை, தோல் முதலியவற்றைப் பிரித்து நாய்க்குப்போட்டு, எலும்புகளை விட்டெறிவர். மீந்த எலும்புகளைப் பொடி செய்வார்களாம்! விவாகங்கள் சீனதேசஸம்பிரதாயங்களை அனுசரித்து நடைபெறும். மத்தியஸ்தனின்றி எந்த விவாகமும் நடக்கமாட்டாது. மாப்பிள்ளை ஓர் பட்டு வஸ்திரத்தில் தன் பெயரையும் பெண்ணின் பெயரையும் எழுதிப் பெண்ணிடம் கொடுக்க வேண்டும். இதுதான் விவாக விதி. திபேத்தியரின் அரசனருகே தங்கக் கட்டிகள் கொட்டிக் கிடக்கும். ஆனால், யாரும் அதைத் தொடாதபடி காவலுண்டு.

ஃ

திபேத்தில் பிராமணமத சம்பந்தமான நூல்கள் பல திபேத்து பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அங்கே இரண்டு அபிதான கோசங்கள் பிரபலமாயிருக்கின்றன. இவைகளில் ஸாங்கியூர் என்ற கோசத்தில் பாணினி, கலாபா, சரஸ்வத், சந்த்ர வியாகரண—இப்புஸ்தகங்கள் காணப்பட்டிருக்கின்றன. இந்தக் கோசத்தில் 225-புஸ்தகங்களும், மற்றொரு கோசமாகிய காகியூரில் 108-புஸ்தகங்களும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு புஸ்தகத்திலும் சமார் 500-எடுகள் உள்ளன. ஒரு எடு 2-அடி நீளமும், 6-அங்குலமும் அகலமுள்ளதாய் கட்டை அச்சுகளால் எழுத்துக்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஸாங்கியூர் கோசத்தில் ஸ்ரீபகவத் கீதையிலுள்ள கிருஷ்ணார்ஜுனஸம்வாதம் காணப்படுகின்றது. இந்தக் கோசத்தில் மாஷுரக்ஷிதா என்ற ஹிந்து ஆசிரியராலும், சாணக்கியர் என்பவராலும் செய்யப்பட்ட நீதிசாஸ்திரங்களும் அடங்கியிருக்கின்றன.

இப்போது மகம்மதியருக்குள்ள மனநிலைமையானது இந்துக்களோடு சேர்ந்து இந்திய ஜனமென்று ஒரு ஜனமாக அமைவதற்கு இசைந்ததல்ல.

உலோகம் கலந்த நீர்கள்.

பொன், வெள்ளி, இரும்பு, அபிரகம் முதலிய பஞ்சலோகங்களும் உற்பத்தியாகிற மலைப்பிராந்தியங்களில் மழைத்தாரைகள் விசையாக விழுந்து ஊறிவரும் நீரையே "உலோகம் கலந்த நீர்" என்று சொல்லப்படுகிறது. ஓரிடத்தில் நதியானது உற்பத்தியாகி இந்த உலோகங்கள் கலந்த பிராந்தியங்களில் பாய்ந்து ஊறிவந்தாலும், அந்த நீரையும் உலோகம் கலந்த நீர் என்று கூறலாம். உலகத்தில் உற்பத்தியாயிருக்கிற சகல நீர் நிலைகளிலும் தடாகங்கள், நதிகள், சுனைகள் எல்லாவற்றிலும் ஓர்வித உலோகம் சம்பந்தப்பட்டேதான் இருக்கவேண்டுமென்பது சாஸ்திர விற்பன்னர்களின் கொள்கை. இவ்வித உலோகம் கலந்த நீர்கள் வைத்தியர்கள் கைவிட்ட அசாத்தியமான ரோகங்களை நிவாரணம் பண்ணுகின்றன. இந்த மாதிரி சொஸ்தம் பண்ணுவதை ஆங்கிலத்தில் 'பால்நியாலஜி' என்பர். உலோக சம்பந்தமான நீர்கள் இந்தியாவிற்கு வைத்திய உபயோகத்திற்காக இறக்குமதியாகின்றன; நன்றாக விற்கவும் படுகின்றன. இந்தத் தேசத்திலுள்ள உலோக சம்பந்தப்பட்ட நீர்களையும், ஔஷதப் பிரயோகத்தில் பலன் தரவல்ல தீர்த்தங்களையும் ரஸாயன சாஸ்திரமுறையில் சோதித்துப்பார்க்க முயன்றால், இங்கும் இவ்வித கைத்தொழில் செய்யலாம். பழங்காலத்தில் அந்நிய நாட்டிலிருந்து பிரயாணமாக இந்தியாவுக்கு வந்தவர்கள், இந்தியாவில் தாங்கள் கண்டனுபவித்த உலோக நீர்களைப்பற்றிப் பெரிதும் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள்.

முன்னேற்றமும் நூல்களும்

ஜப்பானியர் தங்களுடைய தேசத்தில் கல்வியைப் பரவச் செய்வதற்கு நூல்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதையும், ஜன மனோபாவங்களையும், நன்குணர்ந்துகொண்டதே அவர்களுடைய முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாயிற்று. ஆகவே, ஜனங்களுக்கு ருசியுண்டாகும் விதமாய்ப் பத்திரிகைகள், பிரஸங்கங்களாலும், நூல்கள் மூலமாகவும் வெளியிட்டார்கள். ஐரோப்பிய பாஷைகளிலுள்ள நூல்களை மொழிபெயர்த்ததுடன், தாங்களும் சுயமாக அநேக நூல்களை எழுதினார்கள். இங்கிலீஷ், ஜெர்மன், பிரஞ்சு; முதலிய ஐரோப்பிய பாஷைகளை ஜப்பானியர் ஊக்கத்துடன் படித்ததுபோல் மற்றெந்தக் கீழ்த்திசையாரும் படித்ததில்லை. ஐரோப்பிய பாஷையிலுள்ள சரித்திர நூல்களும், ராஜீய சாஸ்திரங்களுந்தான் விசேஷ கவனத்துடன் படிக்கப்பட்டன. ஜப்பானில் இவ்வேலையில் முற்பட்டு உழைத்தவர் புதுஸாவா என்ற மஹா வித்வானவர். ராஜாங்கத்திலுள்ள எந்த உன்னத பதவியும் அவருடைய சாமர்த்தியங்களுக்குப் பெரிதல்ல. ஆயினும், அப்பதவிகளை நாடாமல் தமது தேசத்தில் கல்வியைப் பரவச் செய்யவேண்டுமென்ற உத்தம எண்ணத்தைக் கொண்டு அதற்கே உழைத்து வெற்றி பெற்றார். ஒரு தேசத்திற்கு முன்னேற்றம் நூல்களால்தான் ஏற்படவேண்டுமென்பதைத் தாமே செய்து நன்கு விளக்கிக் காட்டியவர்களில் புதுஸாவாவும் ஒருவராவார்.

நம் தொழிலாளிகளின் படிப்பு.

தொழில்களை நடத்துவதில், அங்கு வேலைசெய்யும் கூலிக்காரர்களாகவோ, தொழிலாளிகளாகவோ ஒரு சாரார் உள்ளார். பிறகு, அவர்களைச்சேர்த்துத் தொழிற்சாலைகளை நடத்தும் நிர்வாகிகளான மானேஜர்கள் என்போர் மற்றொரு சாரார் ஆவர். கடைசியாக, தொழில்களின் சாஸ்திரப் பிரமாணங்களில் தேர்ச்சிபெற்று, அவைகள் தொழில்கள் நடப்பதற்கு உபயோகமாகும்படி செய்யும் சாஸ்திர விற்பன்னர்கள் இன்னொரு வகுப்பாகஇருக்கிறார்கள். இந்த மூன்று வகுப்பாருக்கும் தக்க அறிவும் அனுபோகமும் உண்டாக வேண்டும். ஒரு தொழிலைச் செய்வதில் பழக்கத்துடன் அறிவுத்திறமையும் உள்ளவர்களாயிருந்தால் அவர்கள் செய்யும் வேலையானது, இந்தக் கல்வியறிவுக் குணங்களில்லாதவர்கள் செய்யும் வேலையைவிட உயர்ந்ததாகவே பிரகாசிக்கும். இதற்காகத் தொழில்களைச் செய்வதில் சம்பந்தப்பட்ட பற்பல வகுப்பாருக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் கல்வி போதித்துத் தகுந்த அறிவை யுண்டுபண்ணுவது அவசியம். இவ்விதம் பொது அறிவு உண்டாக்குவதுடன் கைப்பழக்கம் (Munual Training) செய்விக்கவும் வேண்டும். பிள்ளைகள் ஆயுதங்களை உபயோகப்படுத்தத் தெரிந்துகொள்ளும்படியான பயிற்சியை யூட்டவேண்டும். இந்த அறிவோடுகூட, நம் தொழிலாளிகளுக்கு யோக்கியதையும் உண்டாக வேண்டும். அவர்களின் யோக்கியதைக் குறைவைப்பற்றி அனுபோகப்பட்டவர்களுக்கு நன்குதெரிந்ததே. பெரிய தொழிற்சாலைகளை வைத்து நடத்துவோர்தான் இந்த அறிவு புகட்டும் பாரத்தை மேற்கொள்ளவேண்டும். அது சாத்தியமாகாவிடில், தொழிலாளர்களே தங்களின் அறிவைப் பெருக்குவதற்கு முயன்றால்தான், அவர்கள் செய்யும் தொழில்களும் சிறந்தனவாய்ப் பிரகாசிக்கும். தொழிலுள்ளவனுக்குப் படிப்பில்லை. படிப்புள்ளவனுக்குத் தொழில் ஞானமில்லை. இது பெரிய அனர்த்தம்!

ஃ

ஒரு தேசத்தில் தொழிலபிவிர்த்தியின் பொருட்டு எவ்வளவுக்கெவ்வளவு முதல் போடப்படுகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அத்தேசம், முதல் போட்டுத் தொழில் நடத்தும் வியாபாரிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுப் போகின்றது. ஒரு தேசத்தில் அன்னியர்கள் எவ்வளவுக்கெவ்வளவு தொழிலபிவிருத்தியின் பொருட்டு முதல் போடுகின்றார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் அத்தேசத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டு வருகின்றார்களென்பது மூலாதாரமான சித்தாந்தம். எனவே, வியாபாரத்தின் பொருட்டு ஒரு தேசத்தார் மற்றோர் தேசத்தில் பணத்தைச் செலவிடுவதென்றால், முதலுக்கேற்றவாறு, அவர்கள், அத்தேசத்தைக் கைப்படுத்திக்கொண்டு வருகின்றார்களென்றே எண்ணவேண்டும். ஒரு தேசம் அழிவதும் சிறப்புறுவதும், அத்தேசத்தின் தொழில்களையும் வியாபாரத்தையும் பொறுத்ததாயிருக்கும்போது, தொழிலாளர்களுக்குப் படிப்பும் அறிவும் எவ்வளவு முக்கியமென்பது நன்கு விளங்கும்.

பொதுவாக அறியாமையும் குதர்க்கமும் கூடிக்கொண்டு மனிதர்களை விவேகமற்றவர்களாயும் கொடியவர்களாயும் செய்து விடுகின்றன.

பிரஜா மூடத்தனம்.

(60-வருஷங்கட்கு முன்பு சென்னைக் கவர்னராக இருந்த லார்ட் ஹபர்டு அவர்கள் செய்த உபந்நியாஸம்.]

இத்தேசத்தில் பிரஜாமூடத்தனம் பெருத்த நோயாயிருக்கிறது; அந்த நோயைத் தீர்க்கும்பொருட்டு துரைத்தனத்தாருக்குச் சிரமம் கொடாமல் ஏதாவது ஒருவழி தேடவேண்டியது மிகவும் அவசியமென்று நான் இங்கு வந்ததும் எண்ணினேன்.

இந்தியாவில் கல்வியை அபிவிர்த்திபண்ணினால் ஜனங்களுக்கு சுதந்திரங்களைப் பெற இச்சையும், ராஜநீதியில் அதிர்ப்தியும் பிறக்குமென்றும், அதனால் இந்தியாவுக்கே கேடு வருமென்றும், நம்முடைய துரைத்தன அதிகாரத்துக்குத் தளர்ச்சியுண்டாகுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அதை ஒருவரும் நம்பவேண்டாம். ராஜாங்கத்துக்குக் கேடும் நீதிக்குத் தவறும் தெரியாமையினால் வருமேயன்றி ஞானத்தினால் உண்டாகாது. புத்தியும் சிந்தனையும் அதிகமாக, அதிகமாக, நம்முடைய ஒழுக்குத் திட்டமுள்ளதுபோல ராஜாங்க முறைக்குப் பெருக்கமும் உறுதியும் உண்டாகும். அதிகாரமும் சுயாதீனமும் உயர்ந்தவையென்று கல்வி கற்பிக்குமென்பது மெய்தான். ஆகிலும், அதைக் கற்பிப்பதோடுகூட, நல்ல துரைத்தனத்துக்கு நேரிடும் கஷ்டநஷ்டங்களையும் அதனுடைய அருமையையும் அறிந்து, அதற்கு அடங்கி நடக்கவேண்டியது அவசியமென்றும் கற்பிக்கும். இது தவிர, இன்னொரு விசேஷ நன்மையும் விளையும். மேற்றிசையோரும் கீழ்த்திசையோரும் கலாஞான விஷயத்தில் ஒத்துப்போவாராயின், அவர்கள் பேதமில்லாமல் போக்கு வரவு செய்துகொண்டு கலந்து வாழ்வதற்கு இடையூறாக நிற்கிற குரோத எண்ணங்கள் அழிந்துபோகும். ஜாதிப்பகைக்கு மூடத்தனம் அல்லது தெரியாமை அடிவேராயிருக்கிறது. புத்தி விகாஸம் (அதாவது புத்தி மலர்ச்சி) உண்டாயிருக்கிற இடத்தில் மதப்பகை அல்லது மதிகேடு ஒரு நிமிஷமாகிலும் நில்லாது. ஜாதியும் மதமும் வேறாயிருக்கிறபடியாலே, ஒருவருக்கொருவர் சிநேகமாய்க்கூடி வாழக்கூடாதென்பதில்லையென்று கற்றறிந்தோர்தான் அறிவார்கள். இங்கிலாந்தில் பிறந்தாலென்ன; இந்தியாவில் பிறந்தாலென்ன; ஒருவரையொருவர் சேரவொட்டாமல் இடையில் பிரித்துவைத்திருக்கிற சமயபேதங்கள் எப்படியிருந்தாலென்ன; நல்வாழ்க்கைக்கு உரிய கடமை எல்லோருக்கும் ஒன்றேயெனக் கண்டுகொள்ளுவார்கள். பிரஜாமூடத்தனம் ஒழிந்தால்தான் இந்த நன்மையுண்டாகும்.

ஃ

சுத்தமான மனதும், நுட்பமான அறிவும் ஒருவனுக்கு இருக்குமானால், அவன் மனிதர்க்குரிய சக்தியை வளர்த்து, அதனாலேயே ஞானம், பக்தி, யோகம் முதலிய ஸாதனங்களைப் பூர்ணமாய்ப் பெற்றுப் பேரின்பமாகிய விடுதலையும் பெறுவான்.

[மாஜி இந்தியா ராஜப்பிரதிநிதியான லார்ட் கர்ஸன் "எல்லா கெடுதிகளும் கல்வியால் வந்தன" என்றார். இந்தியர்களுக்குக் கல்விகற்பித்ததால் அவர்கள் கெடக் காரணமாயிற்று என்பது லார்ட் கர்ஸனின் கருத்து. அமெரிக்காவில் கல்வியைப் பரப்பும் நோக்கத்துடன் அதற்கு உதவியாக ஆங்காங்கு இலவச புஸ்தகசாலைகளை ஏற்படுத்தக் கருதி அமெரிக்கா பார்லிமெண்டில் 1850-ம் வருஷத்தில் அதைப்பற்றி ஒரு சட்டம் செய்த போது, சாமானிய ஜனங்களுக்கு அறிவு அதிகரிக்கும்படி செய்வதால் கிளர்ச்சி பெருகுவதற்கு இடமேற்பட்டுவிடுமென்ற ஆட்சேபத்தைச் சொன்னவர்களும் சிலருண்டு. இந்த அபிப்பிராயங்கள் குறுகிய தன்மையைக் கொண்டவை. ஆனால், அமெரிக்கா பார்லிமெண்டு இந்தக் குறுகிய தன்மையை ஏற்காமல், மறுபடியும் 1919-ம் வருஷத்தில் தாராளமான சட்டம் ஒன்று இயற்றி, தேசமெங்கும் இலவச புஸ்தகசாலைகளை அதிகரிக்கச் செய்து பொதுஜனக் கல்வியை வெகுவாக விர்த்திசெய்துவிட்டது. நம் நாட்டிலும் இவ்வித இலவச புஸ்தகசாலைகள் எங்கும் அமைக்கப்படுமோயின், பாடசாலைகளில் கல்வியைப் பெற்றவர்கள் அதை மேற்கொண்டு பெருக்கிக் கொள்வதற்கு வகையில்லாததன் காரணமாக, அந்தக் கல்வியின் பயனையே இழந்துவிடவேண்டியவர்களாக விருக்கும் வருந்தத்தக்க நிலைமை நிவர்த்தியாவதற்கு இடமேற்படும்.—ப—ர்.]

பொறாமைப் பேய்கள்!

பொறாமைக்காரனுடைய ஹிருதயத்தில் ஒருவித ஸங்கடம் உற்பத்தியாகிறது. அது அவனைவிட்டு நீங்காமல் ஸதா ஏக்கமும் துக்கமும் கொள்ளவைக்கிறது. பிறரது செல்வத்தையும் செல்வாக்கையும் பார்த்துப் பொறாமைப்படுகிறவன் அதை யழிக்கவேண்டிக் கவலைப்படுவான். அந்தக் கவலை மனதில் பாதிபாகத்தைத் தின்றுவிடுகிறது. என்ன காரியம் செய்யலாம், எவ்விதம் கெடுக்கலாம், என்ன கோள் சொல்லலாமென்று எப்போதுமே பொறாமைக்கார்கள் ஆலோசித்துக்கொண்டே யிருப்பதால், அவர்களுடைய பரிதாபநிலையைக்கண்டு எவர்தான் துக்கப்படாமலிருப்பர்? மனிதனாய்ப் பிறந்தவன் தன்னுடைய ஆயுள்காலத்தை ஸந்தோஷமாய்க் கழிக்க முயல்வதுதான் விவேகம். அதைவிட்டு ஆயுஸ்காலம் முழுவதும் பொறாமையுடன் மனதில் பெருங்கவலையையே மேற்கொண்டு திரிந்தால் அவனைப்போல் அவிவேகி யாருமிரார்; தான் உயரமுடியாததிலிருந்தே பொறாமைப் பேய் தோன்றுகிறது.

நிலக்கடலையின் கெடுதி.

நிலக்கடலை ஏக்கர் ஒன்றுக்கு சாதாரணமாக எருவில்லாமலே 15-மூட்டை முதல் 45 மூட்டை வரையில் உற்பத்தி கிடைக்கக்கூடியதாயும், நல்ல விற்பனையுமாகக் கூடியதாயுமிருக்கிறது. இதனைப் புசிப்பதாலுண்டாகும் கெடுதிகள் அனந்தம். மாசூல் எடுக்கும் காலத்தில் கூலிகள் புலங்களில் பச்சையாகக் கடலையை மிகுதியும் தின்பதால் சிலருக்கு வாந்திபேதியும், சிலருக்குத் தனி வாந்தியும், பேதியும், மயக்கமும், தலைச்சுற்றல், வயிற்றுப் பொருமல், கைகால் குடைச்சல் முதலியவும் கண்டு அவஸ்தைப்படுகிறார்கள். கூலியை உத்தேசித்துச் செல்லாமல் பெரும்பாலும் கடலையைத் தாராளமாகத் தின்னலாமென்றே போகிறார்கள்.

ஃ

ஏழைகளின் பாடுதான் இப்படியென்றால், இது செல்வவான்களையும் விட்டதல்ல. இவர்கட்கும் பல வழியாகவும் இது வந்து சேர்ந்துவிடுகிறது. இந்த நிலக்கடலையின் எண்ணெய் அதிகமாய்விட்ட பிறகு சுத்தமான நல்லெண்ணெய் கிடைப்பது அரிதினுமரிதாய்விட்டது. கடலையையாட்டாத செக்கானும், கலப்பில்லாத எண்ணெய் விற்கும் செட்டியும் இல்லவேயில்லை. ஓர் செட்டியார் தாம் வழக்கமாய் எண்ணெய் கொடுத்துவரும் வீட்டார் பலருள் ஒரு வீட்டுக்கனவான், "செட்டியாரே சுத்தமான எண்ணெய் ஒரு குடம் நாளைத் தினம் கொண்டுவாரும்; என்ன விலையானாலும் கொடுக்கிறேன்" என்றாராம். அப்படியே அவ்வூருக்கு இரண்டு குடம் கலப்பெண்ணெயும், ஒரு குடம் சுத்தமான நல்லெண்ணெயும் கொண்டுபோன செட்டியார், முதலில் சுத்தமான எண்ணெயான ஒரு குடத்தை நேற்றுச் சொன்ன கனவானிடம் கொண்டுபோய்த்தந்தார். அதனையவர் பலவிதமான பரீக்ஷைகள் பார்த்துவிட்டு, "செட்டியாரே! இதுவரை நீர் கிரமமான எண்ணெயாய்க் கொடுத்து வந்து, இப்போது இந்த ஆபாஸ எண்ணெயை என்முன் கொண்டுவரலாமா?" என்றாராம். உடனே செட்டியார், 'ஓகோ மோசம் வந்தது, இவரிடம் நாம் மோசமாய் நடக்காவிடில், நாமே நம்மை அயோக்கியனாக்கிக் கொள்வதோடு, இவரிடம் செய்கிற வியாபாரமும் நின்றுவிடும்; நல்ல சரக்குக்கு இது காலமல்ல' என்று நினைத்தவராய், 'கனவானே! நான் தங்களைச் சோதித்துப் பார்க்கவே இப்படிச் செய்தேன்; உங்களுக்கென்று கொண்டுவந்த எண்ணெயை அடுத்த வீட்டில் வைத்திருக்கிறேன்; நீங்கள் உயர்ந்த எண்ணெய்க்கும் மட்டமான எண்ணெய்க்கும் பேதம் தெரிந்துகொள்கிறீர்களாவென்பதற்கே முதலில் இந்த எண்ணெயைக் கொண்டுவந்தேன்" என்று சொல்லிவிட்டுச் சரிபாதி கடலையெண்ணெய்

சிலருக்குக் கவிகள் இயற்றத் தெரியாவிடினும் தாமே அவற்றைப் பாடியதாகச் சொல்வதுண்டு. கவித்வம் ஸாமான்யமானதன்று. எவ்வளவோ கவிகளைச் செய்தவர்களுக்கூடப் புதிதாய் சில கவிகளை இயற்றுகையில் சிறிது பிரயாசைப்படவேண்டியதாகவே இருக்கிறது.

கலந்த குடத்தை எடுத்துவந்து காட்டினர். கனவான் அதைப் பரீக்ஷித்து(!)ப் பார்த்துத் திருப்தியடைந்தவராகி, "இப்படியல்லவா தெளிவாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும்; இந்தாரும் ரூபாய்" எனத் தாமதியாது கொடுத்தனுப்பினராம்! பார்த்தீர்களா எண்ணெய்ப் பரீக்ஷையை!!

ஃ

இப்படியும் ஏமாந்துபோவாரெண்ணிறந்த பேர்! தெருக்களில் விற்கும் பலகாரக் கடைகளில் உபயோகிப்பது முற்றிலும் கடலையெண்ணெயேதான். இதனால் நம் சிறுவர்கள் பெரியோர்கள் எத்தனைபேர் கெடுகிறார்கள். வைத்தியர்கள் தைலம் செய்வது பெரும்பாலும் இந்த எண்ணெயே. அவர்கள் இதையே சுத்தமான எண்ணெயென்று நம்பி மோசம் போகிறார்கள். நோய் நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படும் தைலமே இவ்வாறாயின், பிணியாளர்களுக்கு உண்டாகும் சுகத்தைக் கேட்பானேன்? சிலர் இக்கடலையைப் பலகாரங்களிலும், பிஸ்கோத்துகளிலும், குழம்புக்கூட்டு முதலியவற்றிலும் சேர்த்தும் புசித்தும் விற்றும் பழகிக் கொண்டார்கள். இவ்வாறாக எவருள்ளும் யாதோ ஓர் வகையில் இது நுழையத் தலைப்பட்டுவிட்டது. வியாபாரிகள் நெய்யிலுந் தேங்காயெண்ணெயிலுங் கலந்து விற்பது சர்வ சாதாரணமாய் விட்டது. இதனைத் தடுப்பாரையுங் காணோம். விலக்கவும் வழியில்லை.

ஃ

இக்கடலையை மற்ற ஸ்திரீகளை விட கர்ப்பஸ்திரீகள் அதிகமாய்த் தின்னப் பிரீதிப்படுகிறார்கள். இவர்கள் பிரஸவ சமயத்தில் அதிகக் கஷ்டப்படுவதாய்த் தெரிகிறது. பிரசவத்திற்கு 2, 3, நாள்களுக்கு முன் தொடங்கி விட்டுவிட்டு நோகும் ஓர் வகை வயிற்று நோயாலும், மூர்ச்சை, மயக்கம், குத்து முதலியவற்றாலும் பாதிக்கப்பட்டுக் கடைசியாகக் குழந்தை பிறக்கிறது. அக்குழந்தை பிறந்த அன்றேயாவது, 2, 3. நாட்களிலாவது பிழைப்பது கஷ்டமாகி விடுகிறது; இறந்தும் போவதுண்டு. சில குழந்தைகள் சாக்காடின்றிப் பிழைப்பதுமுண்டு. இது தாய்மார்களின் தேக சுபாவத்தையும், தின்ற கடலையின் மிதாமிதத்தையும் பொறுத்ததாயிருக்கிறதுபோலும். இது விஷயமாய் ஆங்காங்குள்ள அன்பர்களும், வைத்தியர்களும் கடலையை அதிகமாய் உண்டவர்களுக்குப் பிறக்குங் குழந்தைகளையும், அவைகளின் க்ஷேமலாபத்தையும் அடிக்கடி விசாரித்துத் தாங்கள் கண்ட அனுபவத்தைப் பத்திரிகையில் வெளியிடுவது நன்மையாயிருக்கும். நம் நேயர்கள் சிலராவது இந்தக் கடலையையும் எண்ணெயையும் உபயோகிப்பதாலுண்டாகும் கெடுதிகளை அநுபவ பூர்வமாய்ப் பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டுகிறேன்.

V. S. ஐயன்பிள்ளை

வைத்தியர்.

தென்னிந்தியா ரயில்வேயில் ஸ்ரீரங்கத்திலிருந்தும் விழுப்புரம் வரை கட்டப்பட்டுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள் யாவும் ஒரேவிதமான அமைப்பு கொண்டனவாய் இருக்கின்றன. சிலருக்குக் கட்டிடத்தைக் கண்டு அதனால் ஸ்டேஷனை யடையாளம் கண்டு பிடிக்கவும் முடிகிறதில்லை. பழங்காலத்தில் கட்டப்பட்ட ஸ்டேஷன்களோ அவ்வப்பொழுது கட்டி முடிந்தவைகளாதலின் ஒன்றுக் கொன்று பேதப்பட்டு ஸ்டேஷனின் அடையாளமும் சுலபத்தில் தெரியக்கூடியதா யுள்ளது

பல திரட்டு.

சிறைவாசத்தில் சில அநுபவங்கள்:

பிரஸித்த ஆங்கில ஆசிரியரான ஒய். ஒய். என்பவர் சிறைவாசத்தைப் பற்றிக் கூறியிருப்பதில் சில குறிப்புகளை இங்கு தருகிறோம்:—பிரபல ஆங்கில கிரந்தங்கள் எழுதப்பெறுவதற்குச் சிறைகள் வெகுதூரம் உதவியிருக்கின்றன. ** டெலிபோன் மணிக்குப் பதில் சொல்லாமலிருப்பது கடிதத்தை உடைத்துப் பார்க்காமலிருப்பதை யொக்கும். அதில் ரஸமான விஷயம் ஏதேனும் இருக்கலாம். அநேகமாக அதில் ரஸமான விஷயம் இல்லாமலிருக்கலாம். இருந்தாலும் அது என்னவென்று பிரித்துத் தெரிந்து கொள்ளாமலிருப்பதற்கில்லை. ஆகவே, டெலிபோன் மணித் தொந்திரவிலிருந்து தப்ப வைப்பதற்காகவேனும் சிறைசெல்ல வேண்டுமென்று ஒரு மனிதர் விரும்பியதை நான் அறிவேன். டெலிபோன், வீட்டிற்குள் தனித்திருக்கும் அறைக்குள் வந்து கூப்பிடுவதால் அதை எவரும் அலக்ஷியம் செய்வதற்கில்லை. அந்த சமயம் ஒரு சிறந்த காவியத்தை எழுதுவதில் ஈடுபட்டுள்ள சமயமாக இருக்கலாம். மேலே என்ன எழுதுவதென்று தானாகவே மனதில் அபிப்பிராயங்கள் உதித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் மணி ஓசையை உத்தேசித்து முந்திய யோசனைகளை எல்லாம் மறந்துவிட்டு வரவேண்டியிருக்கிறது. *** சிறை வாழ்வானது யாருடைய செலவிலோ ஒரு ஹோட்டலில் தங்கியிருப்பதற்குச் சமானமானதென்று எனக்குத் தோன்றுகிறது. சிறை முறை திருப்திகரமானதென்று நான் சொல்லவில்லை. *** புகையிலைக்கு அடிமைப்பட்டுக் கிடப்பது சிறையில் ஒழிந்துபோகும். சிறையில் உலகக் கவலை வாட்டாமல், ஒரு வருஷம் ஒரு குடிசையில் அடைபட்டுவிட்டு வெளியே வருவதானது, உலக வாழ்வு திருப்திகரமாக இருக்கிறதென்று நினைக்கும்படி செய்யும். *** சிறையிலிருந்து திரும்பிவருகையில் எல்லாம் புதுமையாக இருக்கும்.

ஃ

காபியின் கீர்த்தி:— சங்கரய்யருக்குக் கீர்த்தியுண்டானது அவர் தயாரிக்கும் காப்பியினால்தான். இந்த காப்பியைச் சாப்பிட அநேகம் பேர் அக்கம்பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் தினந்தோறும் காலை மாலைகளில் வருவதுண்டு. ஒருவன் ஒருநாள் அவர் காப்பியைச் சாப்பிட்டால் மறுநாள் வேறே ஹோட்டலுக்குப் போகமாட்டான். "டிகாஷன்" செய்யும் விதமும், பால் காய்ச்சும் பதமும், காப்பிக் கொட்டைகளை வறுக்கும் ரீதியும், காப்பியின் கலரும் மணமும், சாப்பிடுபவரின் மனதை உடனே கவர்ந்து விடும். சங்கரய்யரின் காப்பியை சாகக் கிடக்கிறவனும் சாப்பிட்டுவிட்டுதான் உயிர்விடவேண்டுமென்று எண்ணங்கொள்வான். காப்பியினாலாவது தன் பெயர் கீர்த்தியடைந்ததேயென்று, சங்கரய்யர் எண்ணி எண்ணி மனமகிழ்வடைவதுண்டு. எந்தத்தொழில் செய்தாலும், அத்தொழிலில், மற்றெல்லோரைவிட வல்லவன் என்று பெயரடைவதே மனிதனுக்கு அழகு. அம்பட்டனாய் க்ஷவரம் செய்தாலும், மற்ற நாவிதர்களைவிடக் கெட்டிக்காரன் என்று ஜனங்கள் கருதிப் புகழ்வதே அவன் செய்யும் தொழிலுக்கும் அவனுக்கும் பெருமை என்று சங்கரய்யர் அடிக்கடி சொல்வதுண்டு.

அநேக உயர்ந்த பரீக்ஷைகளிலெல்லாம் தேறிவிட்டு உத்தியோகத்திலமர்ந்து, உபயோகமற்றவனென்று கருதப்படுவதைவிட, ஒரு ஸாதாரணத் தொழிலைச் செய்தாலும், அத்தொழிலில் உன்னத நிலைமைக்கு வந்து பிறரால் போற்றப்படுவதே சிலாக்கியம்.

நாகை S. நடேச முதலியார்.

ஃ

திவ்யக்ஷேத்திரம், தீர்த்தம் :— ஜாதியாசார முறைமைகளுக்குச் சிறிதும் வழுவின்றி அவரவர்க்குரிய தெய்வங்களாக அவ்வவ்விடங்களில் புண்ணிய தீர்த்தங்களை யண்டிக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் விசுவாகார ஸ்வரூபிகளைப் புவியில்தாங்கி நிற்கும் கௌரவம் வாய்ந்த விடங்களுக்கே இக் கலியுகத்தில் க்ஷேத்திரங்கள் என்றும், புண்ணிய ஸ்தலங்கள் என்றும் பெயர். க்ஷேத்திரம் எனும் பதத்திற்கும், புண்ணிய தீர்த்தம் எனும் பதத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு; க்ஷேத்திரமின்றித் தீர்த்தம் இல்லை; தீர்த்தம் இன்றி க்ஷேத்திரம் இல்லை. க்ஷேத்திரம் எனின், அங்கு புண்ணிய தீர்த்தம் இருந்தே தீரவேண்டும். அங்ஙனமிருந்தால்தான் அதற்கு க்ஷேத்திரம் எனும் பெயர் விதித்திப்பதாகும். ஸ்தல மகாத்மியங் கொண்டாவது, பிராசின புராணப் பெருமை கொண்டாவது, மகான்கள் புகழ்ந்து உரையாடியதனலாவது தீர்த்தங்களுக்கு மகிமை உண்டாவது சகஜம். நதி, கிணறு, குளம், ஏரி, கால்வாய், சுனை, சமுத்திரம் ஆகிய இவை யாவும் புண்ணிய தீர்த்தங்களென்னும் பெருமை தாங்கி நிற்கும்.

தற்காலத் தமிழர்களின் போக்கு !

பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு ஆங்கிலத்திலோ, ஆங்கிலமும் தமிழும் கலந்த பேரில்லாத ஆபாசத்திலோதான் ஆசை வைக்கிறார்கள். ஆங்கிலவார்த்தைகள் கலக்காமல் சுத்தமான தமிழைப் பேசுவதே அரிதாகிவிட்டது. தகப்பனும் பிள்ளையும் பேசுவதும் எழுதுவதும் ஆங்கிலத்தில்தான்! பாடசாலைப் பாடங்களும் ஆங்கிலத்தில் தான்! உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் சம்பாஷிப்பதும் ஆங்கிலத்தில்தான்! சபைக் கூட்டங்களிலும் கச்சேரிகளிலும் ஆங்கிலமே பழக்கத்திலிருக்கிறது. தமிழ் என்றாலே கௌரவக் குறைவாக நினைப்போர் பலராவர். புதுப்புஸ்தகங்களைப் படிக்கிறவர்கள் அவைகள் ஆங்கிலத்திலிருந்தாலொழிய, தமிழிலிருந்தால் படிக்கிறதில்லை. இப்படிப்பட்ட நிலையில் தமிழ் பாஷைக்கு எப்படிப் புஷ்டியுண்டாகும் ? உயிர்தான் எப்படி நிலைத்திருக்கும் ?

கதரின் கண்ணியம்.

கதரைப் பழிக்கின்றார் காந்திக்(கு) இலை மதிப்பென்றே ;
கதரால் வறிஞர் பெறும் களிப்பைப் பழிப்பாரோ ? (1)

வேறு நாட்டுத் துணி விலையிற் குறை(வு) என்பார் ;
கூறு கதர்க்(கு) அதிக விலை கொடுத்தாலும் நமதன்றோ ? (2)

விரைவில் கிழி கதர் வெகு சுமை எனப் பழிப்பார் ;
உரை வறிஞர் வெந்துயரை ஒழிப்பதொரு சுமையாமோ ? (3)

பட்டுத் துணியின் பகட்டிலே மயங்கிடுவோர் ;
கட்டும் கதரின் கன மதிப்பை உணர்வாரோ ? (4)

பெருமை சிறக்க, விலை பெற்ற துணி வாங்கிடுவோர் ;
அருமைக் கதர் இயக்க அன்பைத் தெளிவாரோ ? (5)

வெளி உண்டி ருசியென்று வீட்டு உண்டி தள்ளுவாரோ ?
எளியவர்கள் போற்று கதர் இனத்தை அன்பர் ஏசுவரோ ? (6)

புண்ணிய தீபாவளியில் புனித நீராடிடுவீர் ;
கண்ணியம் இந்நாளில் கதருக்கே உணர்வீரே ! (7)

தேசத்துணி ; வெள்ளைத் துணி; தினம் வறிஞர் வாழ்த்தும் துணி;
நேச தீபாவளியில் நீர் கதரே வாங்கிடுவீர் ! (8)

ஃ

பட்டாசுக்கேனோ பணம் வீணில் போடுகிறீர் ?
கோட்டாவி விட்டு பணம் கொடுத்தபின்பு வாடுவதேன் ?
துட்டோ இந்நாளில் சுருக்கம் ; அதைக் கொண்டு
மிட்டாய்களை வாங்கி மென்றால் தித்தித்திடுமே !

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் துருக்கி என்னும் ராஜ்யம் வியாபித்திருக்கிறது. இது ஏறக்குறைய இந்தியா அத்தனை பெரியதாயிருக்கும். ஆசியாக் கண்டத்தின் மேற்கில் ஓரத்திலிருக்கும் ஆசிய துருக்கி மட்டும் இந்தியாவிற் பாதி யிருக்கலாம். இதற்கு அக்கரையில் ஐரோப்பிய துருக்கியுண்டு. இது சென்னை மாகாணத்தினளவே யிருக்கும். 1300-ம் வருஷத்தில் ஆஸ்மான வம்சத்தார் துருக்கி ராஜ்யத்தை ஆளத் தொடங்கினார்கள். 1453-ம் வருஷத்தில் ரோமன் ராஜ்யத்தைக் குறுக்கி கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றினார்கள். 1856-ம் வருஷம் வரையில் எவராவது ஒருவர் இஸ்லாம் மதத்தை விட்டு அந்நிய மதத்திற் சேர்ந்தால் உடனே அவரை வதைப்பது வழக்கமாம். பிறகு அவ்விதி ஒழிந்ததாம்.

நாகானந்தம்

1. அனங்க பாணத்தின் அதிசய சக்தி.



இமய பருவதத்தில் வித்தியாதர சக்ரவர்த்தியாய் அரசாட்சி செய்து வந்த 'ஜீமூத கேது' என்பவர் வேண்டிய மட்டில் இராஜ போகங்களை யனுபவித்து, கடைசியில் அவைகளில் வெறுப்புற்று, இராஜ்ய பாரத்தைப் பிரதான மந்திரியிடம் ஒப்புவித்துவிட்டுத் தனது பரகதிக்கு வேண்டிய விதிமுறைகளை யனுஷ்டிக்கும் பொருட்டுக் காடுசென்று கிழங்கு, வேர், பழம் முதலியவைகளை ஆகாரமாகக்கொண்டு, தன் இஷ்ட தேவதையை அனுதினமும் ஆராதித்து வந்தார். அவ்வரசருடைய குமாரன் 'ஜீமூத வாகனன்' என்பான் இரவும் பகலும் தந்தைக்குப் பணிவிடை செய்வதையே தன் முக்கியக் கடமையாகத் தீர்மானித்துத் தந்தையுடன் வனத்திலேயே காலங்கழிக்கலானான்.

ஒருநாள் ஜீமூதகேது தன் மைந்தனை யழைத்து "குழந்தாய் ஜீமூத வாகன! நான் பலவித புஷ்பங்களால் பகவானை அர்ச்சித்து, வேர், பழம், கிழங்கு முதலியவைகளைப் புசித்தும் வெகு காலமாக இவ்விடத்தில் வாசஞ் செய்கிறேன். இப்போது என் மனம் வேறிடஞ்செல்ல விரும்புகிறது. ஆதலின், நீ மலய பர்வதம்சென்று, அங்கு நாம் வசிக்கத்தக்க ஓர் ஆச்ரமத்தை அமைத்து வா. பின்பு நாம் மலய பர்வதம் செல்வோம்." என்று உத்தரவிட்டார்.

இராஜ குமாரன் தந்தையின் ஆஜ்ஞையைத் தலைமேற்கொண்டு மலய பர்வதத்துக்குப் புறப்படும் சமயத்தில் விதூஷகனும் அவன் முன்பு எதிர்ப்பட்டான். ஜீமூத வாகனனைக் கண்ட விதூஷகன் உடனே அவனை வணங்கி, "இராஜ குமாரா! வெகு நாட்களுக்குப் பின் உன்னை இன்றுதான் நான் சந்தித்தேன். ஆதலின், நீ செல்லுமிடத்துக்கு என்னையுமழைத்துச் செல்வாயாகில், நாமிருவரும், ஒருவரோடொருவர் பேசிக்கொண்டே அவ்விடஞ் சென்று காரியத்தை முடித்து வரலாம்" என்று வேண்ட, இராஜ குமாரனும் அதற்கிணங்கினான்.

வழியில் அரச குமாரனுடைய மனதை மாரனுடைய வலையிற் சிக்கச் செய்ய வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவனுடைய யௌவனப் பருவம் வீணாய் விடுமென்றும் எண்ணங்கொண்ட விதூஷகன், தானும் அவனும் ஏகாந்தமாகப் பேச இதுவே தக்க சமயமெனத் தீர்மானித்து,

---

குறிப்பு:—இக்கதை நாகங்களுக்கு ஆநந்தத்தைத் தரும் வழியில் அமைந்துள்ளதாதலின், இதற்கு, நாகானந்தம் எனப் பெயராயிற்று. இதை இயற்றியவர் ஸ்ரீ ஹர்ஸன் என்னும் அரசர். அவர் ஏழாவது நூற்றாண்டின் மத்தியில் இருந்தவர். இக்கதையில் ஹிந்துமதம், பௌத்தமதம் இரண்டினுடையவும் கொள்கைகள் கலந்துள்ளன. ஜீவகாருண்யமும் தர்ம சிந்தையுமே இக்கதையின் நோக்கம். இது சமஸ்கிருதத்தில் நாடக ரூபமாயுள்ளது. இதற்கு முதல் நூல் 'கதா சரித் ஸாகரம்' எனும் கிரந்தமாகும்.

"என் அருமைத்தோழ! விருத்தர்களாகிய உன் பெற்றோர்களுடன் வெகு நாட்களாக இப்படிப்பட்ட வனவாச துக்கத்தை யனுபவித்து நீ வருத்த மடையவில்லையா? தந்தையின் பாத சேவையை விடுத்துக் கிடைப்பதற்கரிய இவ்விளம் பருவத்தில் தன்னிஷ்டப்படி இராஜ்யத்தை யனுபவிக்க நீ விரும்பவில்லையா?" என வினவினன்.

விதூஷகனுடைய வினவைச் செவியுற்ற ஜீமூதவாகனன் பித்ரு பக்தியின் மேன்மையை அவனுக்குத் தெரிவிக்க நினைத்து, "அன்பனே! ஆசைக்கிருப்பிடமாகிய இந்த யௌவன வயது அழிவுடையது என்பதை இவ்வுலகில் யார்தான் அறியார்? ஆனால், பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து இந்த யௌவனப் பருவத்தை நான் கழிப்பேனாகில், நான் கோரிய எண்ணம் நிறைவேறிற்றென்றே நினைக்கவேண்டும். தகப்பனருக்கு அருகில் இப்புவியில் நிற்கும்போது அழகு பெறுவதுபோல் ஸிம்மாசனத்தி லமருவதால் நான் சோபை யடைவேனோ! தந்தையின் அடியை வருடுவதால் உண்டாகிய சுகம் எனக்கு இராஜ்யத்தில் கிடைக்குமோ? இராஜ்ய பாரத்தைத் தாங்குவதில் எனக்குத் துக்கமே யன்றிச் சிறிதும் சுகமில்லை" என்று விடைதர, விதூஷகன் "ஆ! இவனுக்குத் தந்தையிடமுள்ள பக்திதான் என்னே! ஆகிலும், என் விருப்பமும் ஒரு நாளில் முடியும்" என மனதிலெண்ணி, "தோழ! இராஜ்ய சுகத்தை யனுபவிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் மாத்திரம் நான் கூறவில்லை. நீ செய்யவேண்டிய காரியம் வேறொன்றுமுண்டு." என்றான்.

ஜீமூதவாகனன் :—என் தந்தை காட்டில் வசித்தபோதிலும் இராஜ்யத்தின் பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குடிகள் யாதொரு குறையுமின்றி சந்தோஷமாக வாழ்கின்றனர். உறவினர்களோ தக்க மரியாதைகளைப் பெற்றிருக்கின்றனர். யாசகர்களோ தாம் விரும்பியதைவிட அதிகங்கொடுக்கும் கற்பகவிருக்ஷத்தையும் பெற்றிருக்கின்றனர். இன்னும் நான் செய்யவேண்டியது என்ன? உன் இஷ்டத்தைத் தெரிவி.

விதூஷகன் :—மிக்க ஸாகஸகுணமுள்ள மதங்கஹஸ்தகன் உன்னுடைய பகைவன். உன்னுடைய பிரதான மந்திரி தற்காலம் இராஜ்ய விஷயங்களைக் கவனித்து வருகிறான். இனியும் நீ சிம்மாசனத்தி லமராவிடில் உன் இராஜ்யம் நீடித்திருக்குமோ?

ஜீமூதவாகனன்:—அடே மூட! மதங்கன் இராஜ்யத்தைக் கவர்ந்து கொள்வானெனவா நினைக்கின்றாய்?

விதூஷகன்:—ஏன் கவர மாட்டான்?

ஜீமூதவாகனன் :—அப்படியானால் எதுதான் ஆகக்கூடாது? இன்றைக்கிருப்போரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லை. பரோபகாரத்துக்காகவே யன்றோ என்னுடலை நான் காப்பாற்றுகிறேன்? அப்படியிருக்க மதங்கன் என் இராஜ்யத்தைக் கொண்டால் தானென்ன?

இவ்வாறு இவர்களிருவரும் சம்பாஷித்துக்கொண்டே மலய பர்வதம் சேர்ந்தனர். தன் விருப்பத்தை நிறைவேற்றத்தக்க இயற்கை அழகை

ராஜ தர்சனத்துக்காவது, பிரபுவைக் காணும்படி செல்லும் போதாவது, குழந்தைகளிடம் போகும் போதாவது தங்கள் சக்திக்குஅனுகூலமான வஸ்துக்களைக்கொண்டு போகவேண்டும், வெறுங்கையுடன் செல்வது கூடாது.

யுடைய மலயமலையைக் கண்ட விதூஷகன் "சிநேகித! இவ்விடத்தில் எங்கும் நிறைந்துள்ள சந்தன மரங்களின் வாசனையும், நீர் வீழ்ச்சிகளின் குளிர்ந்த திவலைகளும் கலந்து வீசும் மலயமலைக் காற்று மனைவியின் புதிய ஆலிங்கனத்தைப்போல் சுகந்தருகிறது" என்றான். நேசனுடைய மாய வார்த்தையை மாயமென அறியாத ஜீமூதவாகனன் "ஆஹா! மலய பர்வதத்தின் அழகே அழகு! மதம் பிடித்த வாரணங்கள் தங்கள் கபோலங்களைத் தேய்ப்பதால் சந்தனம் பெருக, குகைகளில் கேசரிகள் கர்ஜ்ஜிக்க, வாரிதியின் அலைகள் மோத, முத்தாலாகிய பாறைகளில் சித்த மங்கைகள் செல்வதால் அவர்களுடைய சிவந்த கால்களின் அடையாளங்கள் பாறைகளில் படிய, அழகிற் சிறந்த மலயமலை என் மனதுக்கு ஆனந்தத்தைத் தருகிறது. இங்கு நாம் என் தந்தைக்குத் தகுந்த ஓர் வாசஸ்தலத்தைத் தேடுவோம். வா" என்று கூற, இருவரும் மலைமேலேறிச் சுற்றிப் பார்த்தனர்.

அங்கு சமீபத்தில் ஓர் தபோவனத்தைக் கண்ட விதூஷகன் "தோழனே! அதோ பார்! நாற்புறமும் மரங்களால் சூழப்பட்டு, ஹவிஸின் வாசனை வீசும் ஓர் தபோவனமிருப்பதுபோல் காண்கிறது. அவ்விடம் மிகவும் அழகாகத் தோன்றுவதால் நாம் வசிக்கத்தக்க இடம் அதுவே. ஆதலின், அங்கு சென்று அதைக் கண்ணாரக்கண்டு வருவோம்" என்று சொல்ல, இராஜ குமாரனும் அதற்கிணங்கினான்.

தபோவனத்தை யடைந்த ஜீமூதவாகனன் "ஆ! தபோவனத்தின் அழகைப் பார். முனிவர்கள் சந்தோஷத்தோடு வேதங்களில் தோன்றும் கடினமான விஷயங்களின் அர்த்தத்தை ஆலோசித்துக்கொண்டிருக்கின்றனர். தாபஸர்களின் பெண்கள் தபோவனத்திலுள்ள செடிகளுக்கு நீரூற்றித் தங்கள் அருமைப் பிள்ளைகளைப்போல் அவைகளை வளர்க்கின்றனர். அசையாப் பொருளாகிய மரங்களும் தம்மீதுள்ள வண்டுகளின் குரலால் நல்வரவு கூறி, பழங்களின் பாரத்தால் தம் கிளைகளாகிய சிரங்களை வணங்கி, அர்க்கியத்துக்குப் பதிலாக மலர்களைத் தூவி, இத்தபோவனத்தில் வரும் அதிதிகளுக்குச் சத்காரம் செய்கின்றன. இது நாம் சுகமாய் வசிக்கத்தக்க இடமே." என்றான்.

மற்றொரு பக்கத்தில் கண்ணோக்கிய விதூஷகன் "அருமை நேச! அதோ அவ்விடத்தில் கழுத்துகளை வளைத்து, புற்களை வாயில் வைத்த வண்ணம், சிறிதும் அசையாமல், கண்களை மூடிக்கொண்டு மான்கள் எதையோ கவனிப்பதுபோல் காண்கின்றன. அவை அப்படிச் செய்வதற்குக் காரணம் யாதாகயிருக்கலாம்?" என வினவினான். அவ்விடத்தைக் கவனித்துப் பார்த்தபின் ஜீமூதவாகனன் "ஆம், நீ சொல்வது உண்மையே. மத்யமம், பஞ்சமம், தாரம் முதலிய ஸ்வரங்களில் வீணையில் பாடும் ஓர் அழகிய பாட்டை அம்மான்கள் கவனித்துக் கேட்கின்றன. அப்பாட்டின் அழகிய ஓசையால் மருண்ட மான்கள் மேய்வதை மறந்து, மேய்ந்த புல்லும் வாயிலேயே நிற்க, பற்களை யசைக்காமல் சித்திரங்கள்போல் நிற்பதைப் பார்." என்றனன்.

எவ்வளவோ கஷ்டங்களையும் வீட்டுத் தலைவன் சகித்துக் குடும்ப நிர்வாகம் செய்தாலும், வீட்டிலுள்ள பெண்கள் அந்தக் கஷ்டங்களை யுணராமல் குடும்பத்தலைவனை வெகு பாடு படுத்திவிடுகிறார்கள்.

அதைக்கேட்ட விதூஷகன் "சினேகித! அப்படிப்பட்ட பாட்டை இத்தபோவனத்தில் பாடுபவர் யார்?" என்றான். இராஜ குமாரன் "ஓர் அழகிய பெண்மணியே தன் மெல்லிய விரல்களால் இப்பாட்டைப் பாடுகிறாளென நான் நினைக்கிறேன். அதோ பார். அக்கோயிலில் ஒரு பெண் பார்வதி தேவியை ஆராதித்துக்கொண்டு, கையில் வீணையை யேந்திப் பாடுகிறாள்." என்றான்.

பின்பு விதூஷகன் "அப்படியானால் நாமும் கோயிலுக்குச் சென்று அம்பிகையை வணங்கி வருவோமே. ஆலயந்தொழுவது சாலவும் நன்று. கோயிலின் அழகையுங்கண்டு, தேவியையும் வணங்கி, அப்பெண்மணியின் பாட்டையுங் கேட்டுவரலாம்" என்றான். அரச குமாரன் சிறிது யோசித்து "தோழ! நீ சொல்வது சரியே: தேவதைகளை வணங்குவது முறையே. ஆனால், இவ்விளங்குமாரியைக்காண்பது தகுதியன்று. ஆதலின் இப்புதரில் மறைந்திருந்து தக்க சமயத்தில் கோயிலுட் செல்வோம்." என்றான்.

விதூஷகனும் அதற்கு உடன்படவே, அவ்விருவரும் ஓர் புதரில் ஒளிந்திருந்து கோயிலுள் நடக்கும் விஷயங்களைக் கவனித்தனர்.

2. காதலர்களின் முதற் சந்திப்பு.

ஸித்தரென்னும் தேவ ஜாதிகளின் அரசனாகிய விச்வாவஸு என்பவன் ஜீமூதகேதுவின் நண்பன். அவனுக்கு மித்ராவஸு என்னும் ஓர் புத்திரனும், மலயவதி என்றொரு புத்திரியும் பிறந்தனர். மித்ராவஸு வித்தை, பராக்கிரமம், குணம் முதலியவைகளில் நிகரற்றவனா யிருந்தமையால் நாளடைவில் இளவரசப் பட்டத்தைப் பெற்றான். ஸௌந்தரியத்தில் ஒப்புயர்வற்ற மலயவதியும் விவாகப் பருவத்தை யடைந்திருந்தாள். அழகு மாத்திரமேயன்றி ஸ்திரீ ஜாதிக்கு வேண்டிய மற்ற குணங்களும் அவளிடம் குறைவின்றி இருந்தன. தனக்குத் தக்க கணவனைப் பெற நினைத்த அம்மங்கை பிரதி தினமும் கௌரி தேவியின் கோயிலுக்குச் சென்று அத்தேவியைப் பக்தியுடன் ஆராதித்து வந்தாள்.

பக்தர்களுடைய ஆதீனத்திலிருப்பவளும் கருணைக்கடலுமாகிய கௌரி தேவி எத்தனை நாள்தான் மலயவதியைப் பரீக்ஷிக்கக்கூடும்? மலயவதிக்கு தேவியினிடமுள்ள பக்தியோ எள்ளளவேனும் குறைவுபடவில்லை. கடைசியாக, அவளுடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றே கௌரிதேவி தீர்மானித்தாள். என்றைக்குத் தேவி மலயவதிக்கு வரந்தர விரும்பினளோ, அன்றையதினமும் வழக்கப்படி ஸித்தராஜகுமாரி தன் தோழியாகிய சதுரிகையுடன், ஒரு கையில் வீணையையும், மற்றொரு கையில் பூஜைக்கு வேண்டிய சாமக்கிரியைகளையும் ஏந்திக் கோயிலுக்குச் சென்றாள். ஆனால், இன்றுதான் நம்முடைய கோரிக்கை நிறைவேறப் போகிறது என்பது அவளுக்குத் தெரியுமோ? ஜகதம்பிகையின் சங்கல்பத்தை யார்தான் அறியக்கூடும்?

காவலுவுக்கு ஒரு பழம் விற்கிறது. நாம் சென்ற இடத்தில் அங்குள்ள குழந்தையிடம் அந்தப் பழத்தைக் கொடுப்பதால் அடைகிற கௌரவம் காவலுவைக் கொடுப்பதால், பெறமுடியாது. இவ்விதமே, சில இடங்களில் பல பண்டங்களைக் கொடுப்பதைவிடப் பணத்தைக்கொடுத்தால் அதற்கு ஒரு விசேஷ மதிப்பு ஏற்படுவது வழக்கம்.

வழக்கப்படி கோயிலுட் சென்ற மலயவதி தேவியைப் பணிந்து பல பாடல்களைப் பாடினுள். வெகு நேர மானதைக் கண்ட சதுரிகை "இராஜ குமாரியே! இத்தனை நாழிகையாகப் பாடியும் உன் விரல்களில் நோவெடுக்கவில்லையா?" என்று கேட்டாள். மலயவதி "அடி! தேவியின் முன்பு வீணை வாசிக்கும்போது சிரமமும் உண்டாகுமோ?" என்று கடிந்து பேசினுள். அதைக்கேட்ட சதுரிகை "தோழி! வீணுகக் கோபிக்காதே. நான் சொல்லுவதின் உண்மையான கருத்து உனக்கு விளங்கவில்லையா? கருணையில்லாத தேவியின்முன் எவ்வளவு நேரம் பாடினுல்தானென்ன? கன்னிகைகளால் செய்யக்கூடாத நியமத்தோடு அவளை ஆராதித்தும் அவள் அனுக்கிரகிக்க வில்லையே." என மறுமொழி கூறியும் மலயவதி தன் காரியத்தை விடவில்லை.

சிறிது நாழிகைக்குப்பின் மறுபடியும் சதுரிகை "மலயவதி! கருணையில்லாத இத்தேவியின்முன் என் பாடுகிறுய்?" எனக் கேட்க, அரசகுமாரி "அடி! கௌரிதேவியை வீணுக நிந்திக்காதே. இப்பொழுதுதான் அவள் என்மீது கருணைகூர்ந்தாள்" என்றனள். சதுரிகை "அதென்ன? சொல்" என்று வினவ, மலயவதி "இப்போதுதான் நான் இவ்வீணையை வாசித்துக்கொண்டிருக்க, கனவில் தேவி என்முன் தோன்றி, குழந்தாய் மலயவதி! வீணையில் பாடும் உன் அதிசய சக்தியையும், பாலர்களால் பெறுவதற்கரிய உன் பக்தியையும் கண்டு மகிழ்ந்தேன். வித்தியாதர சக்கிரவர்த்தியின் குமாரனுகிய ஜீமூதவாகனன் சீக்கிரமாகவே உன்னை மணந்துகொள்வான் எனத் திருவாய்மலர்ந்து மறைந்தனள்" என்ருள். இதைக்கேட்ட சதுரிகை களித்து "அப்படியானுல் கனவு என்று என் கூறுகிறுய்? மனதிலுள்ள வரத்தைத் தேவி கொடுத்துவிட்டாளெனச் சொல்" என்றனள். தன் தோழியின் மனோரதம் நிறைவேறுமென்பதைக் கேட்ட சதுரிகை மிகக் களிப்புற்றனள். தனக்குத் தக்க மணவாளனைப் பெறுவோமென மலயவதியும் சந்தோஷித்தனள்.

(தொடரும்.)

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

இந்தியாவோ மகா விசாலமான தேசம். அதிலடங்கிய வெவ்வேறு ஸமூகங்களும் கோடிக் கணக்கான சங்கியையுள்ளன. அநேக நூற்ருண்டுகளாகத் தனியான சரித்திரத்தையும், நாகரிகத்தையும் பெற்றுள்ளன. இந்தச் சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் சரீரம்போலுள்ள அவரவர்களின் பாஷையை மாற்றி, வேறு பொதுப்பாஷையை அனுஷ்டிக்க வேண்டுமென்பது தேசாபிமானிகளுடைய ஆவல்கொண்ட விருப்பமாயிருந்தாலும், தத்தம் பாஷையை மேன்மையாகக் கருதிப்போற்றுகிற அந்தந்த ஸமூகங்களின் இயல்பை மாற்றுவது சாத்தியமல்ல.

ஃ

பள்ளிக்கூடத்தில் ஒருவன் சிறுநீர் கழிக்க உபாத்தியாயரிடம் அநுமதி பெற்றுச் சென்ருல், வேறு சிலர் ஒவ்வொருவராய் உத்தரவு கேட்பது வழக்கம். ஒரு கிராமத்தில் ஐந்தாறு வயதுப் பெண்களிருந்து, ஒன்று பெரிய மனுஷியானுல், மற்றவர்களும் ஒவ்வொருவராய்ப் புஷ்பிணியாகி அப்பதவியை யடைவார்கள். ஊரிலே புது மோஸ்தராக ஒரு ஷோக் கிளம்பினுல், உடனே ஒவ்வொருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவராக நடிக்கத் தொடங்குவது வழக்கம்.

கவிதா விலாஸம்



தீபாவளியில்

ஏழைப் பிராணிகளின் முறையீடு.

எப்போதும் இந்தத் துன்பமா?—எங்களுக்(கு)
எப்போதும் இந்தத் துன்பமா?

ஆடு

எதுக்குப் பிறந்தோம் சாது ஆடுகளாய் நாங்கள்?
எங்களைப் பிராணிகளாய் எண்ணிலார் மானிடரே! (எப்)

பூமியில் அன்பில்லாப் பொல்லாதவர் எங்களை
மாமிச மூட்டையைப்போல் மதித்து மகிழ்கிருரே! (எப்)

தீட்டிய கத்தியினுல் வாட்டுகிருர் எங்களை;
ஊட்டி வளர்த்ததுவும் ஊன் உணவைப் பெறவே! (எப்)

அம்மாவென்றே கதறி ஆருயிர் துறக்கிருேம்;
எம்மாசை உடல் அந்தோ இரத்தமயப் படுதே! (எப்)

வந்த தீபாவளியால் சிந்தை பெரிதும் நொந்தோம்;
எந்த ஊரிலும் அன்று எங்களைக் கொல்லுகிருர்! (எப்)

தீபாவளிக்கழிக்கும் திண்டிக்கும் தப்பி நாங்கள்
திண்டாட்டம் நீங்கியே கொண்டாட்டம் போடுவோமோ? (எப்)

நாக்கின் சுவைதனக்காய் நல்லுயிர் பலவற்றைப்
போக்குபவர் கொண்டாட்டம் போவ(து)இனி எந்நாளோ? ()

எங்கள் எருவினும் எவ்வெரு உயர்ந்தது?
எங்களின் பாலினும் எப்பால் சிறந்ததோ? (எப்)

ஆட்டின் அருமை உணர்ந்(து) ஆதரிப்போர் இந்த
நாட்டில் பெருகுகிற நன்னுள் என்றே வருமோ? (எப்)

ஓரிடத்திற்குப் போய்விட்டுத் திரும்பிவரும் வழியில் காய்கறிக் கடைக்குப்போக எண்ணியவன். அதை மறந்துவிட்டுப் போய்க் கொண்டிருக்கையில், பல வண்டிப் போக்குகளின் மத்தியில் இவன் சற்று நிற்கும்படியாக, அந்த சமயம் ஒருவன் காய் கறியுடன் எதிர்ப்பட, உடனே இவனுக்கும் நினைவு வந்து, தானும் காய் கறி வாங்குவதற்காகத் திரும்பிச் செல்கிருன். ஞாபக மறதிக்கு அதைக் கூட இருந்து தெரிவிக்க ஒருவர் தேவை.

II

கோழி

கோக்கரக் கோ எனவே கூவி எழுப்பும் எமை
கொஞ்சமும் அருளின்றி கொன்றிடலும் நீதியோ? (எப்)

கொண்டை யழகுடனே கோல இறகுகளும்
கண்டு களிக்கும் மதி கயவர்களுக் கிலேயோ? (எப்)

எத்தனை மனைவிகள் எனினும் அடக்கியாளும்
எங்களை வதைப்பதும் உங்களுக்கு முறையோ? (எப்)

பதறி இறகுகளைப் படபட என்றடித்துக்
கதறித் துடிதுடித்தும் கயவர் இரங்கிலரே! (எப்)

வந்ததே தீபாவளி! எந்தம் இனம் முழுதும்
வதைக்கப்படுவ(து) எண்ணிப் பதைக்கிறோம் எம் மனமே! ()

முட்டை சுவை கண்டு முட்டை உடல் சுவையில்
மோகம் பெருகுவதும் முறைகோலோ உங்களுக்கே? (எப்)

III

புரு முதலியன

ஆணும் பெண்ணும் கூடி அன்புடனே வாழ்ந்துவரும்
அருமைகொள் எங்களையும் அறுப்பதும் அடுக்குமோ? (எப்)

எங்கட்கு தீபாவளி இன்பம(து) இல்லையோ?
உங்களுக்கு மகிழ்ச்சி; எங்களுக்குத் தொல்லையோ? (எப்)

வானில் திரியும் எமை மனத்தில் அருள் இன்றி
வலையை யிட்டுப் பிடித்து வதைத்திடலும் தருமமோ? (எப்)

தேளையும் நண்டையும் தீய வெம் பாம்பையும்
தீபாவளி விருந்துக்குச் சேர்த்துக் கொளலாமே! (எப்)

தீதேதும் செய்தறியாத் தீனராம் எங்களையும்
ஏதுக்கோ கொடுமையாய் இம்சித்திடுவதே! (எப்)

தூய வானில் பறக்கும் சுதந்திர வாழ்வுடைய
சூதறியா எங்களின் துயர் போவ(து) எக்காலம்? (எப்)

பரமனே! நாங்கள் படும் பாட்டை எண்ணிப் பாராயோ?
பன்னரிய எம் துயரைப் பரிவு கொண்டு தீராயோ? (எப்)

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.



இராஜாம்பாள்

26—ம் பதிப்பு:—

[அழகிய மூன்று படங்களுடன் கூடிய கீர்த்திவாய்ந்த துப்பறியும் நாவல். ஸ்ரீமான் ஜெ. ஆர். ரங்கராஜு அவர்கள் இயற்றியது. சைதாபேட்டை 'ஜகந்நாதபாக்' ராஜு பிரஸில் பதிப்பித்தது. விலை அணு 12.]

புஸ்தக வியாபாரம் மிக்க மந்தமென்று சொல்லப்படும் இக்காலத்தில் "இராஜாம்பாள்" நாவல் 26-ம் பதிப்பு வெளிவந்துவிட்டதைக் கண்டு களிப்புறுகின்றோம். இந்நாவலின் முதற்பதிப்பு 1907-ம் வருஷத்தில் வெளிவந்தது. அதன்பின் வருஷமொரு பதிப்பாகி இப்பொழுது 26-ம் பதிப்பைப் பெற்றிருப்பது தமிழ்நாட்டில் வேறெந்த நாவல்களுக்குமில்லாத சிறப்பாகும். ஸ்ரீமான் ரங்கராஜு அவர்கள் இராஜாம்பாளைவிடச் சிலாக்கியமான அமைப்பில் தமது மற்ற நாவல்களை இயற்றியிருந்தாலும், இராஜாம்பாள் நாவலில் எவரையும் வசீகரிக்கக்கூடிய ஒரு 'சொக்குப்பொடி' இயற்கையாகவே சேர்ந்திருக்கின்றது. சுலபமான கற்பனைகளோடும், அதிக சிக்கலின்றிக் கதை தெளிவாகவும், நீரோட்டமாக வெகு வேகத்துடன் மடமடவென்று செல்லும் தன்மையதாகவும் அதிசாதுர்யத்துடன் முடிக்கப்பெற்றிருப்பதால்" மூன்றாம்வகுப்பு படித்த சிறுவர் சிறுமியரும் பிரயாசையின்றி வாசித்து மகிழக்கூடியதாயிருக்கின்றது. கதையில் தோன்றும் விஷயங்கள் யாவும் தமிழ்நாட்டுச் சம்பவங்களே யாதலின் வாசிக்க மிகு ருசிகரமாயிருக்கின்றது. கதையினூடே நீதிகளும் அனுபவங்களும் கலந்திருத்தலால், அது கதையைப் பெரிதும் உயர்தரமுடையதாக்குகின்றது. "இராஜாம்பாள்" நாவலை ஸ்ரீமான் ரங்கராஜு அவர்கள் ஆதியில் 1907-ம் வருஷத்தில் எழுதத் தொடங்கிய நேரம், இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் ஆரம்பத்தில் வியாபாரிகளாக வந்த அதிர்ஷ்டவேளையைப் போன்றதென்று கூறிடில் பொருந்தும். "இராஜாம்பாள்" ஐம்பதாம் பதிப்பைப் பெற்றுப் 'பொன்விழா' கொண்டாடுகையில், அதன் நிகரிலா ஆசிரியரான ஸ்ரீமான் ரங்கராஜு அவர்களும் அதனை உடனிருந்து காணவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

மற்றொரு விசேஷத்தையும் இங்கு தெரிவிக்க விரும்புகிறோம். "வரதராஜம்" நாவலின் மூன்றாம் பாகமான "டாக்டர் விஸ்வநாத்" என்ற அற்புத நாவலைச் சென்ற எழு வருடங்களாகத் தமிழபிமானிகள் எதிர்பார்த்தவாறுள்ளார். ஸ்ரீமான் ரங்கராஜு அவர்கள் இப்பொழுது

சிலர் தங்களின் இனத்தாரையே பல வழிகளில் தொல்லைக்குட்படுத்தி விட்டு, பிறகு அவர்களிடமே நல்லவர்கள்போல் நடக்கின்றனர். சர்ப்பத்துக்கு நல்ல பாம்பென்றும், செவ்வாய்க்கிழமைக்கு மங்களவாரமென்றும் பெயர் கிடைத்திருப்பதுபோல் துர்க்குணிகளான சிலருக்கு ஈசுவரனுடைய பெயரை வைத்திருக்கிறார்கள் போலும்!

"டாக்டர் விஸ்வநாத்" என்ற நாவலைத் தமது வழக்கம்போலவே அதிஸமத்காரமாய் எழுதிப் பூர்த்திசெய்துவிட்டார். அது விரைவாக அச்சிடப்பட்டு வருகின்றது. 1934-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் நிச்சயமாய் விற்பனைக்குத் தயாராகிவிடும். அதற்குப் பிறகு, மற்றொரு உன்னத நாவலான "ஜீவ காந்தா" 1934-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் வெளிவருமென்றும் அறிகிறோம்.

சோவியத் ருஷியா :—

[பண்டித ஜவஹர்லால் நேரு எழுதியதின் தமிழ் மொழி பெயர்ப்பு. ஸ்ரீமான் ரா. சுப்பிரமணியம் பதிப்பாசிரியர். உத்தமபாளையம் 'பாரதி' புஸ்தகசாலையார் வெளியிட்டது.]

இது தற்காலத்தில் அறிவு விளக்கம் பெறுதற்குத் தகுதியான துணை நூலாகும். உத்தமப் பெரியோரான ஜவஹரிலால் தமது ருஷிய தேச ஸஞ்சாரத்தில் தம் உள்ளத்தே எழுந்த புத்துணர்ச்சிகளை யெல்லாம் இந்நூல் வழியாகப் பாரத நாட்டினருக்குத் தெரிவிக்கின்றார். ஒரு தேச ஸஞ்சாரியின் அனுபவங்கள் மகத்தான மதிப்புடையன. உணர்ச்சிகளைப் பெருக்குவன. புது உலகத்தைத் தோற்றுவிக்கச் செய்வன. நூதனக் கருத்துகளை வளர்ப்பன. நற்புது வாழ்வு தருவன. சோவியத் ருஷியாவையே நேரில் கண்ட தன்மையதாக இந்நூலின் அமைப்பு விளங்குகின்றது. நல்ல காகிதம், நல்ல பதிப்பு. கண்ணையும் கருத்தையும் கவரவல்ல 21-அபூர்வ ஆப்டோன் படங்களுடன் உள்ளது. அருமையும் பெருமையும் வாய்ந்த நூல். ஆதரிக்குந் தன்மைக்குத் தக்கபடி அபிவிருத்தியு மிருக்கும். விலை ரூ. 1¼.

சந்தா நேயர்களே !

நான் பிரதி மாதமும் 15-ந்தேதி யன்று, அதாவது தமிழ் மாதம் முதல் தேதியன்றே சென்னையை விட்டு எனது காரியாலயத்தினின்று வெளிப்போந்து, தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தும், சில அன்பர்கள் என்னுடைய வரவைக் காணாது மனக்கவலைப்படுவது கேட்க யான் மிக வருந்தலாயினேன். என்னைப் பரிபாலிக்கும் தலைவர், தங்களுடைய விலாசத்தை நன்றாகக்குறித்து என்னைத் தங்களிடம் காலம் தவறாது சேர்க்கும்படி, காருண்ணிய கவர்ன்மெண்டின் தபால் ஆபீசுக்கு அனுப்பிவிடுகிறார். நான் அப்படித் தங்களை நாடி வந்தடையாவிடில், உடனே நேயர்கள் என் தாமதத்தைப்பற்றித் தங்கள் ஊரைச்சேர்ந்த போஸ்ட் மாஸ்டருக்குத் தெரிவித்தால் நான் ஒழுங்காகத் தங்களிடம் வந்தடைந்து விடுவேன்.

தங்கள் செல்வி,

அமிர்தினி.

டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையார்

ஜீவியச் சுருக்கம்.

1847—1933.

எப்போதுமே பிரபலஸ்தர்களின் சரித்திரத்தில் நிவர்த்திக்க மாளாத ஒரு பெருங்குறையிருந்து வருவதுபோலவே, ஸ்ரீ பெஸண்ட் அம்மையாரின் ஜீவியத்திலும் நற்கணவன் அமையாத தீராத் துயர் புகுந்து வாட்டி யிருக்கிறது. பர்த்தாவினால் துன்புற்ற பெண்மணிகளில் ஸ்ரீ பெஸண்டும் ஒருவராவர். அவர் பெற்ற இரு மக்களைக்கூட அவரிடத்தில் கணவன் விடவில்லையெனில், அவரது இல்வாழ்க்கைச் சுகம் எவ்வித மிருந்திருக்குமென்று சொல்லவேண்டியதில்லை.

ஃ

ஸ்ரீ அன்னிபெஸண்டு 1-10-1847-ம் வருஷத்தில் பிறந்தவர். அவருடைய தந்தையின் பெயர் வில்லியம் பேஜ்வுட். அவர் லண்டனில் ஒரு டாக்டராவர். அன்னை அயர்லாந்து தேசத்துப் பெண்ணாவார். ஸ்ரீ பெஸண்டுக்குச் சிறு வயதிலேயே கல்வியில் ஆர்வம் அதிகமாயிற்று. 1867-ம் வருஷத்தில் விவாகம் நடந்தது. கணவனார் ஒரு பாதிரி. அவர் பெயர் ரெவரண்டு பிராங்க் பெஸண்டு. அவர் கொடியவராய்த் தமது மனைவியை நடத்தலானார். இத்துன்பத்தில் பெஸண்டின் மனம் புண்ணுகித் தவித்தது. இல்வாழ்க்கை ரம்மியமாயில்லை. கண்ணீராக இருந்தது. 1869 ம்வரு பெண் குழந்தையும் மறு வருஷம் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. 1871-ம் வருஷத்தில் கக்குவான் இருமலால் குழந்தைகள் வெகு பாடுபட்டன. குழந்தைகட்குச் சற்று குணம் தோன்றியதும் ஸ்ரீ அன்னிபெஸண்டு வியாதிப் படுக்கையாகி, மூன்று வருஷங்கள்போலக் கனத்த வாதனைப்பட்டதில், கடவுள் கருணையுள்ளவராயின் இவ்விதம் வாட்டுவரா என்ற எண்ணங்களுண்டாகி, நாஸ்திகராய் மாறிக் கணவன் கோயிலுக்கு அழைத்தும் வர மறுத்து விட்டார். நாஸ்திகத்தில் முதிர்ந்து போனார். தெய்வமேது என்று பேசத் தொடங்கினார். பர்த்தாவை விட்டு விலகித் தனிவாழ்க்கையானார். இந்த சமயம் பெஸண்டின் தாயும் கண்மூடினாள். ஸ்ரீ பெஸண்டு வேறு ஆதரவின்றிப் பத்திரிகைகளுக்கு எழுதி ஜீவிக்க முற்பட்டார்.

ஃ

மிஸ்டர் பிராட்லா காமன்ஸ் சபையில் ஒரு மெம்பர். அவரது நட்பு ஸ்ரீ பெஸண்டுக்குக் கிடைத்தது. இவ்விருவருமாகச் சேர்ந்து அமெரிக்காவில் வெளியான கர்ப்பத்தடை சம்பந்தமான ஒரு நூலை இங்கிலாந்தில் வெளியிட்டனர். பிரஜா விருத்தியைத் தடுக்கும் போதனைகள் அந்நூலில் நிறைந்திருந்தது. அது அசங்கித நூலென்று ஒரு வழக்கு இவ்விருவர் மீதும் வந்ததாயினும்,

முடிவில் இவர்கள் பக்கமே தீர்ப்பாயிற்று. இத்தகையனுலே வெளியிட்ட பெண்ணிடம் தமது குழந்தைகளை விட முடியாதென்று ஸ்ரீ அன்னிபெஸண்டின் கணவர் ஒரு வழக்கு தொடர, குழந்தைகளைத் தந்தையின் வசம் ஒப்புவிக்கும்படித் தீர்ப்பாயிற்று. அவ்வப்போது தமது குழந்தைகளைப் பார்த்துத் திரும்ப மட்டும் ஸ்ரீ பெஸண்டுக்கு அவரது கணவனுர் அனுமதி தந்தார். குழந்தைகளைக் கண்டு திரும்புகையில் படும் பிரிவின் வேதனை ஸ்ரீ பெஸண்டுக்குக் கொடுந் துன்பம் விளைத்ததால், மக்களைப் பார்க்கச் செல்வதையும் நிறுத்திவிட்டார். உலகப் பிரசித்தி பெற்ற இந்த அம்மையாரின் இல்வாழ்க்கை இவ்விதம் கண்ணீர்ப் பெருக்காய், தவிப்பாய், புத்திரசோகமாய் முடிந்தது.

ஃ

இதற்குப் பின் மாடம் பிளாவட்ஸ்கி அம்மையார் வரைந்த இரு பெரு நூல்களை ஸ்ரீ பெஸண்ட் வாசிக்க நேர்ந்து, பிளாவட்ஸ்கி அம்மையை நேரில் சந்தித்துப் பேசியதில், தியாஸபிகல் சங்கத்தின் கொள்கையில் மிக்க பிரீதியுடையவரானுர். அதன்பின் தமது 46-வது வயதில் 1893-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு முதன்முதலாக வந்து சேர்ந்தார். பிறகு தியாஸபிகல் சங்கத்திற்குத் தலைவரானுர். (இதற்குப் பின்னுள்ள விவரங்களை "அமிர்த குணபோதினி" 344-ம் பக்கத்தில் காண்க.) ஸ்ரீ காசியில் ஹிந்து காலேஜை ஸ்தாபித்து, ஹிந்துமத தத்துவங்களின் அரிய நுட்பங்களை யாவரும் அறியுமாறு அற்புதமாய்ப் பிரசாரம்செய்து ஹிந்துவாகவே விளங்கினுர். பிறகு மாறுவதானுர். "ஹோம் ரூல் லீக்" சபையை ஏற்படுத்தி இந்தியாவுக்கு சுயாட்சி வேண்டுமென்று கிளர்ச்சி செய்து, "நியூ இந்தியா" என்ற ஆங்கிலத் தினசரியையும் வெகு பிரபலமாக நடத்தினுர். சென்னை அரசாங்கத்தார் இதற்காக அவரைப் பிடித்துப் பந்தோபஸ்தில் வைத்துப் பிறகு விடுவித்தனர். விடுதலைக்குப் பிறகு அவர் மாறிவிட்டார். 1917-ம் வருஷத்திய "கல்கத்தா காங்கிரஸின் அக்கிராஸனரானுர். பிறகு, ராஜ்ய விஷயங்களினின்று ஒதுங்கிக்கொண்டார். இவர் தமது ஜீவியத்தில் 411-புஸ்தகங்கள் வரையில் எழுதியுள்ளார். இவ்வளவு நூல்கள் எழுதினேர் எவருமில்லை. கடைசியாக, சென்னை அடையாற்றில் தமது 86-வது வயதில் 20-9-33-ல் காலமானுர்.

தான் அதிகம் கற்றுவிட்ட நிலையிலிருந்து, பிறருக்குப் போதிக்கக்கூடிய சக்தியையும் அடைந்துவிட்டவன் உலகத்தினரால் புகழப்படுவதற்கு மட்டும் உரியவனுகலாமேயன்றி, அந்தரங்க சுத்தியில் தன்னையே மிக்க மோசப்படுத்திக்கொண்டவனுகவும் ஏமாற்றிக் கொண்டவனுகவுமே முடிந்து விடுவது பல இடங்களிலும் கண்ட அனுபவம். அவனுடைய அதிகப் படிப்பானது அவன் செய்யும் எந்தத் தவறுதலுக்கும் ஒரு தக்க சமாதானத்தைக் கொண்டுவந்து போட்டு அவனைத் தேற்றித் தைரியப்படுத்தி விடுகிறது. அதனுல் வெளிக்குப் பரோபகாரியாயும், உள்ளுக்குப் பொய்—மோசம்—ஏமாற்றுதல்களுடன் கொடிய விஷமியாயும் சுயகாரிய மிருகமாயும் முடிகிறுன். பிறகு அவன் தன்னையே ஒழுங்குபடுத்திக்கொள்ள முயன்ருலும் திருத்தமுடியாத கோணக் கட்டையாய் விடுகிறுன். வெளிக்கு மகா வேதாந்தி; உள்ளுக்கோ கொடிய காமி.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

தீபாவளியிலே திண்டாட்ட கொண்டாட்டங்கள்!



அப்பபடிச் சொல்லடா என் ராஜாவே! தீபாவளி எப்போதப்பா வருகிறது? ஐப்பசி மாதம் பிறந்த அடுத்த நாளே அதுவும் தொடருகிறது! தீபாவளி என்றாலே ஒரு பெருத்த உற்சாகமடா அப்பா! வயது சென்ற தாதா பாட்டிகளும் சரி, நல்ல வாலிபர்களும் யுவதிகளும் சரி, சிறுமிகளும் சிறுவர்களும் சரி, எல்லோரையுமே ஒரு துள்ளு துள்ளி ஆநந்தம் பொங்கிக் குதிக்கச்செய்து விடுகிறதய்யனே! ஹா! எவ்வளவு கனத்த வியாபாரங்கள் தீபாவளியின் பேரைச் சொல்லிக் கொண்டு நடக்கின்றன! எவ்வளவு மோசங்கள் பித்தலாட்டங்களெல்லாம் தீபாவளியில் கலக்கின்றன! எவ்வளவோ பேர் இந்தத் தீபாவளியால் பிழைத்துப் போகிறார்கள்! எவ்வளவோ பணங்கள் செலவாகின்றன! ஏராளமான நகைகள் பாங்கியில் அடகுக்குப் போய்க் குந்துகின்றன! கடன் பட்டாவது தீபாவளி சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்று நினைக்கிறவர்களுக்குக் கணக்குண்டா? வீட்டுக்காரன் தீபாவளி செலவுக்குத் திண்டாடி நின்றாலும், வீட்டிலுள்ளவர்கள் அவனைச் சும்மா விட்டு விடுவார்களா? செலவிடுகிறவனுக்குத் திண்டாட்டம்! துணி மணி பட்டாடைகளைச் சுகமாய்க் கை நீட்டிப் பெற்றுக்கொள்வோர்களுக்குக் கொண்டாட்டம்! வரவு செலவு நிர்வாகம் கண்டு கொள்ளாதவர்களுக்கும், பணக்கஷ்டம் தெரியாதவர்களுக்கும் எவ்வளவு கடன் பட்டு வாங்கித் தந்தாலும் திருப்தி யிராது. எல்லா செலவுகளும் செய்த வீட்டுக்காரன் தீபாவளி தினத்தில் முதல் தோசைத் துண்டை எடுத்து வாயில் வைப்பதற்குள் வீட்டுக்குள்ளே எவ்வளவோ கலகங்கள் தோன்றிக்கொள்ளும்! வீட்டுக்காரி தனக்கு நல்ல சேலை புடவை எடுக்கவில்லையென்ற முணு முணுப்பை வீட்டுக்காரன் புசிக்கிற நேரத்திலேதான் முழுதும் காட்டி ஒரு ஆட்டம் ஆடிவிடுவாள்!

அதிர்ஷ்டமென்பது தன் பங்குக்குக் காணப் பொருளாயிற்றென்று துக்கப்பட்டுக்கொண்டு பெருமூச்செறிந்து மனஞ்சோர்ந்து சோம்பினவர்கள் பலராவர். லாட்டரியில் ஏமாறியவர்களிடம் இதைக் காணலாம்.

தூரத்திலிருந்த போதிருந்த தீபாவளியின் எதிர்பார்ப்புச் சந்தோஷம் தீபாவளியன்று இல்லாமற்போய் சச்சரவில் திண்டாடியவர்களுமுண்டு! சிறுவர் சிறுமிகளைத் திருப்திபடுத்த பட்டாசு மத்தாப்பு வாணங்களில் போடுகிற பணம் ஒரு பெரிய வயிற்றெரிச்சல் சங்கதி! பணம் அதிகமாகி விட்டதாகக் காணுமே தவிர, கைக்கு வந்த பட்டாசு முதலியவைகள் மிகச் சொற்பமாகவே தோன்றும். அமாவாசை யொன்றைப் பின்னுக்கு வைத்துக்கொண்டு தீபாவளி வருவதில் வியாதிப் படுக்கையிலுள்ளவர்களின் பாடு கனத்த சோதனையாகவும், இன்னும் மரணமாகவுங்கூட ஆய்விடுவதுண்டு! திண்டாட்டக்காரர்கள் திண்டாட்டத்தைக் கண்டு கதற, கொண்டாட்டக்காரர்கள் கொண்டாட்டத்திலே களிப்புற்றுப் பொங்க, இப்படியான ஆரவாரத்தில் தீபாவளி தலைநீட்டித் துள்ளிக்கொண்டு நிற்கும். இவ்வாறான விநோதங்களை விகடன் ஒரு சுற்று சுற்றிப் பார்த்து வரலாமென்று என் கோணைத்தடியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டேன்! விகடனுக்கு எதிரே ஒரு வீட்டுக்காரர் வரவும், அவர் முகம் ஏதோ சந்திர கிரகணம் பிடித்ததுபோல் இருண்டிருந்தது. அவரை விகடன் கண்டு, எப்படி இந்த வருஷத்துத் தீபாவளி?—எல்லாம் சந்தோஷந்தானே என்றேன்! அதற்கு அந்த,

வீட்டுக்காரர்:—

என் இனி செய்வேன்? ஏதினிச் செய்வேன்?
என்னை வினவிய இன்பநல் விகடா!
எனை தீபாவளி இன்பம் ஊட்டிடுமோ?
மனை வரி இந்த மாதம் தரவும்
பழய கடனும் பாக்கி செலுத்தவும்
உழவு நடத்தவும் உற்றிடும் செலவுகள்
விஞ்சிடுகின்றன; வினையேற்(கு) இன்று
எஞ்சும் பணமாய் இருப்பது கொஞ்சமே!
செப்பு வீட்டுச் செலவை நடத்தல்
எப்படி யென்றே ஏங்கி நிற்கின்றேன்!
புதிய துணியும் புடவையும் எடுக்க
அதிக பணத்திற்(கு) ஆம் வழி என்ன?
உள்ள கடனே ஒழியாதபோது
உள்ளம் துணிந்து ஒருவரைக் கேட்பதோ?
கண் கலங்குகிறேன் காண் விகடேசா!
புண்படும் என்துயர் பொறுப்ப(து) எப்படியோ?
என் துன்பத்தை யார் நினைக்கின்றார்?
என் துயர் நீங்கல் எவ்விதம் விகடா?

என்று தன் கஷ்டங்களை யெல்லாம் வெகு நீட்டமாகச் சொல்லத் தொடங்கிக்கொண்டார். இவ்வளவு சொல்லிக்கொண்ட பிறகுங்கூட, எப்

கோவில் தெய்வம் பஞ்சாயத்தார் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. பஞ்சாயத்தாரோ தங்களுடைய பேராசையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

படியாவது தீபாவளியை நடத்திப் போடவேண்டுமென்று ஒரு முடிவு கட்டிப் பேசினர்! அவரை வழியனுப்பிவிட்டு விகடன் ஆற்றங்கரைப் பக்கம் சென்றேன். அங்கு பெண்களின் பேச்செல்லாம் தீபாவளியின் பேச்சுகளாகவே இருந்தன. இந்த வருஷத்துத் தீபாவளிக்கு எப்படியம்மா ஏற்பாடு என்றேன். அதற்கு,

ஒரு பெண்:—

முன் வருடத்தில் மோசம் போனேன்!
நன் மதிப்புண்டோ நயமாய் வாங்கும்
சிட்டித் துணியில்? சிச்சி! பயனிலை!!
நாட்டுத் துணியில் நாகரீகமிலை!
சில்கில் எடுப்பின் சீக்கிரம் கிழியும்!
சொல்வீலை கேட்டுச் சோர்ந்து விடாது
பட்டுப் புடவையைப் பார்த்து வாங்கிடில்,
கெட்டியாய் உழைக்கும்; கீர்த்தியும் சேரும்!
கண் கவர் சரிகைக் கரைகொள் ரவிக்கை
வண்ணம் பலவில் வாங்கிட வேண்டும்!
வருடம் முழுதும் வர வேண்டாமா?
புருடன் என் சொல்லைப் பொருட் படுத்தானேல்,
நிராக் கலகம் செய்வன்; பண்டிகை
சிராய் அவனைச் செய்ய விடுவனோ?
பணமிலை யெனில், பின் பண்டிகை வருமோ?
உணவினும் உடையே உயர்ந்ததன்றோ?
வெளியினுரைப்பின் வெட்கக் கேடு!
எளிதில் விடுவனோ இனி என் கணவனை?

என்று ரொம்ப கார சாரத்துடன் கை வாய் கண் அபிநயங்களோடும் குதித்துக் குதித்துப் பேசினள். இத்தகைய புண்ணியவதியை மனைவியாகக் கொண்டு மகா பாடு படும் மகானுபாவன் யாவனோ என்று விகடன் என் மனதிற்குள்ளேயே பரிதபித்தபடி, சிறுவர்கள் கூடி விளையாடுகிற இடத்திற்குச் சென்றேன். அவர்களைப் பார்த்து என் நஞ்சான் குஞ்சான்களே! தீபாவளி வருகிறதே! உங்களுக்கெல்லாம் கொண்டாட்டம் தானே என்றேன். அதற்கு,

சிறுவர்கள்:—

வாவா விகடா! வந்தனம் விகடா!
பூ வாணங்கள் புது பட்டாசு
நிற மத்தாப்பு நிகழ் பண்டிகையில்
சிறப்போடு கொளுத்தச் சிரித்திடுவோமே!
புதிய சட்டைகள் போட்டுக்கொண்டு
அதிரசம் தோசை அப்பம் வடையுடன்
இட்டிலி உண்டை எல்லாம் தின்போம்!

திட்டவும் மாட்டார் தீபாவளியில்!
எங்கட்கு காசு இடுக்கண் உண்டோ?
எங்களப்பன் ஏற்கும் பா(டு) அதே!
என்று தீபாவளி எய்திடும் என்றே
இன்று முதலே எண்ணிடு கின்றோம்!

என்று ஆநந்தத்தோடும் கூறினார்கள்! ஆ! எந்தக் கவலையுமில்லாத இளம் பருவமிது என்று அவர்களுக்கு முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு விகடன் இன்னும் கொஞ்சம் தூரம் போனேன்! அங்கே எந்த உழைப்பும் வேலையுமில்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு வீட்டுத் தலைவன் கஷ்டப்பட்டுத் தேடிவரும் பணத்தில் நன்றாகக் கொழுக்கத்தின்றுகொண்டு ஊர் வம்புகள் அளக்கும் பாக்கியசாலிகளும் பாக்கியவதிகளும் எதிர்ப்படவே, விகடன் அவர்களையும் தீபாவளி சந்தோஷம் விசாரித்தேன். அதற்கு அந்த,

உட்கார்ந்து தின்பவர்கள்:—

இங்கே என்ன இன்பம் கண்டோம்?
எங்களிடத்தில் என்றும் மதிப்பிலை!
'நீரும் சோறும் நித்தம் கொட்டிடின்
தீரும் சுமை' என சிந்தித்துள்ளார்
வீட்டுத் தலைவர்; விகடா! நல்சாப்
பாட்டில் சுவையைப் பார்த்ததுண்டோ?
துணியை உடுப்பதில் சுகம் என் கண்டோம்?
பணிந்து நடந்தும் பரிவிலை என்றும்!
நடப்பன வெல்லாம் நடக்கவென்றே
கிடக்கிறோம்; துயரைக் கிளப்பிடுகின்றாய்!
எங்கட்(கு) என்னில் என்றும் அவர் கை
எங்கும் சுருங்கும்; எங்கள் எரிச்சல்
என்று தீரும்? இறைவன் கூலி
நன்றாயுணர என்(று) அவர்க்(கு) அளிப்பான்?
எமக்கெனத் தனிச்செல(வு) எது நடக்கிறது?
எமக்கினி பண்டிகை எப்படி போகுமோ?

என்பதாய் வெகு ஏக்கத்துடனும் ஆங்காரத்துடனும் பேசினார்கள்! நெற்றி வியர்வை நிலத்தில் வீழக் குடும்பத்துக்காக உழைக்கும் வீட்டுத் தலைவன் நான்கு முழத்து வேஷ்டியுடன், தெய்வமே! இன்று பொழுது எப்படிப் போகுமோவென்று சாந்த மனிதனாய் அடங்கி ஒரு மூலையில் கிடக்க, எந்தப் பாடுமே படாமல் சட்டவட்டமாய் வீட்டிலுட்கார்ந்துகொண்டு தின்று ஏப்பம்

ஒருவனுடைய நடையுடை பாவனை முதலிய குணாதிசயங்கள் இத்தன்மையனவென்று நாம் அறிந்து கொள்ளவேண்டுமானால், அவன் வளர்ந்த இடம் இத்தன்மையதென்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டுவது அவசியம்.

விடும் இந்த வெண்ணெய்வெட்டி வீரமணிகள் இப்படித் துள்ளுவதையும் வீட்டுக்காரனை நன்றிகெட்டு சபிப்பதையும் விகடன் பார்த்துச் சிரித்துவிட்டு, கடையின் வேலையாட்கள் குமாஸ்தாக்கள் இருக்கும் இடத்துக்குச் சென்று தீபாவளி வருகிறதே; உங்களின் சங்கதி என்ன என்றேன். அதற்கு அந்தத்

தொழிலாளர்கள்:—

பழங் காலத்தில் பணியாளர்க்கு
வழங்கும் பண்டிகை வரிசைகள் பலவே!
வருடத்தொரு நாள் வரு தீபாவளி
பெரு மகிழ்வூட்டும்; பேசும் இந்நாளில்
எல்லாம் போச்சு! நல் வழக்கங்கள்
எல்லாம் நின்றன! இவ் வருடத்தில்
என்ன செய்வாரோ எசமான ரெனப்
பன்னருங் கவலை படுகிறோம் விகடா!

என்றனர்! அவர்களையும் தாண்டிக்கொண்டு ஜவுளிக்கடைகள் பக்கமாய்ச் சென்று, ஓ! தீபாவளி உங்களுக்குப் பெரிய லாட்டரிச் சீட்டாயிற்றே! ஜவுளிக்கடைப் பொய்க்கு எதுவும் நிகர் கிடையாதே என்றேன். உற்சாகப் பெருக்கினால் வாய்ப் பக்கமும் அடிப்பக்கமுமாகச் சிரித்தபடியே அந்த,

ஜவுளிக் கடைக்காரர்கள்:—

பழய துணிகளைப் பக்குவ மொழிகள்
வழங்கி விற்றிடும் வழி செய்திடுவோம்;
புதிதாய் வந்த பொருளென மயக்கி
அதிகரித்த விலையதை சொல்லிடுவோம்;
எந்தத் துணியும் என்றும் சாயம்
நைந்திடா தென்றே நம்பச் சொல்வோம்;
ஒருவிலை என்றே உரைத்து கனத்த
பெருமோசங்கள் பேசிடுவோமே!
பட்ட கடனெலாம் பகர் தீபாவளி
கிட்டிடில் தீரும்; கிடைக்கும் இலாபம்!
ஜதை யொன்றுண்டோ? ஜவுளிக் கடையில்
நிதமும் வழங்கும் நிகரில் பொய்க்கே!

என்று சொல்லி, சிற்றுண்டி காபிகளும், பாக்கு பழம் வெற்றிலைகளும் வைத்து உபசாரம் செய்தார்கள். பிழைக்கும் வழி தெரிந்துகொண்ட புண்ணியர்கள் என்று அவர்களுக்கு விகடன் வாழ்த்து கூறிவிட்டு, எண்ணெய் வாணியச் செட்டியாரைப் பேட்டி கண்டுகொண்டேன். அந்த,

வாணியச் செட்டியார்:—

கடலை எண்ணெயைக் கலந்து 'சிறந்த
உடல் நலத்திற்கு உரிய நல்லெண்ணெய்'—

என்று கூறி ஏமாற்றிடுவோம்;
என்றும் பணமே எங்களின் தெய்வம்!
கலப்பறு வணிகம் கட்டி வந்திடுமோ?
சொலப்புகில் எங்கள் சொத்தாம் எண்ணெய்
இலதேல் தீபம் ஏது? தீபாவளி
நலமுறு பண்டிகை நடப்பதும் ஏதே?"

என்று ராகமாய் இழுத்துப் பாடினார்! அவருக்கு ஒரு சலாம் வரிசை போட்டு விட்டு, விகடன் தையற்காரப் பெரியார்களைக் காணச்சென்றேன். கத்தரிச் செங்கோலுடன் விளங்கிய,

தையற்காரர்கள்:—

துணியும் பணமும் சொகுசாய்ச் சேர்ப்பதும்
துணி எதுவாயினும் துண்டித்திடுவதும்
மிகுந் துணி எதையும் விழுங்கி விடுவதும்
பிகுவாய்ப் பேசும் பேரமும் விகடா!
திருநாளாகும் தீபாவளிக்கே!
வருடமொரு முறை வரும் அதிலேயே
எங்கள் பிழைப்பும் இனிது நடந்திடும்!
எங்கள் கவலையும் ஏகும் விகடா!

என்றனர். எத்தனை கஜம் துணி அதிகமாகத் தந்தாலுங்கூட அவ்வள வும் சரியாய்ப் போச்சுதென்று ஒரு ஊமைக் கணக்கு போட்டுக் காட்டி விழுங்கிவிடும் தையற்காரர்களின் சமர்த்துக்கு விகடன் சிரித்துக்கொண்டு, கனத்த கூட்டம் நிறைந்திருந்த பட்டாசுக்கடைப் பக்கம் போனேன். அவர் களையும் தீபாவளி சந்தோஷம் விசாரித்தேன். அதற்கு,

பட்டாசுக் கடைக்காரர்கள்:—

பட்டாசு கட்டில் பத்தில் ஒன்றே
பட்டென வெடிக்கும்; பழய கட்டுகள்
எல்லாம் புதியவை என்றே சிறுவரைச்
சொல்லால் மயக்கிச் சூதுகள் செய்வோம்!
பகலும் இரவும் பகட்டு வாணங்கள்
மிக நன்றாக விற்றிடும் விகடா!

என்றனர். இவர்களையும் கடந்துசென்று மளிகைக்கடைக்காரர்களைச் சந்தித்தேன்! தீபாவளியில் வியாபாரம் எப்படி என்றேன். அதற்கு,

---

அவதூறு பேசுவது தீதுதான். ஆனால், அப்படிப் பேசுவதே சிலருக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒருவனுடைய அந்தரங்கத்தை யறிந்து, அதை மற் றொருவனிடம் கூறி மானத்தைக் கெடுக்கும் சண்டாளனுக்கு நரகத்திலும் இடமிராது.

மளிகைக் கடைக்காரர்கள்:—

நாறிய வெல்லமும் நல்விலை போகும்;
கூறும் உளுந்து கோழுப்பு நெய் பருப்பு
அரிசி கடலையவை எல்லாமும்
பெரிதும் விற்கும்; பிழைப்பு பலர்க்கும்
செவ்விதில் தருவது தீபாவளியே!
எவ்விதில் அதனைப் புகழ்வேன் விகடா?

என்றனர். அதன்பின் தோப்புகள் பக்கமாகச் செல்லுகையில் கள்ளு சாராயக் கடைகளைக்கண்டு உள் நுழைந்தேன். நீயும் 'தண்ணி' போட வந்தாயா, வா, வா, விகடா என்று வாழ்த்து கூறினார்கள். அவர்களிடம் தீபாவளி நாளில் எப்படி வியாபாரம் என்றேன். அதற்கு,

மதுபானக் கடைக்காரர்கள்:—

கட்குட மெல்லாம் காலியாய் விடுமே!
பட்டை சாராயம் பலர் வாய் நிறையும்!
மதுரைவீரன் மனம் மகிழ்ந்திடுவான்!
புதிய உற்சாகப் பொழுதாய்க் கழியும்!
தாபம் தீர்க்கும் 'தண்ணி' போடாத
தீபாவளி ஒரு தீபாவளியோ?

என்றுரைத்துத் தா தை தோம் என்று ஆடினார்கள்! அதைப்பார்த்து விகடன் சிரித்துக்கொண்டு திரும்பி வருகையில், எதிரே காங்கிரஸின் பேரைக்கொண்டு பெரிய பதவியும் கனத்த லாபமும் அடைந்த வக்கீல் ஒருவரை வழியிலே சந்தித்தேன். அவரிடம் தீபாவளியைப்பற்றிக் கேட்க அந்த,

வக்கீல் பெரியார்:—

பெருவழக்கொன்று பேசக் கிடைத்தால்,
பொருள் மிக கிடைக்கும்; புகழ் தீபாவளி
செலவும் மிகவும் சிறப்பாய் நடக்கும்!
கலகம்—போய்கள்—களவோடு கொலைகள்
பகைமை—சண்டை—படுமோசங்கள்
வகையில் வழக்குகள் வரின் அதிர்ஷ்டமதே!

என்றார். மெத்த மெத்தப் படித்தவரான இவரது மனத்தின் கோணல்களுக்கு விகடன் ஒரு சிரிப்பு சிரித்து விட்டு காலடிகள் எடுத்து வைப்பதற்குள், போன தீபாவளிக்குப் புது மாப்பிள்ளைகளாயிருந்து மாமனார் வீட்டில்

நமது ஆசாரங்களிலிருக்கும் பல ஊழல்கள் திருந்துவதற்கு ஸ்திரீகளின் துணையிருந்தால் வெகு சீக்கிரம் நிறைவேறிவிடும். ஆனால், அந்த ஸ்திரீகள் போதிய அறிவும் விவேக விசாலமும் பெற்றிராவிடில் எவ்வாறு சாத்தியம்? ஸ்திரீகளின் அறியாமையான நிலைமையால் புருஷர் செய்யும் முயற்சிகள் முழுப்பலனையும் அடைவதில்லை.

விலாப்புடைக்கத்தின்று பாரி உடம்பாய் உப்பிவிட்டவர்களைக் கண்டு, இந்த வருஷத் தீபாவளிக்கும் மாமனார் வீட்டிற்குப் பிரயாணந்தானோ? உருசி கண்ட பூனை உறியைத் தாவுமே என்றேன்! அதற்கு அந்த,


மாப்பிள்ளைகள்:—

பல் வகைச் சிறப்பும் பாங்காய் நடப்பின்
இல்லாள் வீட்டுக்(கு) ஏகுவோம்; இன்றேல்,
இந்த தீபாவளிக்(கு) எங்கள் வீட்டில்
குந்திக்கொண்டு குளிர்ந்திடுவோமே!

என்றனர். விகடன் இவ்வளவையும் கேட்டுக்கொண்டு, இதுவரை சுற்றியது போதுமென்று விகடசபைக்குத் திரும்பி என் நஞ்சான் குஞ்சான்களின் முன்பு எல்லாவற்றையும் கொட்டிக் காட்டி விட்டேன். நீங்களும் கேட்டுக்கொள்ளுங்கள்! தீபாவளியிலே இந்தப் பழைய விகட தாதாவையும் கொஞ்சம் நினைத்துக்கொள்ளுங்கள். உங்களெல்லோருக்கும் தீபாவளி மங்களம் சொல்லுகிறேன்! ராம்! ராம்! சுபம்! சு!! சுவாஹா!!!

கண்ணிருந்தும் குருடு!

இது ஒரு கதை. அதாவது, ஒரு சிறிய பையன் தூர தேச யாத்திரை போயினான். எங்கே போனாலும் அங்கங்கே அவனுக்கு அதிசயமான ஏதேனும் ஒரு பொருள் புலப்பட்டுக்கொண்டேயிருந்தது. பிறகு மற்றொருவன் அதே வழியில் நடந்துபோனான். அவனுக்கு ஒரு அதிசயமும் அங்கே புலப்படவில்லையாம்! இது பழைய கதையாயினும், இதனால் விளங்கும் நீதி மாத்திரம் எப்பொழுதும் புதிதாகவேயிருக்கின்றது. நாம் எவ்வளவு விஷயங்களைக் கற்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நன்றாக நமது புத்தியும் மனமும் பண்படுத்தப்படுகின்றன; அவ்வளவுக்கவ்வளவு இவ்வுலகத்திலுள்ள பண்டங்கள், பொருள்கள், பிராணிகள், ஆண் பெண் ஆகிய மானிடர்கள் ஆகிய பலவற்றில் எதைக் கண்டாலும், அதில் இனிப்பும் அதிசயமும் உண்டாக்கத்தக்க புதுமைகள் பல தோன்றுகின்றன. மந்தபுத்தியுடையவர்களான மூடர்களும், அன்பும் ஒற்றுமையும் இல்லாதவர்களுமே எவ்விடத்திலிருந்தாலும் எந்த ஒரு அதிசயத்தையும் காணமாட்டார்கள். கண்டு இனிக்கவோ, ருசிக்கவோ மாட்டார்கள். அன்னோர் கண்ணிருந்தும் குருடர் போன்றவரே! பக்குவமற்றவரே!



தீபாவளியின் சிறப்பெல்லாம் அன்று போடுகிற மதுபானத்தால் தான் என்று மதுரைவீரன் கூறுகிறார்!

ஃ

கறி திண்டியில்லாத தீபாவளி சோபிக்காதென்று முப்பாட்டன் காலத்து வழக்கம் முணுமுணுக்கிறதாம்!

ஃ

பணக்காரர் பணமெல்லாம் தீபாவளியில் பாணமாகுமாம்! பையன்கள் பணமெல்லாம் வாணமாகுமாம்!

ஃ

தான் சாகும்போதே தன் கர்ம கிரியைகளுக்குப் பந்துக்களை அழைத்துப் பணத்தைப் பாழாக்காமல் வீட்டோடு செய்துகொள் என்று ஒருவர் தன் மகனுக்குச் சொல்லிப்போனாராம்!

ஃ

தீபாவளியில் தன் பெண்ணுக்கு எடுத்துத் தரும் ஆடைகளுக்குத் தக்கபடிதான் இனி வருங்காலத்தில் கணவன் வீட்டில் அவளது வாழ்வும், அணியும் ஆடையும் இருக்குமாம்!

ஃ

புருஷன் எத்தனை செலவிட்டாலும், தன் அந்தரங்க நாயகன் செலவிடுகிற அரைப்பணம் தான் அதிக மகிமையாகத் தோற்றுமாம்!

ஃ

எதிர்க்கும் மனைவியை நம்பி நகைகளைப் போட எப்போதுமே கணவனுக்குக் கவலை தானாம்!

எங்கும் பணத்துக்கு வெகு கஷ்டமென்று மற்றவர்களுக்குச் சொல்லிவிட்டுத் தன் செலவுகளை மட்டும் தாராளமாய் நடத்திக்கொள்ள வேண்டுமாம்!

ஃ

தீபாவளியின் இனாம் வசூலுக்குப் புறப்படுகிறவர்கள் தங்களுக்கு பணம் எவ்வளவு கிடைக்குமென்று இப்போதே கணக்கு போடுகிறார்களாம்!

ஃ

பந்துக்களின் மரணத்தால் தீபாவளி யில்லாதவர்களுக்குப் பணச் செலவு மிச்சந்தானாம்!

ஃ

கௌரீவிரத நோன்பின் தித்திப்பு அதிரசங்களுக்கு இப்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறதாம்!

ஃ

அரிசி ரூபாய்க்கு எழேகால் படியானாலும், வாழையிலை பெரியதாகக் காலணாவுக்குக் கிடைப்பது கஷ்டந் தானாம்!

ஃ

தானும் சிரிக்க, அவளும் புன்னகை தெரிவிக்க, அதுவே சம்மதி யடையாளமென்று எட்டிப் பிடிக்கத் தாவுகையில் விலகி வேற்றுமுகமாவது கூடாதாம்! அது பாவமாம்!

ஃ

ஆசையால் பிறரைத் தவிக்க விட்டவர்களுக்கு, அதன் பலன் உடனே காட்டி விடுமாம்!

ஃ

காந்தி தாதா இனி ஒரு வருஷத்துக்குச் சிறைபோக மாட்டாரென்று தெரிந்த விகடன், அவருக்குப் புலாவ் கிச்சடி விருந்துகள் செய்யப்போகிறானாம்!

திவ்யமான தீபாவளி நாள்!

அணி ஆடை புதியது(ம்), நீர் ஆடுதலும் பெருமகிழ்வே!
பிணியோர்க்(கு) அமவாசை பெரும் பீதி விளைத்திடுமே!
துணிவோடு செலவிட்டோர் துயர் கடனில் ஏங்குவரே!
பணியாரம் தோசை உணின், பறந்திடும் தீபாவளியே!

சென்றமாதம்

மகாத்மாவின் புது வழி:—

"இன்னம் இருக்கிறது தேருந்துள் சிங்காரம்" என்பதாய், மகாத்மா இப்பொழுது ஒரு புதிய பாதையைத் தொட்டுக்கொண்டார். "மகாத்மாக்களின் மனோ நிர்ணயத்தைச் சாமான்யர்கள் ஊகிப்பது கஷ்டமே" என்று சென்ற ஸஞ்சிகையில் நாம் சொன்னது போலவே இப்போது காரியமும் இருக்கிறது. மகாத்மா தம்மை சர்க்கார் விடுவித்திட்டாலும், அந்த ஒரு வருஷசிறையான அடுத்த வருஷம் ஆகஸ்டு மாதம் வரையில் தாம் சிறையில் இருப்பதாகவே பாவித்து, சட்ட மறுப்பு முதலியவற்றில் தலையிடாமல் ஹரிஜனப் பிரசாரம் ஒன்றில் மட்டுமே சிரத்தை கொண்டிருக்கப் போவதாகக் கூறிவிட்டார். மகாத்மாவினுடைய இத்தகைய சாந்த நிலை அநந்தமான சக்திகளை ஒன்றுபடத் திரட்டும் தன்மையில் உருக்கொள்வதாகவும் ஆகலாம்.

ஃ

பண்டித ஜவஹரிலாலின் மனோபாவம்:—

"இனம் இனத்தோடே, வேள்ளாடு தன்னோடே" என்பதைப் பண்டித ஜவஹரிலால் தமது நடத்தையில் காட்டி விட்டார். காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஆனே காங்கிரஸை மரண மூர்ச்சையாய்க் கிடக்கும்படி விட்டதை ஜவஹரிலால் 'அதுதான் சரி' என்கிறார். காங்கிரஸ் தனது கொள்கையை மாற்றிக்கொள்ளாது என்றும். அதன் லட்சியம் சித்தியடைவதற்கில்லாத வரையில் அது மூர்ச்சித்துக் கிடப்பதே கௌரவமென்றும் கூறுகிறார். சட்ட மறுப்பு சரியென்கிறார். இப்படியாக மஹாத்மாவின் கூட்டத்தோடே இவரும் சேர்ந்துகொள்கிறார்.

ஃ

பத்திரிகைகளின் மீது பழி:—

"இல்லையா இலை மறைவு, காய் மறைவு?" அப்படி மறைவாகப் போனால்தான், பத்திரிகைக்கு ஜாமீன் கேட்காத விதமாயும், தற்காலப் புதுச் சட்டங்களிலே அகப்பட்டுக் கொள்ளாத விதமாயும், பத்திரிகையை நடத்திக்கொண்டு, தங்களையும் பத்திரிகையையும் காப்பாற்றிக் கொள்ளலாமென்று பத்திரிகைகளை நடத்துவோர் நினைக்கிறார்கள். அந்த நினைப்புக்குத் தகுந்தபடி காங்கிரஸின் போக்குகளை அவர்கள் ஆதரிக்காமல் நழுவவிட்டுவிடும்படியும் வருகின்றது. காங்கிரஸின் அபிப்பிராயங்களைக் கண்டித்தெழுதும்படியும் சந்தர்ப்பம் நெருக்குகிறது. இவ்வாறெல்லாம் ஜாடையாகச் சென்றால்தான் பத்திரிகையும் பிழைத்திருந்து நடைபெறும். இதற்குப் பண்டித ஜவஹரிலால் வருந்தி, பத்திரிகைகள் காங்கிரஸைப்பற்றிக் கோணலான அபிப்பிராயம் கூறி எதிர்ப்பிரசாரம் செய்கின்றன என்று பழிக்கிறார். பழிப்பது அவர் வேலை! பத்திரிகைகளை

தெய்வபக்தி, பெற்றோரிடம் அன்புடைமை, சகோதர வாஞ்சை, சுற்றந் தழுவுதல், குருபக்தி, ராஜபக்தி, ஆசாரம், நல்லொழுக்கம் முதலியன தேய்பிறைத் திங்கள்போல நாளுக்குநாள் மலினமடைந்து வருகின்றன.

எதிலும் படாதபடி பக்குவமாய்க்கூடி யவரை விலக்கி நடத்திப்போக முயற்சிப்பது பத்திராசிரியர்களின் வேலை!!

ஃ

ஸ்ரீ அன்னிபெஸண்டம்மை காலமானார்:—

"இன்றைக்குச் செத்தால், நாளைக்கு இரண்டாம் நாள்" என்பதாய், அவ்வளவு சீக்கிரமாக மரணச செய்தியைத் தாண்டிக்கொண்டு நாட்கள் ஓடி விடுகின்றன. எங்கேயோ கடல் கடந்த வெளிநாடொன்றில் பிறந்த ஒரு பெண்மணி தூர நாட்டில் பிரவித்தியைப் பெற்றுப் புகழோங்கி வாழ்ந்து முடிந்த மனுஷ்ய சரித்திரத்தில் ஸ்ரீ அன்னிபிஸண்டும் சேர்ந்தவராகிறார். அவர் சென்னை அடையாற்றில் 20.9.33-ல் காலமானார். வருங்காலத்து இயேசு கிறிஸ்துவை ஜனங்களுக்குக் காட்டப் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார். இந்திய தேசத்தினர் பிற நாட்டினரிடத்து எத்துணை மதிப்பும் அன்பும் பாராட்டுகின்றன ரென்பதற்கு ஸ்ரீ அன்னிபிலண்டு ஒரு உதாரணமாவார். அவரது ஆங்கிலத் தினசரியான 'நியூ இந்தியா' வெகு பிரபலமாயிருந்ததும் ஒருகாலம்! அவரைக் காங்கிரஸ் அக்கிராஸனராக்கிப் போற்றியதும் ஒரு காலம்! சமயத்துக்குத் தக்கபடி அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு வேற்றுருவமாய் விடுகிற அவரது தன்மையைப் பொதுஜனங்கள் விரும்பாததே அவரது மதிப்பு குறைந்ததற்குக் காரணமாகும். இமயமலைக் கருகில் மஹாத்மாக்களின் ஆவிகள் வசித்து வருவதாக அடிக்கடி அவர் சொல்வது வழக்கம் அவரது அந்தியச் சடங்குகள் ஹிந்து மதானுசார ரீதியைப் பெரும்பான்மையும் தழுவி நடந்தேறினமை குறிப்பிடத்தக்கது. அவர் செய்த ஹிந்துமதப் பிரசாரத்தினாலும் நூல்களாலும் ஹிந்துக்கள் பெரும் பயனை யடைந்தன ரென்பதை மறுக்கமுடியாது. அம்மையாரின் ஜீவிய சரிதையை மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அம்மையாரைப் பாரத ஞாலம் என்றும் மறவாது.



தீபாவளி பண்டிகை.

தீபாவளி என்பது தீப-அவளி என்று இரண்டு ஸமஸ்கிருத வார்த்தைகள் சேர்ந்து உண்டாகியது. தீபம் என்றால் வெளிச்சம்; அவளி என்றால் வரிசை. தீபாவளி பண்டிகையன்று ஒவ்வொரு ஹிந்துவும் விடியற்காலை நான்கு மணிக்கு முன் எழுந்து சூரியோதயத்திற்கு முந்தி அப்பியங்கன ஸ்நானம் செய்து புது ஆடைகளை உடுப்பது வழக்கம். சூரியன் கிளம்புவதற்கு முன்பு ஸ்நானம் செய்துகொள்ளாவிட்டால், அன்று அந்த ஸ்நானத்தால் பெறக்கூடிய புண்ணியம் போய்விடுமாம். இப்பண்டிகையின் வரலாறு பாகவதத்தில் கூறியிருக்கிறது. பங்காளத்திற்குக் கிழக்கேயுள்ள ஜில்லாவும், அஸ்ஸாமின் மேல்பாகமுமான பிரக்ஜோடிஷா என்ற தேசத்தை ஆண்டுவந்த நரகாசுரனின் சரித்திர ஸம்பவம் தீபாவளியின் வரலாறாக விளங்குகிறது.

ஃ

தீபாவளி ஸ்நானத்தை ஹிந்துக்கள் கங்கா ஸ்நானத்திற்கு சமம் என்று நினைக்கிறார்கள். ஒருவர் மற்றொருவரைச் சந்தித்ததும் கங்கா ஸ்நானமாயிற்றா என்று பரஸ்பரம் கேட்டுக்கொள்வார்கள். சென்னை இராஜதானியிலுள்ள தமிழ், தெலுங்கு, கன்னடம் இப்பாஷைகளைப் பேசும் ஜில்லாக்களில் தீபாவளியைப் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். புது வஸ்திரம் கட்டும் நோன்பு என்றே அதற்குப் பெயர் வழங்குகிறது. நெருங்கிய பந்தத்துவமுள்ள தாயாதிகளின் வீட்டில் அசுபம் நேர்ந்துவிட்டால் அதிலிருந்து ஒரு வருஷத்துக்கிடையில் எந்தப் பண்டிகையையும் கொண்டாடுவதில்லை. தீபாவளியன்று மாமிசத்தையும் மதுபானத்தையும் உற்சாகமாகப் பலர் கையாடுகின்றனர்.

ஃ

தீபாவளியன்று பட்டாசு சுடுவதில் பெரும் பைத்தியம் இருந்துவருகிறது. இதை யறிந்தே ஆங்கில வியாபாரிகளும் சீனர்களும் பலவிதமான பட்டாசுகளைச் செய்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்துவிடுகிறார்கள். விடியற்காலம் மூன்று மணிக்கு நாகசுரம் வாசிப்பவர்கள் வீடு வீடாகச் சென்று வாசிப்பார்கள். அவர்கள் மறுநாட்காலையில் வெகுமதி பெற வருகிறார்கள். அன்று சேவகர்கள், தபாற்காரர்கள், மற்றும் பலவித வேலைக்காரர்கள் யாவரும் வெகுமதிக்காக வீடுகள்தோறும் செல்வார்கள். புது மாப்பிள்ளைத்தெய்வங்களை வரவழைக்கும் வீடுகளில் சகலவிதத்திலும் செலவுகள் அதிகமாகும். வட இந்தியாவிலும், சென்னையிலுள்ள குஜராத்தி ஜாதிகளிலும் தீபாவளி தினத்தன்று புதுக் கணக்கு ஆரம்பிப்பார்கள். சென்னையில் தீபாவளியன்று தீபம் வைக்கிற வழக்கமே

இல்லை. கார்த்திகையன்று தான் தீபங்கள் ஏற்றுகின்றனர். வட இந்தியா, பம்பாய், வங்காளம் இவ்விடங்களில் எங்கு பார்த்தாலும் தீப வரிசைகள் ஜொலித்துக்கொண்டிருக்கும். பார்ஸிகள் தங்கள் வீடுகளை பல்லாயிரம் ரூபாய் செலவழித்துத் தீபாவளியன்று காஸ் விளக்குகளால் அலங்கரிக்கிறார்கள். பம்பாயில் போய்ப் பார்த்தால் தீபாவளியின் பெருமை நன்கு விளங்கும். வங்காளத்தில் தீபாவளி ஸ்நானத்திற்கு முன்பு நித்திரைவிட்டெழுந்தவர்கள் கண்களை மூடியபடியே நடந்து சென்று வீட்டிற்குள் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடக்கும் ரூபாய்களையும், பவுன்களையும், ஆபரணங்களையும் கண்டு, அவற்றின் முன்பாகத்தான் முதன்முதல் கண்விழித்துப் பார்ப்பார்களாம். தீபாவளி தினத்தின்போது முதலில் தனலக்ஷ்மியின் எதிரில் கண் விழிக்கவேண்டுமென்பது அவ்விடத்திய ஸம்பிரதாயம்.

பிரபா

II

(349-ம் பக்கத் தொடர்ச்சி.)

விவாக தினம் காலையில் கதிரவன் ஒளிப்பொடு குணதிசை எழுந்தனன். அவனது பொன் கதிர்கள்பட்டு தரணீதலம் மஞ்சள் நிறமேறித் திகழ்ந்தது. வீட்டில் ஜொலித்துக்கொண்டிருந்த தீபங்கள் யாவும் அருணோதயத்தின் காலையொளியில் பிரகாசம் குன்றின. உதய காலத்துச் சீதளமான காற்று வடதிசையினின்று பொங்கி யெழுந்த புகையை பச்சைப் பட்டாடை விரித்தாற்போல் கிழக்குப்பக்கம் பரந்து கிடந்த வயல் நிலங்களெங்கும் பரவச் செய்தது. காக்கைகள் கூட்டங் கூட்டமாய்ப் பறந்துகொண்டும், மாட்டுத் தொழுவத்திலும், வேலிகளிலும், மரக் கிளைகளிலும் தங்கி உல்லாசமாய்க் கத்திக்கொண்டு மிருந்தன. கிரீசர் இரவு சற்றும் தூங்கவேயில்லை. அவர் சகல காரியங்களையும் மேற்போட்டுக்கொண்டு இங்குமங்கும் ஓடி ஓடிக் கட்டளையிட்டு மிரட்டியும் உருட்டியும் வேலை வாங்கிக்கொண்டிருந்தார். அவர் மனைவியோ கரை கடந்த சந்தோஷத்தினால் மதிமயங்கி ஆனந்தக் கூத்தாடினாள்.

ஃ

குறித்த நேரத்தில் ஆடவரும் மகளிரும் உயர்ந்த ஆடையணிகளால் தம்மை அலங்கரித்துக்கொண்டு திருமண வீட்டில் வந்து கூடினர். தேவ நிர்மிதமோவெனக் கண்டோர் ஐயுறும்படியாக இடப்பட்டிருந்த பேரற்புதமான பூப்பந்தலில் மணமகனும், உற்றார் உறவினரும் குழுமியிருந்தனர். ஆங்கு சந்தோஷ ஆரவாரமும், மேள தாளங்களின் இன்னொலியும் கடலலை போல் முழங்கிக்கொண்டிருந்தன. மணமேடையில் நறுமலர்களும், நிறைகுடம், தூபம், தீபம் முதலிய மங்களச் சின்னங்களும் காணப்பட்டன. சுருங்கச் சொல்லின், உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே பரவசப்படுத்தும் இரம்மியமான காட்சிகள் எங்கும் நிறைந்திருந்தன. இங்ஙனம் அழகு மிகுந்து தோன்றிய அத்திருமண வீட்டில் தோழியரிடையே நின்று மலர்ந்த முகத்தோடு உல்லாசமாய் சல்லாபித்துக்கொண்டும், தூயச் சுடர் முத்தினை நிகர்த்த பல்வரிசைகளை வெளியே சற்றுத் தெரியும்படியாகக் காட்டி இளநகை புரிந்துகொண்டுமிருந்த பேரழகு திகழும் பெண்ணணங்கான பத்மாவைச் சிறிதுநேரம் எவரும் கண்டிலர். அம்மெல்லியலாள் தன்னறையிலிருந்த ஒரு நிலைக்கண்ணாடி முன் நின்று ஆடையாபரணங்களால் தன்னை வெகு சிறப்பாக அலங்கரித்துக்கொண்

நீர் ரோகிகள் எந்தக் காரணத்தினால் தங்களுக்கு மூத்திரரோகம் நேரிட்டதென்று தங்களுடைய மனதைப் பரிசோதிக்கவேண்டும். தங்களுடைய அறிவீனமான தப்பிதத்தைக் கண்டுபிடித்ததின்மேல் அந்தக் கெடுதியான வழக்கத்தை முதலில் நிவர்த்திக்கவேண்டும்.

டிருந்தனள். சின்னேரத்திற்கெல்லாம அவள் அசைந்தாடும் பூங்கொடிபோல் மெல்லென அடிமேலடி வைத்து நடந்து வெளியேவர, ஆங்கு இருந்த பெண்மக்கள் யாவரும அவளது வசீகரமான அழகில்ஈடுபட்டுத் தம்மியல்பிழந்தனர். மறுகணம், தகதகவென்று திகழும் பொற்சரிகைப் பூக்கள் நிறைந்த உயர்தரப் பட்டுக் கச்சையால் பாரித்துப் பூரித்து விம்மிய மார்பிடங்களை மனோகரமாய் மறைத்து, செந்தளிர்—பட்டினால் மேனியை மூடி, வாரிமுடித்த காரிருட் கூந்தலில் நறுமலர்கள் சூடி, அஷ்டமி சந்திரனைப் பழித்த பொன்னிற நெற்றியில் கருஞ்சாந்து திலகம் தீட்டி, அழகுக் கழகு செய்துகொண்டிருந்த அந்நங்யர் திலகம் அருகிருந்தோர் அனைவரையும் விரிந்த கண்ணும் வியப்புமாய் விடுத்து தனது தந்தையின் கட்டளைக் கிணங்கி தென்புறம் சென்றனள். அச்சௌந்தரியக்கொடி மணப் பந்தலில் நுழைந்ததும், ஆடவர் நிறைந்த அப்பேரவை அவளது லாவண்ணிய விஷமேற்று அப்படியே ஸ்தம்பித்து விட்டதுபோல் அறவே அமைதியுற்றது. அங்கிருந்தார் பலரின் அலர்ந்த விழிகள் அசைவற்றன. அவர்கள் நெடுநேரம் சென்று தம் முணர்வை யடைந்தனராயினும் அவர்கள் மனமயக்கம் முற்றும் நீங்கவில்லை. அவ்வமயம் மணமகனான இராமேசர் கம்பீரமாய் நடந்துவந்து மணவனைமீது அமர்ந்தார். பத்மாவும் தோழியர் புடைசூழ அங்குவந்து அவரருகே தலைகுனிந்த வண்ணம் உட்கார்ந்து சற்றும் நாணமடையாது அவர் முகத்தைக் கடைக்கண்ணால் நோக்கிவிட்டுக் கற்சிலைபோல் அசைவற்றிருந்தாள். இராமேசர் பேரானந்தக் கடலில் மூழ்கித் தம்மையே முற்றிலும் மறந்தவரானார். ஆனால், கருத்து விகாரமான அவர் உருவைக் கண்டதே அங்கு வந்திருந்தோர் முகமெல்லாம் வெட்கத்தால் சிவந்தே போயின. பேரின்ப சாகரத்தில் மூழ்கிய இராமேசர் மனதில் தம் குறைகளொன்றும் படவில்லை. அவர் திரண்ட செல்வக்குவியலில் மூழ்கி சிறந்து விளங்கினார்.

ஃ

மனோகரன் சற்று தூரத்தில் விலகி நின்றுகொண்டிருந்தான். பத்மா மணமேடையை அடைந்த போது அவனது இதயதாபம் பன்மடங்கு அதிகரித்தது. அதற்குமேல் அவனால் பொறுக்கக் கூடவில்லை. அவன் கைகளால் தன் நெஞ்சை அழுத்திக்கொண்டு நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிதுடித்து அப்பால் விரைந்தேகினான். ஆகவே, பத்மாவின் கூரிய பார்வையில் மனோகரனின் நிழல்கூடப் படவில்லை. அவன் நிர்ஜனமான பிரதேசத்தை யடைந்து வெறுமையை நோக்கிக் கொண்டு மரம்போல் அசைவற்று நின்றான். அவன் சிவந்த கண்களினின்றும் அடிக்கடி நீர் வடிந்தது. மணவறையினின் றெழுந்த சந்தோஷ ஆரவாரமும், வாத்தியங்களின் இன்னொலியும் அவன் காது செவிடுபடும்படி முழங்கின. சொல்லுக்கடங்கா வேதனையோடு மார்பின் மீது கைகளை வைத்து நடுநடுங்கிக் கொண்டிருந்த அச்சுந்தர வடிவினன் பின் வருமாறு உள்ளக் கிளர்ச்சியோடும் கூவி உரைத்தனன்:—

ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றுவிட்டு அநேகர் குணமடையாமல் சுதேச வைத்தியர்களிடம் திரும்புவதுதான் அதிகமாயிருக்கிறது. பொதுவாக ஆஸ்பத்திரிகளில் உக்கிரகமான வியாதிக்குக்கூட உயர்ந்த மருந்துகள் தரப்படுவது அபூர்வம்.

"அந்தோ! சகிக்கவொண்ணாத அநீதி நடைபெறுகின்றதே! திரிலோக சுந்தரியான பத்மா! உனது பேரொளி மேவிய என் இதயம் எத்தனை இனிய பாடல்கள் பாடின! உள்ளச் சுடரொளியாய் மின்னிய நின் காதலால் பூரித்துப் புளகாங்கிதமுற்ற என்னுள்ளம் இப்போது வெறுமையாய் கருத்திருண்டு விட்டதே. இதோ என் இதயம் சுட்டவிழ்ப்பட்டு எல்லையற்ற அந்தகாரக் கடலினுள் மெல்ல மெல்ல அமிழ்கின்றதே!........." என்று கலங்கினின்றான்.

ஃ

இராமேசர் முகூர்த்த நேரம் நெருங்கியதும் மாங்கல்யத்தைக் கையிலெடுத்தார். அதே நிமிஷத்தில் அவரது தந்தையின் இளைய மனைவியான மாற்றாந்தாய்க் காலமானதாகவும். உடனே வருமாறும் அவசரத் தந்தியொன்று வந்து அவர் கையில் கொடுக்கப்பட்டது. இராமேசர் தமது மாற்றாந்தாயினிடத்து விசேஷித்த அன்பைக் கொண்டிருந்தவர். இராமேசரின் அன்னை இரண்டு வயது குழந்தைப் பிராயத்தில் அவரை விட்டுப்போக, அதன்பின் அவரது தந்தை இரண்டாந்தாரமாக விவாகம் செய்துகொள்ள, அந்த மாற்றாந்தாயிடமே இராமேசர் வளர்ந்து பெரிய மனிதனானவர். அந்த அம்மைக்குக் குழந்தைகள் இல்லாததால் எல்லா சொத்துக்களும் இவரையே சேர்ந்தது. இவர் மறு விவாகத்திற்குப் பிரயத்தனம் செய்து பிரபாவை மணக்க நினைத்ததை அவரது மாற்றாந்தாய் ஒப்பாமல், வீணாக ஒரு சிறுமியின் வாழ்நாளைக் கெடுப்பது பாவமென்று நற்புத்தி கூறினார். அதற்கு இராமேசர் இணங்காததால், தான் அந்த விவாகத்திற்கு இருப்பதில்லையெனக் கூறித் தனது தாய்வீட்டுக்குச் சென்றுவிட்டாள். அங்கு சென்ற தினம் முதலாக வியாதிப்படுக்கையிற் கிடக்கும்படியாயிற்று. இராமேசரும் இரண்டு தடவைகளில் அங்கு போய்த் தமது மாற்றாந்தாயைக்கண்டு வணங்கித் தக்க வைத்திய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்திருந்தார். எதிர்பாராத விதமாக மாற்றாந்தாய் இறந்ததாகத் தந்தி கிடைக்கவே, தம் கையில் எடுத்த மாங்கல்யத்தைக் கீழேவைத்துவிட்டுக்கண்ணீர் பெருகநின்று, அப்பொழுதே புறப்படுவதற்குச் சித்தமானார். விவாகப் பிரயத்தனங்கள் யாவும் நிறுத்தப்பட்டுப் போயின. கிரீசரின் வியாகூலத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

ஃ

பதினைந்து தினங்கட்குப் பிறகு இராமேசர் தமது மாற்றாந்தாயின் அந்தியக்கிரியைகளை முடித்துக் கொண்டு கிரீசரிடம் வந்து சேர்ந்தார். பத்மாவும் அவள் தாயும் கிரீசரும் இனி தமது மாளிகைக்கே வந்துவிட வேண்டுமென்றும், மூன்று மாதங்கள் பொறுத்துத் தமது மாளிகையிலேயே விவாகத்திற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்வதாயும் இராமேசர் கூறினார். கிரீசரும் அதை ஒரு மகா பாக்கியம்போல் ஏற்றுக்

சில பிராமணர்களுக்குத் தங்கள் ஜெபத்தில் மதிப்பு இருப்பதில்லையென்று ஒருவர் கூறுகிறார். இவ்விதமே சில கோயில் குருக்களுக்கும் கோயிலிலுள்ள விக்கிரகத்தினிடம் மதிப்பு இருப்பதில்லையாம். அதிகம் பழகிவிட்ட காரணத்தால் சில பெண்கள் தங்கள் கணவனின் மேன்மையை அலக்ஷியம் செய்து மதிக்காது போவதுபோலவே இந்த சங்கதியையும் கொள்ளலாம்.

கொண்டார். அவ்விதமே இரண்டு தினங்கட்குப் பிறகு யாவரும் புறப்பட்டு மோட்டாரில் இராமேசரின் மாளிகையைச் சேர்ந்தனர். அழகு வாய்ந்த மனோகரன் கட்டிடத்தின் தாழ்வாரத்தில் சித்தாக்கிரார்த்தனாய் நின்றுகொண்டிருந்தான். அவன் முகம் வாடியிருந்ததெனினும், அவனது இயற்கையான அழகு எப்போதும்போல் கம்பீரமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மனோகரன் உள்ளடக்கிய விசாரத்தோடும் இராமேசரை வந்து வணங்கினான். அவர் இளநகை செய்து தலையசைத்தார். மனோகரனைக் கண்டதும் பத்மாவின் கண்கள் பிரகாசித்தன. மனத்தெழுந்த உணர்ச்சிப் பெருக்கால் அவள் மேனி ஆடிக்காற்றில் ஆலிலைபோல் அசைந்தது. எனினும், அவள் மனோகரனின் கண்களைக் கூர்ந்துநோக்கிப் புன்னகை புரிந்தாள். தெய்வம் என் பங்கிலிருந்து விவாகம் நடக்கவொட்டாமற் காத்தது. அவ்விதம் காக்குமென்றே தைரியமாய் எதற்கும் துணிந்து புன்னகைதோன்ற நடித்து வந்தேன். விஷயம் எல்லைமீறி இராமேசர் மாங்கல்யத்தை என் கழுத்தில் கட்டும்படி நேர்ந்திருந்தால், அதற்கு முன்னதாகவே அதை நான் தடுத்து விட்டு மணவறையைவிட்டு எழுந்து விடுவதென்றுத் தீர்மானமாயிருந்தேன். நல்ல காலமாய்த் தந்தி வந்து தடுத்து என்னைக் காப்பாற்றிவிட்டது. அங்கு அவ்விபத்தில் காப்பாற்றிய கடவுள் இங்கு இந்த மாளிகையில் ஏதேனும் அசந்தர்ப்பம் நேருமானால் இதையும் விலக்கி என்னை இரக்ஷிப்பார் என்பதே எனது திடமான நம்பிக்கை எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். மறுபடியும் மனோகரனைக் காதலுடனும் நோக்கிப் புன்னகை கூர்ந்தாள். அவளது செவ்விய அதரத்தில் தவழ்ந்த அதி மனோகரமான அந்த மந்தஹாஸம் இளைஞனின் பொங்கியெழுந்த இதயசாகரத்தில் மின்னல்போல் பாய்ந்து அளவற்ற அலைகளை எழுப்பி அதிர்ச்சியை விளைத்தவாறு கீழ்நோக்கிச் சென்றது. அவன் பத்மாவை நோக்கித் தனது புன்னகையைத் தெரிவிக்க எவ்வளவோ முயன்றும், அவனுக்கிருந்த ஆற்றொணாத் துயரத்தால் அங்ஙனம் செய்யக்கூடவில்லை.

(தொடரும்.)

T. S. சங்கரலிங்கம்பிள்ளை.

[நமது நண்பராகிய ஸ்ரீமான் T. S. சங்கரலிங்கம் பிள்ளையவர்கட்குச் சென்ற ஆவணி மாதத்தில் விவாகம் நடந்தேறியமைக்கு நமது மகிழ்ச்சியும் ஆசியும் தெரிவிக்கின்றோம். ஆர்வத்துடனும் இல்லறம் வளர்த்துச் செல்வ மக்கட்பேறு திவ்ய ஸத்கீர்த்தியைத் தாங்கி மேன்மேலும் ஓங்குமாறு ஸர்வலோக சரண்யனைப் பிரார்த்திக்கின்றோம்.—ப—ர்.]

விவாக காலங்களில் கௌரவமாய்ப் புஷ்ப தாம்பூலாதிகளைக் கொடுத்து உபசரிக்கின்றனர். ஒருவர் வீட்டுக்கு மற்றொருவர் வந்தாலும் தாம்பூலாதிகளால் ஸன்மானிக்கிறார்கள். இது ஆதிகால முதல் ஸம்பிரதாயங்களாய் நிலைத்திருக்கின்றன. ஜனங்கள் இவ்விஷயத்தில் ஒரேவித ஆசாரணையைக் கைப்பற்றி வருகின்றனர். ஒருவர்க்குத் தாம்பூலம் கொடுத்து மற்றொருவருக்குக் கொடாவிடில் தங்களை அவமரியாதை செய்தனரென்று கோபங்கொள்வதால், பூர்வீக ஏற்பாடுகளில் நமக்கு எவ்வளவு மதிப்பிருக்கின்றனவென்று அறியலாம். நமது ஆசாரங்களில் ஒவ்வொன்றுக்கும் பிரமாணங்களுண்டு.

கலகப்பிரிய கணபதி சாஸ்திரிகள்.



"இந்தக் கணபதி சாஸ்திரிகளின் பிராயச்சித்த அநியாயம் ரொம்பவும் வளர்ந்து போய்விட்டது. எந்தச் சிறு தவறுதலுக்கும் தங்கத்தைக் கொண்டேதான் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார். கடைசியில் அந்தத் தங்கம் அவருக்கே தானமாகவும் போகிறது. இந்த வழியில் நல்ல பணம் தேடிவிட்டு, இப்போது ஐயாயிரத்துக்கு லேவாதேவியும் செய்துகொண்டிருக்கிறார். மேலையூர் கிராமத்தில் இவர் வைத்தது சட்டம்! எப்படியோ ஒரு கலகம் வளர்த்து, அதில் ஒருவரின் பெயரைக் கெடுத்து, அந்த மனுஷ்யர் பிராயச்சித்தம் செய்துகொண்டா லொழிய பந்தி போஜனத்துக்கு சேர்க்கக்கூடாதென்று சாஸ்திரப் பிரமாணங்களைக் கொட்டுகிறார். இவருடைய வாய்க்குப் பயந்து பிராயச்சித்தம் செய்து கொண்டாகவேண்டி யிருக்கிறது" என்று ராமசாமி ஐயர் ஆற்றோரத்தில் விஸ்வநாத ஐயருடன் பேசிக்கொண்டிருந்தார்.

ஃ



அந்த சமயம் அந்தப் பக்கமாய் ஒரு வெள்ளைப் பன்றியைத் துரத்திக் கொண்டு நாலைந்து பிராமணச் சிறுவர்கள் ஓடிவந்தனர். அந்தப் பன்றி அவ்வூருக்கருகில் குடியிருக்கும் ஒரு ஆங்கில உத்தியோகஸ்தருக்குச் சொந்தம். அது சீமைப் பன்றி. அதைச் சிறுவர்கள் பிடித்துக் கட்டிவிட்டு அதன் பாலைக் கறந்து அங்கு கிடந்த சிறு செத்தைகளை விறகாய்த் தீ மூட்டிக் காய்ச்சிக் குடித்துக் கொண்டாட்டம் போட்டனர். இதைப் பார்க்கப் பலரும் கூடிவிட்டனர். இதிலிருந்து கணபதி சாஸ்திரிகளை ஆழம் பார்க்கவேண்டுமென்று ராமசாமி ஐயர் தீர்மானித்தவராய் விஸ்வநாதய்யரோடும் இன்னும் சில பிராமணர்களோடும் கணபதி சாஸ்திரிகளின் வீட்டிற்குச் சென்றார்.

ஃ

சிலர் தங்களின் தந்திரோபாயங்களை நினைத்துக்கொண்டு பூரிப்பர். அந்தோ! அந்தத் தந்திரங்களின் காரணமாகப் பிறர் மனத்தை எத்தனைப் பொய்கள் கூறி ஏமாற்றிப் புண்படுத்துகிறோமென்பதை இவர்கள் உணர்வதில்லை.

கணபதி சாஸ்திரிகள் தனக்கு ஏதோ வரும்படி கிடைத்ததென்று மகிழ்வுடன் இவர்களை வரவேற்றார். இராமசாமி ஐயர் ஆற்றங்கரையில் பிராமணச் சிறுவர்கள் வெள்ளைப் பன்றியின் பாலைக் குடித்த கதையை வேடிக்கையாகப் பேசி அதைச் சாதாரண சங்கதிபோல் கூறினார். அதைக் கேட்ட கணபதி சாஸ்திரிகள் "அடடா! எவ்வளவு பெரிய அக்கிரமம் நடந்து விட்டது! இதை ஏதோ ஒரு வேடிக்கைச் சங்கதியாகவல்லவோ சொல்லுகிறீர்கள்! இந்த அக்கிரமம் உண்டா? ஸத்குலப் பிராமணன் சீமை வெள்ளைப் பன்றியைத் தொட்டாலும் மகா தோஷமான தீட்டாயிற்றே! இன்னும் அந்தப் பாலை இந்தச் சிறுவர்கள் கறத்து குடிப்பதும் வேறு! ஐயோ! குடி கெட்டுப் போயிற்றே! இனி அவர்களை வீட்டுக்குள் சேர்க்கக்கூடாதே" என்று ஆரவாரமாப் பேச்சுகளைக் கொட்டினார்.

ஃ

இராமசாமி ஐயர்:—நாங்கள் இது குழந்தைகளின் ஏதோ சின்னஞ் சிறு விளையாட்டு என்றல்லவா நினைத்துவிட்டோம். தாங்கள் பெரிய தோஷமாகச் சொல்கிறீர்களே! லக்ஷ்மான் லக்ஷ்மண ஐயரின் ஐந்து வயது பையன் கோபாலன்தான் முதலில் பன்றியின் பாலைச் சாப்பிட்டானும்! அவனோடு மற்ற சிறுவர்களும் சேர்ந்துகொண்டு குடித்தார்களாம். ஊராரெல்லாம் வேடிக்கையாகப் பார்த்த சங்கதிதான். அது பெரிய தோஷமென்றும் எங்களுக்குத் தெரிந்திருந்தால் அப்போதே தடுத்திருப்போம். சரி! என்னவோ நடந்துவிட்டது. சிறுபயல்கள் சங்கதி. ஏதோ சாதாரணமாக ஒரு பிராயச்சித்தம் செய்துவிடுவோம்.

கணபதி சாஸ்திரிகள்:—அதென்ன அப்படி சாமான்யமாகச் சொல்லி விட்டீர்கள்? அடடா! லக்ஷ்மண ஐயரின் குமாரனும் இதில் சேர்ந்துகொண்டானு? லக்ஷ்மண ஐயரவர்கள் வைதீக சிரேஷ்டத்துக்கு இப்படியா புத்திரன் பிறக்கவேண்டும்? என் குமாரனு யிருந்திருந்தால் இந்தத் தோஷத்துக்குக் கொன்று போட்டிருப்பேன்! இதற்கு சாஸ்திரங்களில் பிராயச்சித்தமே கிடையாதே! ரௌரவாதி நரகத்தில்தான் பையனின் பிதா சேரும்படி யிருக்கிறது. அட அநியாயமே! பிராமண ஜன்மம் எடுத்தும் இப்படித் தோஷ காரியங்களைச் செய்வதா?

இராமசாமி ஐயர்:—சரி எப்படியோ விஷமம் நடந்துவிட்டது அதற்குப் பரிகாரம் சொல்லுங்கள்.

கணபதி சாஸ்திரிகள்:—பரிகாரமா கேட்கிறீர்கள்? அதைச் சொல்ல எனக்குத் தேகம் நடுங்குகிறதே! சிவசிவா! இப்படியும் சண்டாளத் தோஷம் வரலாமோ?

இராமசாமி ஐயர்:—எவ்வளவ செலவானலும் சரி, செய்வது செய்யத் தானே வேண்டும். சாஸ்திரத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்.

கணபதி சாஸ்திரி:—சாஸ்திரத்தையா கேட்கிறீர்கள்? பாலைக் குடித்தவர்களின் நாக்கை அறுத்துவிடும்படியல்லவோ சொல்லியிருக்கிறது. என் குமாரன் அப்படிச் செய்திருந்தால் நான் அவன் நாக்கை யறுத்தே தீருவேன்.

ராமசாமி ஐயர்:—ஐயோ! பெரிய கஷ்டத்தில் லக்ஷ்மண ஐயர் சிக்கிக் கொண்டாரே! நாக்கை யறுக்கிற சங்கதி முடியுமா? போலீஸார் வந்து கைது செய்வார்கள். அது நடத்த முடியாதது. வேறு பிராயச்சித்தம் ஏதாவது சொல்லுங்கள்.

கணபதி சாஸ்திரிகள்:—வேறென்ன சொல்லட்டும். சாஸ்திரத்தி லுள்ளதைச் சொன்னேன். அது முடியாதென்கிறீர்கள். தங்கத்தினுல் ஒரு மனுஷப் பொம்மை செய்து, அதற்கு நீண்ட நாக்கை வைத்து, அதை அறுத்தெறிந்து அதை ஒரு ஸத்குலப் பிராம்மணனுக்குத் தானம் செய்து, பத்து பிராமணர்களுக்கு அன்னமிட்டால் இந்தத் தோஷம் நிவர்த்தியாகும்.

ராமசாமி ஐயர்:—தங்கம் இப்போது விலை அதிகம். வெள்ளியில் செய்துவிடலாமா?

கணபதி சாஸ்திரி:—வெள்ளியிலா? கூடவே கூடாது. முதலில் இந்த தோஷத்திற்குப் பிராயச்சித்தமே கிடையாது. சிறுவர்களை ஊருக்கு வெளியில் துரத்திவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கு மனம் சம்மதிக்காதே என்றுதான் மிகவும் சிரமப்பட்டு யோசித்துத் தங்கத்தில் செய்யச் சொன்னேன். தாங்கள் வெள்ளியில், செம்பு, பித்தளையில் என்று ஆரம்பிக்கிறீர்கள். சாஸ்திரமா? என்ன விளையாட்டா? காலம் கலிகால மாய்ப் போச்சுது. சாஸ்திரங்களுக்கு மதிப்பே காணோம்!

"சரி, லக்ஷ்மணய்யருடன் கலந்து ஆலோசித்துவிட்டு வருகிறோம்" என்று இராமசாமி ஐயர் எழுந்தார். "ஆலோசிப்பதென்ன? தங்கத்தை விட்டு வேறே சங்கதியில் செய்கிற பேச்சே வேண்டாம்" என்று கணபதி சாஸ்திரிகள் பலமாக வற்புறுத்திச் சொல்லி அனுப்பினுர்.

ஃ



கணபதி சாஸ்திரிகள் தனக்கு நல்ல வருமானம் ஏற்பட்டதென்ற சந்தோஷத்துடன் வீட்டுக்குள் செல்வதற்குக் கதவை அவசரத்துடன் திறக்கவே, அங்கு இவ்வளவு நேரமாக மறைந்திருந்து கேட்ட அவர் மனைவி பர்வதாம்பிகையின்மீது கதவு மோதி நசுக்கியது. உடனே பர்வதம் பர்வதாகாரமாய்ச் சீறிப் "பாழாய்ப்போன பிராமணு! மெதுவாய்க் கதவைத் திறந்தாலென்ன கேடு?" என்று நிந்தித்து நின்றுள். சாஸ்திரியார் நடுநடுங்கிச் சமாதானப்படுத்தி இந்த ஸ்வர்ணதானம் கிடைத்ததும் அதில் நகை செய்து போடுவதாகக் கூறினுர்.

ஃ

சற்று நேரத்திற்குப் பிறகு இராமசாமி ஐயர் லக்ஷ்மண ஐயருடனும் வேறு சில முக்கியஸ்தர்களுடனும் திரும்பிவந்து சேர்ந்து, "சாஸ்திரிகளே! ஒரு சங்கதி சொல்லவேண்டி யிருக்கிறது" என்றுர். அதற்கு சாஸ்திரிகள்

'தங்கத்துக்குப் பதிலாக வேறொன்று செய்கிற சங்கதி, குறைக்கிற விஷயம் கூடவே கூடாது" என்றார். "அது இருக்கட்டும்; லக்ஷ்மண ஐயரின் குமாரனோடு தங்களின் குமாரனும் சேர்ந்துகொண்டேதான் வெள்ளைப் பன்றியின் பாலைக் குடித்தானும், மற்ற சிறுவர்களைவிட அவனே அதிகம் சாப்பிட்டானும். பன்றியை வேறே நக்கிப் பார்த்தானும்" என்றார். சாஸ்திரிகள் கோபத்துடன் "விளையாட்டாகப் பேசவேண்டாம். என் குமாரனை இதில் சேர்க்காதீர்கள். அவன் இப்படிப்பட்ட தோஷ காரியங்களைச் செய்யமாட்டான்" என்றார். இராமசாமி ஐயர் விடவேயில்லை. பல சாக்ஷிகளைக்கொண்டு நன்றாக ருசுப்படுத்திவிட்டார். சாஸ்திரிகள் ஸஞ்சலத்தோடு 'பையன் வரட்டும். விசாரிப்போம்" என்றார். "விசாரிப்பதென்ன? அவன் பன்றிப் பாலைக் குடித்தது நிச்சயமே" என்று இராமசாமி ஐயர் அழுத்தமாய்ப் பேசி, ஊராரின் குற்றங்களென்றால் தங்கப் பிராயச்சித்தத்தில் துள்ளுகிறது; தன் சங்கதி யென்றால் "விசாரிப்போம்" என்று ராகம் இழுக்கிறதோ சபாஷ்" என்று குத்திச் சொன்னார். சாஸ்திரிகள் தனக்கு வரவேண்டியிருந்த லாபம் போயிற்றே என்ற துக்கத்துடன், வீட்டிற்குள் நுழைந்து தமது மனைவியை எங்கே அந்த நீசப்பயல்?" என்று வினவினார். அதற்கு அவர் மனைவி "அந்த அதிகாரத்தை அடக்கிக்கொண்டு பேசும்; என்னமோ குழந்தை! அறியாமல் செய்திருப்பான், அவனுந்தான் பன்றிப் பாலைச் சாப்பிட்டானும்! அதற்கு நாக்கை யறுக்கப் போகிறீரோ? எங்கே செய்யும் பார்க்கலாம்! ஜெயில் கொட்டடி வேணுமென்கிறதா?" என்று கடுகடுத்து வார்த்தைகளைக் கொட்டினாள். சாஸ்திரியார் இதேதடா இழவு என்று பெட்டிப் பாம்புபோல் அடங்கித் திண்ணைக்கு மறுபடியும் வந்து உட்கார்ந்தார். ராமசாமி ஐயர் "தங்கள் பத்தினியாரை விசாரித்தாயிற்றா?" என்று குத்தலாய்க் கேட்டார். சாஸ்தியார் வாடிய முகத்துடன், "நாளையதினம் கும்பகோணம் போய் கங்காதர தீக்ஷிதரவர்களைக் கண்டு சாஸ்திரங்களை ஆராய்ந்துவந்து சொல்லுகிறேன்; தீக்ஷிதரவர்களின் பிரக்யாதி தங்களெல்லோருக்கும் தெரிந்திருக்குமே?" என்றார்.

ஃ



நான்கு தினங்களுக்குப் பிறகு கும்பகோணத்திலிருந்தும் கணபதி சாஸ்திரிகள் திரும்பி வந்தார். ராமசாமி ஐயரும் லக்ஷ்மண ஐயரும் மற்றவர்களும் சூழ்ந்துகொண்டு சங்கராச்சாரியார் மடம் கங்காதர தீக்ஷிதரவர்கள் என்ன சொன்னார் என்று கேட்டனர். கணபதி சாஸ்திரிகள் தீக்ஷிதரவர்கட்குத் தெரியாத சாஸ்திர பரிசிலனையா? அவர் எல்லாம் ஆராய்ந்து மனுதர்ம சாஸ்திரத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்துக் காண்பித்தார். அதற்குத் தமிழில் எழுதி வந்திருக்கிறேன், பார்த்துக் கொள்ளுங்கள்" என்று உரைத்து, ஒரு கடிதத்துண்டை இராமசாமி ஐயரின் கையில் கொடுத்தார். அதில் பின்வருமாறு இருந்தது:—

"வெள்ளையாம் பன்றியாயின், வெள்ளியின் கிழமையாயின்
கள்ளமாய் அதனின் பாலைகறந்திட்ட சிறுவர்கூடி
சுள்ளிகள் போட்டுக் காய்ச்சிச் சுடுகையோ டருந்தினரேல்
மேலாவே பாவம் நீங்கும் மேல்மனு மொழிந்திட்டாரே!"

பாட்டை வாசித்ததும் இராமசாமி ஐயரும் மற்றவர்களும் கணபதி சாஸ்திரிகளின் தந்திர சமர்த்திற்கு வியப்புற்றவர்களாய் மௌனமாக வீட்டிற்குத் திரும்பினார்கள். எவ்விதமாவது கணபதி சாஸ்திரிகளை மடக்கி யடக்கி விட்டோம் என்று இராமசாமி ஐயர் திருப்திகொண்டார். இவ்வித சாஸ்திரிகள்தான் இன்றைய ஹிந்து தர்மத்துக்கும் மதத்துக்கும் அதிகார ஸ்தானத்தை வகித்திருக்கிறார்கள்!

ஆபத்தான மனிதர்கள்.

நமக்கு மிக்க அநுகூலராய் நிற்பதாக நடித்து நமது காரியங்கள் ஒவ்வொன்றையும் தெரிந்துகொண்டு உள்ளுக்குப் பலவிதமாக எண்ணமிடுவோர் சிலருண்டு. நம்மைப்பற்றிப் பிறர் கேவலமாய்ப் பேசநேர்ந்த காலத்தில் இந்த மகானுபாவர்கள் நம்மிடமிருந்து அறிந்த விஷயங்களை யெல்லாம் அந்த சமயம் கொட்டி அவர்களுடன் சேர்ந்துகொள்வார்கள். சிலருக்குத் தம்வீட்டில் எவர்மீதும் பிரீதிவிஸ்வாசமிருப்பதில்லை. எவர் செத்தாலும், நோயுற்றாலும் கவலைப்படுவதேயில்லை. ஆயினும், தாங்களென்னவோ மற்றவர்களைவிட விசேஷ அக்கரை கொண்டதுபோல சாம்பிராணித்தூபம் போடுவதில் எல்லோரையும் விட முன்னதாக முந்திக்கொள்வார்கள். இவ்விதம் சிரத்தைப் படுகிற குணத்தோடேயே என்றைக்கும் இருந்துவிடக் கூடாதா? நடிப்பும் வேஷமும் வெகு நேரத்துக்கு நிலைக்குமா? மறு தினத்திலேயே முந்திய சிரத்தை நடிப்பு யாவும் தொலைந்து பெரிய கலகக்காரர்களாகி விடுவார்கள். ஒருவனுடைய நற்பெயரிலும் பிழைப்பிலுங்கூட மண்ணைவாரிப் போடக்கூடிய வழிகளைச் செய்துவிடுவார்கள். இவர்களின் வார்த்தைகள் எவரையும் மயக்கிவிடும். இத்தகையோரைத் தெரிந்து விரோதமின்றி ஒதுங்கிகொண்டு எச்சரிக்கையுடனிருப்பது நன்று.

ரயில்வே ஸ்டேஷன்கள் பெரிய கட்டிடங்களாக இருப்பினும், அங்கு ரயில் வண்டிகள் ஓடிக்கொண்டிராவிடில் அக்கட்டிடங்களுக்கு மதிப்பிராது. ஜனங்களும் அங்கு நெருங்கார். அதுபோல், எத்தனை நட்பு இருப்பினும் கடிதப் போக்குவரத் தில்லாவிடில் அந்த நேசம் பாழடைந்துவிடும்.

கருப்பனின் அதிர்ஷ்டம்

"ஜெகதிசா! எனக்கு இந்தக் கோடலியைக் கொடுத்துக் கட்டை வெட்டி பிழைக்கும்படி என் தலையில் எழுதிப் பிறக்க வைத்தாயே; ஒரு நாளைக்கெல்லாம் கஷ்டப்பட்டால் இரண்டணு அல்லது இரண்டரை அணு அகப்படுகிறது; உலகில் எத்தனையோபேர் என்னென்னவோ புது வாழ்விலே சுகமாயிருக்க, நான் இப்படிக் கஷ்டப்படுகிறேனே" என்று துக்கித்துக்கொண்டே விறகு வெட்டிக்கொண்டிருந்தான் கருப்பன்.

ஃ



திடீரென்று இடியும் மின்னலும் தோன்றி பெருமழை பெய்ய ஆரம்பித்தது. உடனே கருப்பன் மரத்தை விட்டிறங்கி ஓடினுன். வழியில் ஒரு புது மாளிகை யிருக்கக் கண்டு பிரமித்து, மழைக்குத் தங்கலாமென்று உள்ளே சென்று பார்க்க, பளிச்சென்று ஒரு பிரகாசம் தோன்றிற்று. கண்களை மூடிக் கசக்கிக்கொண்டு மறுபடியும் பார்த்தான். இரண்டு யௌவன புருஷர்கள் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர். அதில் ஒருவர் நகைகளால் ஜொலித்துக்கொண்டும், இன்னொருவர் அழகால் பிரகாசித்துக்கொண்டும் இருந்தார்கள். நகை போட்டிருந்தவர் பக்கத்தில் போய் நின்றுன் கருப்பன். அவர்கள் இருவரும் இவனைக் கவனியாமல், ஆடிக்கொண்டிருந்தார்கள். ஆட்டம் முடிந்ததும் இவனை நிமிர்ந்து பார்த்து, நீ யார்? எங்கே வந்தாய்? இந்தா இதை வாங்கிக்கொண்டு போய்ப் பிழைத்துக்கொள், என்று ஒரு சிறிய மாணிக்கத்தைக் கொடுத்தார் நகை யணிந்திருந்தவர்.

ஃ

அதை நம் கருப்பன் வாங்கித் தனக்குள் (இதென்ன நெருப்பு மாதிரி இருக்கிறது, அடுப்பு பத்த வைக்க நம்ப பெண்டாட்டி பக்கத்து வீட்டுக்கு நெருப்புக்குப் போகிற வேலையில்லே.—ஆனுல், நம்ம கையில் நெருப்பு பத்திக்கவில்லையே. இது என்னமோ தெரியல்லே—இத்தெ கொடுத்தாரே—அவரு போட்டிருக்கிற நகையில் ஒண்ணு கொடுக்கக் கூடாதா என்று நினைத்துக் கொண்டே நடந்தான். வழியில் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டி யிருந்தது. அங்கே அந்த மாணிக்கத்தைக்கையில் வைத்துத் திறப்பதும் மூடுவதுமா யிருந்தபோது நழுவி ஆற்றில் விழுந்து அடித்துக் கொண்டு போயிற்று. ஐயோ! போய்விட்டதே என்று தண்ணீரில் முழுகித் தேடிப் பார்த்தான். அகப்படவில்லை. பிறகு வீட்டுக்கு வந்தான். அவன் மனைவி-

கருப்பாயி:—என்ன இன்னிக்கி இவ்வளவு நேரம் பொறத்து வந்தியே?

கருப்பன்:—ஆமாண்டி, மழை பேய்ஞ்சுதே தெரியாதா? காட்டிலே கட்டையெல்லாம் நனேஞ்சி போச்சு.

கருப்பாயி:—மழை எங்கே பேய்ஞ்சுது. புளுகினாலும் பொருந்தப் புளுக வேணும்.

கருப்பன்:—போடி, காட்டி லே பேய்ஞ்சுது. அங்கே புது வீடு ஒன்று இருந்தது. உள்ளே போனேன். ஒருத்தர் கல்லு ஒண்ணு கொடுத்தாரு, அது என்னமா எறிஞ்சுது தெரியுமா?

கருப்பாயி:—எங்கே காட்டு பார்க்கலாம்.

கருப்பன்:—அது வருகிற வழியிலே தண்ணிலே விழுந்து விட்டது.

கருப்பாயி:—சரி, சரி, அது சுத்தப் பொய், எங்கே துட்டு?

கருப்பன்:—துட்டு எது, காசு எது கட்டெ வெட்டலேயே.

கருப்பாயி:—இண்ணிக்கு பட்டினி தானு என்று இருவரும் சிவ சிவ என்று படுத்துக்கொண்டனர்.

ஃ



பத்து தினங்கள் சென்று கடவுளை நினைத்து வருந்திக்கொண்டே கட்டை வெட்டினான். விடாமழை பிடிக்கவே ஓடினான் புது மாளிகையண்டை! நகைகள் அணிந்திருந்தவர் பக்கம் நின்றான். அவர் ஆடி முடிந்ததும் எங்கே வந்தாய்? என்று கேட்டு, இந்தா என்று ஒரு காசிமாலையைக் கழற்றிக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு இதைப் பத்திரமாய்க் கொண்டுபோக வேணுமென்று தன் கழுத்தில் போட்டான். கருப்பன், தலை பெரிதா யிருந்ததால் அது தலையிலேயே நின்றுவிட்டது. தன் இடுப்பிலிருந்த கந்தையை எடுத்து அதன்மேல் சுற்றிக்கொண்டு நடந்தான். கந்தலின் சந்தில் காசிமாலை பளபளென்று தெரிந்துகொண்டிருக்கவே, ஒரு கருடன் வந்து அவன் கந்தலுடன் காசிமாலையை அடித்துக்கொண்டு போய்விட்டது. ஐயோ சாமி! இதுவும் போய்விட்டதா! என் பெண்டாட்டி திட்டுவாளே என்ன சொல்லப்போகிறேனென்று வருந்திக்கொண்டே வீடு வந்துசேர்ந்தான். எங்கே பணம்? அரிசி வாங்கிக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கணும், பசி யெடுக்கிறது என்றாள் கருப்பி. காசிமாலை சங்கதியைத்தெரிவித்தான் கருப்பன். அடா பாவி! இதெங்கடா கற்றாய் என்று திட்டினாள். அன்று பொழுது பட்டினியிலேயே போயிற்று.

ஃ

சில நாட்கள் சென்றன. காட்டில் விறகு வெட்டியபடியே கருப்பன் தெய்வத்தை நொந்து அழுதான். உடனே மழை பொழியவே சந்தோஷமாய் ஓடினான். புது மாளிகை அன்றும் காணப்பட்டது. ஆபரணலங்காரத்துடன் பிரகாசித்தவர் பக்கமே நின்றான். அவர் கடைசியில் பார்த்து, சவரன்கள் நிறைந்த பை ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

வெகு சந்தோஷத்துடன் அதைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டு வீடு வந்தான். தன் மனைவியைக் காண வில்லை. அடுப்பைக் கிளறி அந்த சாம்பலில் பையைப் புதைத்துவிட்டு வெளியே போனான். உடனே கருப்பாயி வந்தாள், மூன்றாவது வீட்டு முத்தாயி வந்து நெருப்பு கேட்டாள். அதற்குக் கருப்பாயி நீயே அடுப்பைப் போய் பார்த்துக்கொள்ளென, அவள் சாம்பலைக் கிளறிப் பையை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். பிறகு கருப்பன் வந்து அடுப்பைக் கிளறினான். காணவில்லை. ஐயோ சிவனே! கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லையே என்று மனைவியைக் கேட்டான். ஆஹா! இந்த வித்தையைக் காட்டிவிட்டு எய்த்துவிடலாமென்று வந்தாயா? பாவியைக் கட்டிக்கொண்டு எத்தனை காலைக்குப் பட்டினி யிருப்பதென்று புலம்பிவிட்டு, தெய்வமே என்று படுத்துக்கொண்டாள்.

ஃ

சில வாரங்களுக்குப் பிறகு கருப்பன் காட்டில் சுவாமியை நினைத்து துக்கப்பட, உடனே மழையும் பெய்தது. அழகில் ஜொலிப்பவர் பக்கத்தில் நின்றான். ஆட்டம் முடிந்ததும் அவர் வெறுப்புடன் பார்த்து என் சும்மா வருகிறாய், இந்தா என்று ஒரு கால் ரூபாயைக் கொடுத்தார். அதை அவன் வாங்கிவந்து கருப்பாயினிடம் கொடுக்க, அவள் அதில் 0-1-6வுக்கு அரிசியும், 0-2-0வுக்கு ஒரு பெரிய மீனும், 0-0-6வுக்கு மிளகாய் உப்பு புளியும் வாங்கிவந்து சாதம் வடித்துவிட்டு மீனை அறுத்தாள். அதின் வயிற்றில் மாணிக்கம் இருந்தது. அதைக் கருப்பனிடம் காட்ட, இதாண்டி, முதல் நான் அவர் கொடுத்த கல், என்றான். பிறகு இலை கிள்ளிவரப் பக்கத்தில் இருந்த மரத்தின்மேல் ஏறினான். அதின் உச்சியில் கருடன் கூடு கட்டி இருந்தது. அதில் பளபளவென்று காசிமாலை தெரியவே, அடி கருப்பாயி!



திருடி அகப்பட்டுக்கினா! திருடி அகப்பட்டுக்கினா! என்று உரத்துக் கத்தவே, மூன்றாவது வீட்டு முத்தாயி தான் பை எடுத்து வந்தது தெரிந்து, நம்மைத்தான் சொல்லுகிறானென்று சவரன் பையைக் கொண்டுவந்து, நான் விளையாட்டுக்கு வைத்திருந்தேன் இந்தா பை என்று கொடுத்துவிட்டாள். மாணிக்கமும், காசிமாலையும், சவரன் பையும், அவர் கொடுத்த கால் ரூபாயினால் வந்ததென்று ஆனந்தம் பொங்கி, கஞ்சி குடித்துவந்த கருப்பனும் கருப்பாயியும், அன்று இலை தைத்து, சாதம் சாப்பிட்டார்கள். மறுநாள் அந்த மாணிக்கத்தைக் கொண்டு போய் அந்த ஊர் அரசனிடம் கொடுத்து வெகுமதி பெற்று, கட்டை வெட்டும் தொழிலை விட்டுவிட்டு, க்ஷேமமாய் வீடும் வாசலுமாய், நகையும் நட்டுமாய், கருப்பண்ணசாமியாரும், கருப்பாம்பிகை அம்மாளுமாய் வாழ்ந்து வந்தனர். அதிர்ஷ்டம் வருதற்கும் ஒரு நேரமுண்டு.

R. கோமளவல்லி அம்மாள்.

மீசை முறுக்கிய பட்டாணி.

இந்தியாவின் வடமேற்கு எல்லை மாகாணத்திலே பட்டாணிஎன்ற ஓர் இனத்தினர் எப்பொழுதும் நீண்ட தாடிகளையும், மாஜி கெய்ஸரைப்போல் முறுக்கிவிட்ட மீசையையும் வைத்திருப்பது வழக்கம். அந்தப் பட்டாணியர்கள் ஆண்மைத்தனத்தோடு கூடிய மீசையை வைத்துக்கொள்ளவேண்டியதுதான் தங்களது உரிமையென்று நினைத்துக்கொண்டிருப்பதும் வழக்கம். ஒரு நாள் நீண்டு உயரமாக வளர்ந்த ஒரு பட்டாணி பெஷாவர் என்ற நகரத்தின் கடைத்தெரு வழியாய் முறுக்கிய மீசையோடும் இன்னும் தனது நீண்ட தாடியின் வளமையைப் பற்றிப் பெருமை கொண்டும் வெகு கர்வத்துடன் சென்றுகொண்டிருந்தான்.

ஃ

அவ்வழியே குள்ளனான பாணியன் ஒருவன் தனது கடையில் உட்கார்ந்துகொண்டு, பட்டாணி மாதிரி முறுக்கிய மீசையுடன் இருப்பதை அவன் கண்டான். அப்பட்டாணி உடனே அவன் கடைக்கு எதிரில் நின்றுகொண்டு "அடே! குள்ளா! ஒரு கேவலமான பாணியன் வீரனான பட்டாணி மாதிரி மீசையை முறுக்கிக் கொண்டிருக்கிறதா?" என்று கூவினான். அப்பாணியன் "நான் வைத்திருக்கும் மீசையோ எனக்குச் சொந்தம்: அந்த மீசையை நான் எவ்வாறாகவேனும் வைத்துக் கொண்டிருப்பேன்; அதைக் கேட்பதற்கு நீ யார்?" என்று பதில் சொன்னான்.



ஃ

பட்டாணிக்குக் கோபம் பொங்கிற்று. தனது கையினால் தனது கத்தியைத் தொட்டு, "அப்படியானால் உயிர்போகும் வரையில் நாம் இருவரும் சண்டை போட்டே தீரவேண்டும்" என்றான்.

பாணியன் "எதற்காக? என்று கேட்டான்.—"ஏனென்றால் நீ மீசை வைத்திருப்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன். நீ அம்மீசையை ஒன்று எடுத்து விடவேண்டும்; அல்லது நம்மில் இருவராவது, அல்லது நம்மில் ஒருவராவது இறக்கும் வரையில் சண்டைபோட்டே தீரவேண்டும்." என்று பட்டாணி கர்ஜித்தான்.

பாணியன் சற்று யோசித்து அப்பால் மிக்க சாந்தமாய் "உனக்குப் பெண்டாட்டி பிள்ளைகள் உண்டென்றே நினைக்கிறேன்"—என்றான். பட்

டாணி "எனக்கு நான்கு மனைவிகளும் எழு குழந்தைகளும் தான் இருக்கிறார்கள்" என்று இயம்பினன். பாணியன் தனக்குள்ளே தான் சொல்லிக்கொள்வதுபோல் "எனக்கு ஒரு மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள்; நமக்குள் யார் கொல்லப்பட்டாலும் வீட்டிலுள்ளவர்களுக்குத் துக்கத்தையே உண்டு பண்ணும்; நம்மில் ஒருவர் இறந்த பிறகு நமது மனைவி மக்கள் அன்னுகாரத்திற்கு வழியின்றித் தவிக்க நேருமே யென்று யோசிக்கிறேன்" என்று பட்டாணியின் காதில் படும்படியாகக் கூறினன்.

—"ஓ! உனக்குள் பேசிக்கொண்டதை நானும் கேட்டுவிட்டேன். அதெல்லாம் சரிப்படாது. சண்டைக்குத் தயார் செய்" என்றான் பட்டாணி.

—"ஒன்று சரிப்படும். நாம் இருவரும் முதலில் நமக்குள்ள சொத்துக்களை நமது மனைவி மக்கள் பேருக்கு எழுதிப் பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்துவிடுவோம். அந்தப்படி உன் பத்திரத்தைக்கொண்டு வந்து காண்பித்தால், நானும் என் பத்திரம் ரிஜிஸ்தரானதை உனக்குக் காட்டிவிட்டு சண்டைக்குத் தயாராயிருக்கிறேன்" என்று பாணியன் புகன்றான்.

"அதற்கு சம்மதம்" என்று பட்டாணி சொல்லிவிட்டு, உடனே தன் கிராமத்திற்குச் சென்று தன் சொத்துக்களை யெல்லாம் நான்கு மனைவிகள் பேருக்கும் தனித்தனிப் பிரித்துப் பாகம் எற்படுத்த முயன்றான். இந்த பாகப் பிரிவினையில் பெரிய சண்டை எற்பட்டு, எனக்கு அவ்வளவு சொத்து போதாது என்று ஒவ்வொரு மனைவியும் வாதாடத் தொடங்கினள். இதில் பெருங்கலகம் தோன்றிக் கிராமத்தார்கள் ஒன்றுகூடி, இவ்வளவு அவசரமாகப் பாகம் பிரிக்கவேண்டிய காரணமென்னவென்று விசாரித்தபோது, மீசைச் சண்டையின் விவரத்தை அவர்கள் அறியும்படியாயிற்று. எல்லோரும் நகைத்தார்கள். பட்டாணியன் முரட்டுத்தனமாய் ஒரு வக்கிலைக் கொண்டு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்துவிட்டு, அந்தப் பத்திரத்துடனே பாணியனின் கடைக்கு வந்து சேர்ந்தான். இதன் முடிவை யறிவதற்குக் கிராம வாசிகளில் நால்வர் பட்டாணியோடுகூடவே வந்திருந்தனர்.

பாணியனே எந்த விசாரமுமில்லாமல் ஹல்வாவும் பூரியும் நன்றாகச் சாப்பிட்டு விட்டுக் கடையில் உட்கார்ந்து தன் குழந்தைகளோடு கொஞ்சி அணைத்துக்கொண்டு சந்தோஷமாயிருந்தான். பட்டாணி வந்து பார்க்கையில் பாணியன் தனது கடையில் எப்பொழுதும்போல் தனது முறுக்கிய மீசையோடு உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். பட்டாணி தனது ரிஜிஸ்தர் பத்திரத்தை எடுத்துக்காட்டி விட்டு, "மனைவி மக்கள் விசாரம் எனக்குத் தீர்ந்துவிட்டது. நான் இறந்து விட்டதற்காகத் தவிப்போர் எவருமில்லை. உன் பத்திரம் எங்கே? சண்டைக்குக் கிளம்பு" என்றான்.

பாணியன்:—எனக்குப் பத்திரம் எழுத இப்போது பிரியமில்லை. நீ சண்டைக்கு என்னை அழைக்கிறாயே? அது எதற்காக? என்று எதுவுமே அறியாதவன்போல் கேட்டான்.

பட்டாணி:—காரணம் உனக்குத்தான் தெரியுமே. நீ ஒரு பட்டாணியைப்போல் மீசையை முறுக்கிக் கொண்டிருக்கிறாயே; அதற்குத்தான் சண்டை போடுவது. இனி ஒரு நிமிஷமும் பொறுக்கமுடியாது என்று சொல்லி ஆத்திரப்பட்டான்.

பணியன்:—நமக்குள் சண்டை வேண்டாம். நான் என் மீசையை எடுத்து விடுகிறேன். நாம் சமாதாமாய்ப் போய்விடுவோம் என்றான்.



பாணியனும் உடனே தன் மீசையை ஒரு நாவிதனைக்கொண்டு எடுத்துவிட்டான். பட்டாணியும் திருப்தியடைந்து தன் கிராமத்திற்குத் திரும்பினான். இவனோடுகூட வந்தவர்கள் பட்டாணி வருவதற்கு முன்பே ஊர் சேர்ந்து எல்லா விவரங்களையும் பட்டாணியின் மனைவிகளுக்குத் தெரிவித்து, அவர்கள் நடக்கவேண்டிய விதத்தையும் கற்பித்து வைத்துவிட்டார்கள்.

ஃ

பட்டாணி வீட்டிற்கு வந்தபோது அவனது நான்கு மனைவிகள் சொத்துக்கள் யாவும் தங்களுக்குச் சொந்தமென்றும், அவனுக்குச் சோறுபோட முடியாதென்றும், அவனே சம்பாதித்துப் பிழைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி விட்டனர். கிராமத்தாரும் அவர்களின் பக்கம் சேர்ந்துகொண்டு பட்டாணியைத் துரத்தினர். பட்டாணி திகைத்து வெட்கி நின்றான். சிலர் மத்தியஸ்தம் செய்ய வந்து, அந்த பாணியனை அழைத்து வந்து எங்கள் முன்னிலையில் அவன் மீசையை எடுக்கும்படி எதிர்த்ததற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டால், எல்லாவற்றையும் சமாதானப்படுத்தி விடுகிறோமென்றனர்.

ஃ

பட்டாணியன் வாடிய முகத்துடன் பாணியனிடம் வந்து அவன் காலில் விழுந்து நடந்தவற்றைக் கூறினான். பாணியனும் இரக்கத்தோடு கிராமத்துக்குப் பட்டாணியுடன் வர, எல்லார் முன்னிலையில் பட்டாணி பாணியனிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு, இனி நீ மீசையை எப்போதும் போல் வைத்துக் கொள்வதில் எனக்கு ஆக்ஷேபனையில்லையென்றான்.

ஃ



சச்சரவும் தீர்ந்தது. பட்டாணிக்கும் தன் வீட்டில் வயிறு நிறையப் புசிப்பு கிடைத்து ஆநந்தமானான். ஊருக்குப் புலிபோல் இருப்பவர்களை வீட்டிலுள்ள பலஹீன பாண்டங்களான பெண்கள் அடக்கி விடுவது ஆச்சரியம்! இப்போது பட்டாணியும், பாணியனும் கை கோர்த்துக்கொண்டு அத்யந்த நண்பர்களாயிருக்கிறார்கள். குள்ள உருவினனான பாணியனின் மீசையும் இனி சீக்கிரம் முன்போல் வளர்ந்து விடலாம். பாணியன் உரலின்மேல் நின்றுகொண்டு பட்டாணியின் உயரத்துக்கு சரி சமமாய் நிற்பதைப் படத்திலே பார்த்துக் களி கூறுங்கள்.

"அமிர்த குணபோதினி"

ஸ்ரீமுக ஸ்ரீ ஸப்த்திய ஐப்பசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
அ-சி	17	1	செ	திர-21-42, உத்-35-49, திதிதுவயம் நரகசதுர்தசி ஸ்நானம் சிவராத்திரி.
ம-சி	18	2	புத	சசி-17-57. ஹஸ்-33-25, கேதார கௌரீவிரதம் தீபாவளி.
சி-அ	19	3	வியா	● 12-49, சித்-29-42.
சி	20	4	வெ	பிர-6-36, உப-53-1, ஸ்வா-25-2, விக்ரமசகம்.
சி	21	5	சனி	திரி-52-19, விசா-19-49, கௌரீ பூஜா.
ம	22	6	ஞா	சது-45-7, அநு-14-24, கரிநாள் நாகசதுர்த்தி.
சி	23	7	திங்	பஞ்-38-19. கேட்-9-12, விருச்சிகாயனம் 51-59.
அ-சி	24	8	செ	ஷஷ்-32-10, மூல-4-29, சூரஸம்ஹாரம்.
அ-சி	25	9	புத	ஸப்-26-51. பூரா-0-29, உப-56-57, கோபாஷ்டமி.
சி	26	10	வியா	அஷ்-22-25. ஶ்ரவ-55-22.
சி	27	11	வெ	நவ-19-0, அவி-54-15, திதி துவயம். கிருத யுகாதி.
அ-ம	28	12	சனி	தச-16-33, சத-54-3.
சி-அ	29	13	ஞா	ஏகா-15-4. பூட்-54-42, ஸர்வ ஏகாதசி.
சி	30	14	திங்	துவா-14-32. உட்-56-18, க்ஷீராப்தி பூஜா.
சி	31	15	செ	திர-14-53, ரே-58-50, வைகுண்ட சதுர்த்தசி.
ம	1	16	புத	சசி-16-13, அசு-60-0, தாத்திரீ பூஜா.
அ-சி	2	17	வியா	○ 18-31, அசு-2-18, அன்னாபிஷேகம் அதிதி.
சி	3	18	வெ	பிர-21-51, பர-6-45.
அ	4	19	சனி	துவி-26-14, கிரு-12-12.
சி	5	20	ஞா	திரி-31-33, ரோ-18-36, கரிநாள்.
அ-சி	6	21	திங்	சது-37-41; மிரு-25-46,
ம-சி	7	22	செ	பஞ்-44-15, ஆரு-33-21,
சி	8	23	புத	ஷஷ்-50-42, புந-41-0.
அ-சி	9	24	வியா	ஸப்-56-32; பூச-48-5.
ம	10	25	வெ	அஷ்-60-0, ஆயி-54-6.
அ-சி	11	26	சனி	அஷ்-1-7, மக-58-3.
சி	12	27	ஞா	நவ-3-55, பூர-60-0.
சி	13	28	திங்	தச 4-38; பூர-0-50, ஸ்மார்த்த ஏகாதசி ஏகாதசி திதி.
அ-சி	14	29	செ	ஏகா-3-12, உப-56-29, உத்-1-3, உப-58-11, வைஷ்ணவ ஏகாதசி; துவாதசிதிதி.
சி	15	30	புத	திர-54-9, சித்-55-30, விருச்சிகரவி 33-0, விருச்சிக திரயோதசிதிதி, விஷ்ணுபதி, பிரதோஷம்.

(ஐப்பசீ 5—16) (நவம்பர்)

ரா	15உ-க்கு ராசி		
சனி			கேது
சுக்	குஜ	ரவி 4	குரு

"அமிர்த குணபோதினி" பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.